REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2024 ஒக்டோபர் 18 வெள்ளிக்கிழமை
THINAKARAN 92 ANNIVERSARY
தினகரன்

வரு. 92 இல. 249 | Friday 18, October, 2024 | 28 பக்கங்கள் | 50/-

## ஆணைக்குழு அறிக்கைகளை



### தேவையான நேரத்தில் வெளியிடத் தயார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளை, தேவையான நேரத்தில் வெளியிடத் தயாரென ஊடகத்துறை அமைச்சர் 08

**மத்திய கிழக்கு மோதல் நிலைமை**

## இலங்கையரின் பாதுகாப்பில் ஜனாதிபதி உறுதி

மத்திய கிழக்கில் நிலவும் தற்போதைய மோதலின் தீவிரத்தால், குறிப்பாக லெபனானில் நெருக்கடியான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இப்பிராந்தியத்தில் கணிசமான எண்ணிக்கையிலான இலங்கையர், பணிபுரிவதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் பாதுகாப்பையும், நலனையும் உறுதிப்படுத்த ஏற்கனவே அந்நாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அறிவுறுத்தல்களும் இலங்கை தூதரகங்களால் வழங்கப்படுகின்றன. இந்நிலையில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வாழும் இலங்கையர் இந்த அறிவுறுத்தல்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, அதற்கேற்ப செயற்படுமாறு கோரப்படுகிறார்கள். 08

**சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்காக அம்பாறை, நுரைச்சோலை பகுதியில்**

# சவூதி வழங்கிய 500 வீடுகளும் விரைவில் பயனாளிகளிடம்

**பல வருடங்களின் பின் அதிரடி நடவடிக்கை**

அம்பாறை மாவட்ட நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகளையும், புனரமைத்து பயனாளிகளிடம் கையளிக்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தீர்மானித்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு 2009 ஆம் ஆண்டு சவூதி அரேபிய அரசாங்கத்தின் உதவியுடன் இந்த வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. எனினும், இதுவரை இவ்வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்படவில்லை.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலிட் ஹமூத் அல் கத்தானி அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடிய போது, இவ்வீடுகளை விரைவில் மக்களிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2011 ஜூனில், நிறைவடைந்தது. இலங்கைக்கான சவூதி அரேபியாவின் முன்னாள் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ், வீட்டுத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.



எனினும், நீதிமன்ற தீர்ப்பின்படி இவ்வீடுகளை பயனாளிகளிடம் கையளிப்பது, இடைநிறுத்தப்பட்டதாக தூதரகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார்.

500 வீடுகளைக் கொண்ட இவ்வீட்டுத் திட்டத்தில் பாடசாலை, சுப்பர் மார்க்கெட் வளாகம், மருத்துவமனை, பள்ளிவாசல் என்பவை உள்ளடங்கியுள்ளன.

இதனைப் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதே சவூதி அரேபியாவின் எதிர்பார்ப்பென்றும் தூதரகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர், பல்வேறு அரசாங்கங்கள் மற்றும் பல்வேறு அரச தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்ட போதும், அண்மையில் சவூதி 08



## 2026 FIFA உலகக் கிண்ணம்; தகுதிகாண் போட்டியில் இலங்கை தமிழர் அபார ஆட்டம்

அவுஸ்திரேலிய கால்பந்தாட்ட அணியில் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தமிழரான நிஷான் வேலுப்பிள்ளை, 2026 FIFA உலக கிண்ண தகுதிகாண் சுற்றுப் போட்டிகளில் சீனாவுக்கு எதிராக தனது சர்வதேச அறிமுகத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

போட்டியில் மாற்று வீரராக களமிறங்கி வெற்றிக்கு காரணமாக கோலை அடித்து. தனது சிறப்பான அறிமுகத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார். போட்டியில் அவுஸ்திரேலியா 3 – 1 என சீனாவை வென்றது. 23 வயதான நிஷான் வேலுப்பிள்ளை மெல்பேர்னைச் 08

## வாக்காளர் ஒருவருக்கு வேட்பாளர் செலவிடும் உச்ச தொகை நிர்ணயிப்பு




பொதுத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் எவ்வளவு தொகையை அதிகபட்சம் செலவிட வேண்டுமென்பதை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பிற்கு ஏற்ப, வாக்காளர் ஒருவருக்கு அதிகபட்சம் 114 ரூபாவை ஒரு வேட்பாளர் செலவிட வேண்டுமென வரம்பெல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்துக்கு இச்செலவினம் பொருந்தும் எனவும், இதன் பிரகாரம் கொழும்பு மாவட்டத்துக்கு மொத்தமாக 57,50,000 ரூபாவை வேட்பாளர் செலவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வன்னி மாவட்டத்தில், ஒரு வாக்காளருக்காக வேட்பாளர் ஒருவர் 82 ரூபாவை செலவிட வேண்டும் என்றும் வரம்பெல்லை விதிக்கப்பட்டுள்ளது. 08

**ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை**

## அரசாங்க இரகசியங்களை வெளியிடுவது கிரிமினல் குற்றம்

அரச இரகசியங்களை வெளியிடுவது கிரிமினல் குற்றம் என்பதால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கை வெளியிடப்படும்போது எங்கு சிக்கிக் கொள்ள நேரிடும் எனக் கூற முடியாது. இதன்காரணமாக அவைகளை வெளியிடுவதாயின் கம்மம்பில மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமென, ஜனாதிபதியின் சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும நேற்று (17) தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள், பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கைகள் என, பல உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கைகள் உள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை முப்பது வருடங்களுக்கு பகிரங்கப்படுத்த முடியாது. ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பான சட்டத்தின் பிரகாரம் அதனை ஜனாதிபதிக்கு மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் அறிக்கையோ அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களினால் நியமிக்கப்பட்ட அறிக்கையை 08



**கடற்கரையை சுத்தம் செய்யும் கடற்படையினர்**

இலங்கை கடற்படையின் பங்களிப்புடன் காலி கோட்டை மற்றும் அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தை அண்டியுள்ள கடற்கரை பகுதிகளை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அங்கு கடலரிப்பை தடுக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

## கோடிகளை வாங்கியவர்களே இன்று கோடிகள் பற்றி பேச்சு



கோடிகளை வாங்கிய அரசியல்வாதிகளே, இன்று கோடிகளைப் பற்றி பேசிக்கொண்டிருப்பதாக ஐக்கிய ஜன நாயகக் குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற வேட்பாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலையிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் கொள்கை அரசியலை முன்னெடுத்த பெருந்தலைவர் அமரர் சந்திரசேகரனின் மகள்தான் நான். மாறாக கோடிகளுக்கு விலைபோகும் நபர் கிடையாது.

2020 பொதுத் தேர்தலில் நான் சுயேச்சையாக களமிறங்கி இருந்தேன். அப்போதுகூட 08

## பிரதமராக இருந்த காலத்தில் 05 மில். அமெரிக்க டொலரை இலஞ்சமாக தர முயன்றனர்



பிரதமராக தாம், பதவி வகித்த காலத்தில் ஒருமுறை 05 மில்லியன் அமெரிக்க டொலர்களை தமக்கு இலஞ்சமாக வழங்க முயற்சித்ததாகவும், அதனை உடனடியாக தாம், நிராகரித்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பட்டயக் கணக்காளர்களின் 45 ஆவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் ஊழல்கள் குறித்து கருத்து தெரிவித்த அவர் குறிப்பிட்டதாவது:

நான், பிரதமராக இருந்த காலப்பகுதியிலே இச்சம்பவம் நடைபெற்றது. 08

## வலி. வடக்கு காணிகளை விடுவிப்பதில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாடு

*யாழ். விசேட நிருபர்*



வலிகாமம் வடக்கு பிரதேசத்திலுள்ள காணிகளை விடுவிப்பது குறித்து ஏற்கனவே ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளதாக, தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 08

## வட, கிழக்கில் ஊழலை ஒழிக்க முற்பட்டால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே எஞ்சும்



தென்னிலங்கையில் ஊழலை ஒழிப்பதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்தாலும் வட, கிழக்கில் ஊழல்வாதிகளை ஒழிக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு வடக்கிலும் நடவடிக்கை எடுத்தால், தமிழ் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்ந்து ஏனையோர் எல்லோரும் சிறை செல்ல நேரிடுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பு முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதில் கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். 08

## பட்டுச் சாரிகளுக்குள்ளிருந்து 01 கிலோ ஐஸ் போதை மீட்பு

**மலேஷியாவிலிருந்து வந்த இந்தியர் கைது**

பட்டுச் சாரிகளுக்குள் சுமார் ஒரு கிலோ ஐஸ் போதைப்பொருளை மறைத்து நாட்டுக்குள் கொண்டுவர முற்பட்ட, இந்திய பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேஷியாவிலிருந்து வந்த யூ.எல் 315 என்ற ஸ்ரீலங்கன் விமானத்தில் வந்த இந்தியப் பிரஜையின் பயணப் பொதிக்குள்ளிருந்த பட்டுச் சாரிகளுக்குள், 01 கிலோ ஐஸ் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்கத்துறை அதிகாரிகள் கண்டுபிடித்



துள்ளனர். இந்த போதைப்பொருளின் பெறுமதி சுமார் 25 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. 08

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 18 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.41
லுஹர் - 11.57
அஸர் - 03.16
மஃரிப் - 05.55
இஷா - 07.05

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஐப்பசி 02

ராகுகாலம் : காலை : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 09.15 - 10.15வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# போக்குவரத்து, வீதி அபிவிருத்தி அமைச்சுக்களின் மீளாய்வு கூட்டம்

## திட்டங்களை துரிதப்படுத்தவும் ஜனாதிபதி பணிப்பு



வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்றிறனுடன் முன்னெடுத்தல் என்பன கிராமிய பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ள வழிவகுக்குமென ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

அதேபோல் கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது பெறுகைச் செயற்பாடுகள் ஒழுங்குமுறைக்கமைய முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், ஒரு சிலருக்கு மாத்திரம் ஒப்பந்தங்கள் கிடைப்பதற்கு மாறாக பிரதேச மற்றும் கிராமிய மக்களுக்கு பலன்கள் கிடைக்கும் வகையில் வேலைத் திட்டங்களை தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தில் (16) நடைபெற்ற போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலிலேயே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக மீளாய்வு செய்யப்பட்டது. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம கடவத்தை பகுதியை நிர்மாணிப்பது குறித்தும் இதில் கவனம் செலுத்தப்பட்டது.

துறைமுகங்கள், விமான நிலையங்கள், பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானதென்றும், அதற்கான வேலைத் திட்டங்களை ஒழுங்குமுறைக்கமைய திட்டமிட்டால் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

ஏற்கனவே, ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில், பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

ரயில்வே ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் 08

# வரி ஏய்ப்புச் செய்த நிறுவனங்களுக்கு இறுதி நினைவூட்டல்

## வழக்குத் தொடர்வதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தி




பாரியளவில் வரி மோசடியை மேற்கொண்டதாகக் கூறப்படும் சுமார் எட்டு, தனியார் நிறுவனங்களுக்கு இறுதி நினைவூட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திருமதி செபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நிறுவனங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு, உரிய வரிகளை செலுத்துமாறு நினைவூட்டப்பட்டுள்ளன. அவ்வாறு செலுத்தாவிட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்திருந்ததாகவும் அவர் கூறினார்.

சட்ட விதிகளுக்கு அமைய குறிப்பிட்ட இந்த 08

# நிதி அதிகாரத்தை வைத்திருக்கும் பாராளுமன்றம் பலமாக இருக்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி விசேட அறிக்கை

வெளிநாட்டுக் கடனைச் செலுத்தும் நடவடிக்கையை 2028ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்கும் போது, அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பதினைந்து சதவீதமாக மாற்றும் சவால் புதிய அரசாங்கத்திற்கு ஏற்படுமென,முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று (17) விசேட அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிளவர் வீதியிலுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் இந்த அறிக்கையை அவர் வெளியிட்டார்.இங்கு கருத்து தெரிவித்த அவர்:

இந்த இலக்கை அடைவதற்கு , ஒவ்வொரு ஆண்டும் ஒரு சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும். இதற்காக அடுத்த பாராளுமன்றத்துக்கு பொறுப்புகளிலிருந்து தப்பியோடாத அணி தேவை.

நாட்டைக் கட்டியெழுப்ப தன்னுடன் இணைந்து செயற்பட்ட குழுவொன்று பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறது. நிதி அதிகாரத்தை வைத்திருக்கும் பாராளுமன்றம் பலமாக இருக்க வேண்டுமானால் இந்தக் குழு வெற்றிபெற வேண்டும்.

ஜனாதிபதியாக நாட்டை பொறுப்பேற்ற போது நாடு பெற்றக் கடனை செலுத்த முடியாமல் நாடு வங்குரோத்து நிலையில் காணப்பட்டது. அந்த நேரத்தில் எனது முதன்மை நோக்கம் கடன் நிலைத்தன்மையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது மற்றும் வங்குரோத்து நிலையை தவிர்ப்பது என்பவை மட்டுமே. இதற்காக அந்த இரண்டு வருடங்களில் சர்வதேச நாணய நிதியம், எமக்கு கடன் வழங்கிய பதினெட்டு 08

தினகரன்
THINAKARAN

# 92

வருடங்களுக்கு முன்

## தினகரன்

இன்று 18 ஒக்டோபர் 1932



## சிக்கனக் கமிஷன் சிபார்சுகள்

அரசாங்க ஏஜெண்டுகளுக்குப் பதிலாக நான்கு கமிஷனர்கள்

## நீதிபதிகள் நியமனம்

புதிய சம்பள விகிதங்கள் உடனே அமுலுக்கு வர வேண்டுமாம்

சிக்கனக்கமிஷன் முடிவான அறிக்கையை இப்பொழுது கவர்னரும் மந்திரி சபையாரும் பரிசீலனை செய்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

தங்கள் மத்தியகால அறிக்கையில் காணப்படும் புதிய சம்பள விகிதங்கள் உடனே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், எந்த உத்தியோகஸ்தர்கள் விஷயத்திலாவது புதிய சம்பளத்திற்கும் அதிக வித்தியாசம் காணப்படின் அவர்களுக்கு நஷ்டஈடாக ஒரு குறிப்பிட்ட விகிதப்படி விசேஷ படிச்செலவு கொடுக்கப்பட வேண்டுமென்றும் கமிஷனர்கள் சிபார்சு செய்திருக்கின்றார்களாம்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

# எவர் வெளியேறினாலும் திறமையாளர்களை அடையாளப்படுத்துவோம்

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு வருடங்களாக தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் களப்பணிகளைச் சிறப்புடன் செய்யும் வேட்பாளர் டொக்டர் ஹில்மி மஹ்ரூப்.எனவே,இம்முறை தேர்தலில் அமோக ஆதரவுடன் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென,அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட்பதியுதீன் தெரிவித்தார். கிண்ணியாவில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது; ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித்பிரேமதாசவை ஆதரிப்பதற்கு நாங்கள் 08

## அம்புலுவாவ கேபிள் கார் திட்டம்;

# தடைகள், தலையீடுகளை எவரும் ஏற்படுத்தக் கூடாது

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கம்பளை அம்புலுவாவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் நாட்டின் முதலாவது கேபள் கார் திட்டத்திற்கான நடவடிக்கைகளுக்கு, தடைகளை ஏற்படுத்தக் கூடாதென மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அந்தத் திட்டத்திற்கு தடைகளை ஏற்படுத்துவதோ அல்லது தலையீடு செய்வதையோ தவிர்க்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் கம்பளை பிரதேச செயலாளருக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிர்மாணத் திட்டத்தை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமானது, தமது திட்டத்திற்கு தடைகள் ஏற்படுத்தப்படுவதாக தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்னெடுக்கப்பட்ட போது, தனியார் நிறுவனம் தாக்கல் செய்துள்ள மனுவை பரிசீலனை செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார அமைச்சு

### மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கொழும்பு 08.

1. தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், பணிப்பாளர் சார்பாக கொழும்பு-08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| | நிர்மாண வேலைகள் | மதிப்பீட்டுக் கிரயம் (தற்செயலான செலவுகள் மற்றும் வரிகள் இன்றி) | நிர்மாணக் காலம் | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் | விலைக்கோரல் பிணை முறி |
|---|---|---|---|---|---|---|
| 1 | கூட்டாதன களஞ்சியசாலை மற்றும் விலங்குணவு உற்பத்திப் பிரிவில் உள்ள ஆட்டுப் பட்டியில் கூரை, கதவு மற்றும் ஜன்னல்களின் புதுப்பித்தல் வேலைகள் | ரூபா 11.79 மில்லியன் | 84 நாட்கள் | கட்டிடங்கள்/ C6 மற்றும் C5 | ரூபா 4,000.00 | ரூபா 180,000.00 |
| 2 | MRI பழைய கட்டிடத்தின் கூரை புதுப்பித்தல் வேலைகள் (MLT பாடசாலை பிரதேசம்) | ரூபா 20.57 மில்லியன் | 84 நாட்கள் | கட்டிடங்கள்/ C6 மற்றும் C5 | ரூபா 4,000.00 | ரூபா 308,000.00 |
| 3 | Entomology பாடசாலைக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | ரூபா 6.15 மில்லியன் | 35 நாட்கள் | கட்டிடங்கள்/ C7 மற்றும் C6 | ரூபா 2,000.00 | ரூபா 92,000.00 |

இந்த அமைவிடம் கொழும்பு-08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ளது

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாக இருப்பதனால் 04/2016(iii) / (iv) இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ள நிபந்தனைகளின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் விலைமனு ஆவணங்களை மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேற்கூறிய முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-10-18ஆம் திகதி முதல் (விலைமனுக்கள் வழங்க ஆரம்பிக்கும் நாள்) 2024-11-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரிடமிருந்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

5. விலைமனுக்களை நகல் பிரதிகள் சகிதம் 2024-11-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

6. விலைமனுக்கள் 91 நாட்கள் செல்லுபடியாகும்.

7. விலைக்கோரல் பிணை முறி விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி: 011-2693532**


# மலையக மக்களுக்கு நல்ல தீர்வை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதியை பலப்படுத்துவோம்

## வைத்திய அதிகாரி ஆறுமுகன் ஜெயராஜன்



நாட்டில் கடந்த 76 வருட காலமாக இலஞ்சம், ஊழல், சுரண்டல், வீண்விரயம் பாரியளவில் இடம்பெற்றுள்ளன. வரிப்பணம் சூறையாடப்பட்டுள்ளன. இதனைத் தடுத்து எமது மக்களுக்கு சுபிட்சமான வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எமது அவாவாகும்.

பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் திசைக் காட்டி சின்னத்தில் போட்டியிடும் வைத்திய அதிகாரி, ஆறுமுகன் ஜெயராஜன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையக மக்களுடைய பிரச்சினைகளை அவரிடம் சரியாக எடுத்துரைத்து மக்களுக்கு நல்ல தீர்வை பெற்றுக் கொடுப்பதே எனது நோக்கம்.

மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் சேவைகளை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு அரசியல் களத்தில் இறங்கி உள்ளேன். எங்களுடைய கட்சியில் வேறுபாடு ஒன்றுமில்லை. எல்லோரும் ஒற்றுமையாகவும் பலத்துடன் செயல்பட்டு வருகிறோம். எனது வெற்றிக்கு. அனைவரும் உறுதுணையாக உள்ளனர்.நிச்சயமாக ஊழல் செய்தவர்களை சட்டத்துக்கு முன் கட்டாயமாகக் கொண்டு வருவேன். அத்தோடு மக்கள் அனைவரும் ஊழல் செய்தவர்களை அறிந்து வைத்துள்ளனர். நாம் அவர்களை தண்டிப்பதை விட மக்களே, இம்முறைத் 08

# சீஷெல்ஸின் புதிய சட்ட மாஅதிபராக இலங்கையர் நியமனம்

சீஷெல்ஸின் புதிய சட்டமா அதிபராக இலங்கையைச் சேர்ந்த வின்சென்ட் பெரேரா, பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

சட்டமா அதிபராக அரச மாளிகையில் நேற்று முன்தினம் (16) அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதாக,

சீ ஷெல்ஸ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் பிறந்த வின்சென்ட் பெரேரா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப்பட்டம் பெற்று உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகவும் பணியாற்றியுள்ளார்.

அதேவேளை, சிங்கப்பூரில் உள்ள மத்தியஸ்த மையத்தில் அங்கீகாரம் பெற்ற மத்தியஸ்தராகவும் இவர், தகுதி பெற்றுள்ளார்.

# நாட்டின் பல பாகங்களிலும் 460 சீனப் பிரஜைகள் சிஐடியினரால் கைது



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையின்படி, கடந்த சில நாட்களுக்குள் நாட்டின் பல பகுதிகளிலிருந்து 460 க்கும் மேற்பட்ட சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்கள் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எவ்வாறாயினும், அவர்கள் நாட்டில் தங்கியிருந்து வேலை செய்தமை தொடர்பில், குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்குமுறை சட்டத்தின் கீழும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# உரமானியம் முறையாக வழங்கப்படுவதாக அறிவிப்பு

விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரமானியம், தற்போது முறையாக வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக் ஷ, இதுவரை 9.5 மில்லியன் ரூபா பெறுமதியான உரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

மொனராகலை பிரதேசத்திற்கு கள விஜயத்தை மேற்கொண்டதாக குறிப்பிட்ட அவர், அம்பாறை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உர மானியம் வழங்கப்படும் விதம் தொடர்பிலும் கவனம் செலுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும், விவசாய அமைச்சின் செயலாளர் விக்கிரமசிங்க கருத்து தெரிவித்தார்.

உர மானியத்தை விவசாயிகளுக்கு தற்போது வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிடடார்.

மதிப்பீடுகடுகளுக்கு அமைவாக 800,000 ஹெக்டேர்களுக்கு மேற்பட்ட நெல் உற்பத்தி காணிகள் உள்ளன. ஆனால் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 790,000 ஹெக்டேர் நெல் வயல்களில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விவசாய திணைக்கள உயர் அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது




# தேநீர் உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது

"தேநீர் மருந்தாக ஆரம்பித்து பானமாக வளர்ந்தது" இருப்பினும், தேநீர் ஒரு பானத்தை விட அதிகம் இது உடலுக்கும் மனதுக்கும் இயல்பாகவே ஆரோக்கியமான பொருட்களின் தொகுப்பாகும்.

முதலில் தேநீர் ஒரு மருத்துவ பொருளாகக் கருதப்பட்டது, பின்னர் ஒரு சமூக பானம் என்ற அந்தஸ்தைப் பெற்றது. தேநீர் ஆரோக்கியமான பானங்களில் ஒன்றாகும், இன்று பெரும்பாலான மக்கள் தேநீர் அருந்துகிறார்கள், ஏனெனில் அது இனிமையானது மற்றும் புத்துணர்ச்சி அளிக்கிறது.

மக்கள் அதிக ஆரோக்கிய உணர்வுள்ளவர்களாக மாறியதால், பெரும்பாலான உணவுப் பொருட்கள் மனிதர்கள் மீது அவற்றின் விளைவுகளைக் கண்டறிய விஞ்ஞானிகளால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. சமீபத்திய ஆண்டுகளில் உலகெங்கிலும் உள்ள புகழ்பெற்ற ஆய்வகங்களில் நடத்தப்பட்ட பல உயிர் மருத்துவ ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு தேயிலை உட்படுத்தப்பட்டுள்ளது. பழங்கால நம்பிக்கைகளை உறுதிப்படுத்தும் வகையில் தேநீர் அருந்துவது ஆரோக்கியத்திற்கு பல வழிகளில் நன்மை பயக்கும் என்பதை இந்த ஆய்வுகள் காட்டுகின்றன.

- தேநீரில் ஆன்டி- ஒட்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளது
- எனைய தாவரப் பொருட்களைப் போலவே தேநீரிலும் ஒட்சிசனேற்றப்பட்ட / பிளாவனொய்டுகள் உள்ளன. ஆன்டிஒக்ஸிடன்ட்கள் இரத்தத்தில் இருந்து தீங்கு விளைவிக்கும் சேர்மங்களை சுத்தம் செய்ய உதவும் கலவைகள் ஆகும்.
- வேறு எந்த தாவரப் பொருட்களிலிருந்தும் காணப்படும் வித்தியாசம் என்னவென்றால், தேநீரில் தனித்தன்மை வாய்ந்த அதிக அளவு ஒட்சிசனேற்றப்பட்ட பிளாவனொய்டுகள் உள்ளன.
- ஆன்டிஒக்ஸிடன்ட்கள் இதய நோய், பக்கவாதம் மற்றும் புற்றுநோய் அபாயத்தை குறைக்கும் என்று ஆராய்ச்சி காட்டுகிறது.
- ஆன்டிஒக்ஸிடன்ட்கள் அல்சைமர் மற்றும் பிற வயதுடன் தொடர்புடைய நினைவாற்றல் குறைபாடுகளிலிருந்து பாதுகாக்கும் என்று சமீபத்திய ஆராய்ச்சி காட்டுகிறது.
- பிளாக் டீ மற்றும் கிரீன் டீ இரண்டும் ஒரே மாதிரியான ஒட்சிசனேற்ற திறன்களைக் கொண்டுள்ளன, அவை பழங்கள் மற்றும் காய்கறிகளை விட கணிசமான அளவு அதிகமாகக் காணப்படும்.
- தேநீரில் உள்ள ஒரு தனித்துவமான அமினோ அமிலம் தியானைன்
- தேயிலையில் மற்ற தாவரங்களில் இல்லாத அமினோ அமிலமான தியானைன் உள்ளது. தியானைன் மனிதர்கள் மீது ஒரு நிதானமான விளைவைக் கொண்டிருக்கிறது.

மற்றும் நோய்த்தொற்றுகளுக்கு நமது இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியை வழங்குகிறது




### தேநீர் இதயத்திற்கு நல்லது

தேநீர் அருந்துவது இதய நோய் அபாயத்தைக் குறைக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது முக்கியமாக தேயிலை ஒட்சிசனேற்றிகளால் கொழுப்பு ஒட்சிசனேற்றத்தைக் குறைப்பது மற்றும் எண்டோடெலியம் அல்லது நாடிகளின் உட் புறத்தின் சரியான செயல்பாட்டை எளிதாக்குகிறது.

### தேநீர் புற்றுநோயிலிருந்து பாதுகாக்கிறது

சில புற்றுநோய்களின் தொடக்கத்தையும் முன்னேற்றத்தையும் குறைக்க தேநீர் உதவும் என்றும் ஆராய்ச்சி காட்டுகிறது.

### தேநீர் மற்றும் வாய்ச் சுகாதாரம்

தேயிலை /புளோரைட்டின் நல்ல மூலமாகும். நான்கு முதல் ஐந்து கோப்பைகள் தினசரி புளோரைடு தேவையில் அண்ணளவாக 50% வழங்குகிறது. புளோரைட்டு தொடர்ந்து உட்கொள்வது பற்களை சிதைவிலிருந்து பாதுகாக்கிறது.

தேநீர் வாய்க்குழியில் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தடுக்கிறது, இதனால் பற்கள் மற்றும் ஈறுகளைப் பாதுகாக்கிறது.

பால் மற்றும் சர்க்கரை இல்லாத தேநீரில் கலோரிகள் இல்லை, எனவே எடையைக் குறைக்க ஏற்ற பானம்.

தேநீரில் மிகக் குறைந்த அளவு சோடியம் உள்ளது, இது உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ஏற்றது.

தேநீர் உடல் திசுக்களின் நீரேற்றத்திற்கு உதவுகிறது. மற்றும் நமது தினசரி திரவ தேவைக்கு பங்களிக்கிறது.

நான்கைந்து கப் தேநீரில் மிதமான அளவு கா∴பின் உள்ளது. மற்றும் நன்மை பயக்கும்.

மிதமான அளவு கா∴பின் செறிவை அதிகரிக்கச் செய்து அதன் மூலம் எந்தத் தீங்கு விளைவிக்கும் விளைவுகளும் இல்லாமல் செயற்றிறனை மேம்படுத்தும்.

தேநீர் ஒரு தளர்வான உணர்வைக் கொண்டுவருகிறது, இது மன அழுத்தத்தை குறைக்கிறது மற்றும் எந்த காரணமும் இல்லாமல் எரிச்சல் மற்றும் நிலையான சோர்வை உணருபவர்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது. க்ரீன் டீ மற்றும் ப்ளாக் டீயில் ஒரே அளவு ∴பிளாவனாய்டுகள் மற்றும் கா∴பின் உள்ளது, இது ஒரே மாதிரியான ஆரோக்கிய நன்மைகளை அளிக்கிறது.

தேநீர் ஒரு பாக்டீரியா எதிர்ப்பியாகச் செயல்பட முடியும் உங்களுக்கு தடிமன் ஏற்படும்போது மற்றும் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்களின் போது தேநீரால் கொப்பளிக்கவும்.

### தேநீர் கண் சோர்வை நீக்குகிறது. சோர்வடைந்த கண்களைச் சுற்றி தடவவும்.

இன்று உலக மக்களைப் பீடித்துள்ள முக்கிய நோய்கள், நீரிழிவு அல்லது வயது தொடர்பான நோய்கள், இதய நோய், உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம், மற்றும் புற்றுநோய் என்பவை முக்கியமானவை. முறையற்ற மற்றும் சமச்சீரற்ற ஊட்டச்சத்தால் ஏற்படும் இந்த நோய்கள், 50-70% அகால மரணத்திற்கு காரணமாகின்றன.

தண்ணீருக்குப் பிறகு மிகவும் நுகரப்படும் மற்றும் மலிவான பானமான தேநீர உள்ளது. மற்றும் இதயநோய், பக்கவாதம், உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களின் அபாயத்தைக் குறைக்கும் என்று சமீபத்திய ஆராய்ச்சி சுட்டிக் காட்டுகிறது.

**இலங்கை தேயிலை சபை**
**தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு**



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஐப்பசி மாதம் 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 14

**குறள் தரும் சிந்தனை**



ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு

உடலுடன் இணைந்தே உயிர் இருப்பது போல், மாண்பு என்பது நாண உணர்வுடன் இணைந்து இருப்பதேயாகும்.

# மழைக் காலநிலையையடுத்து அதிகரிக்கும் டெங்கு தொற்று!

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மழை பெய்து வருகின்றது. மழை தொடர்ச்சியாகப் பெய்ததும் நுளம்புகள் பல்கிப் பெருகி டெங்கு நோய் தீவிரமடைவது வழக்கமாகும். மேல்மாகாணத்தில்தான் டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாக இருப்பது வழக்கம்.

நாடெங்கும் இவ்வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களிலும் 40, 109 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 19 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பகுதித் தகவல்கள் தெரிவித்தன.

டெங்கு நோய்த் தாக்கம் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் வடிகான்கள் அதிகமாக உள்ளதனாலும், குடியிருப்புகள் நெருக்கமாக அமைந்துள்ளதாலும் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக உள்ளது. இதன் காரணமாகவே டெங்கு தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் கூடுதலாக உள்ளது.

இவ்வருடம் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களில் 10, 27 பேர் கொழும்பு மாவட்டத்திலும், 4,698 பேர் கம்பஹா மாவட்டத்திலும் பதிவாகியுள்ளனர். இவ்விரு மாவட்டங்களுமே டெங்கு நோயாளர்கள் கூடுதலாகவுள்ள மாவட்டங்களாகும்.

டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை மேல்மாகாணத்துக்கு அடுத்தபடியாக வடமாகணம் உள்ளது. டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய சூழல் அங்கு அதிகம் காணப்படுவது இதற்கான காரணமாகும்.

டெங்கு நோய் இவ்வாறு பெருகுவதற்கு இடமளிக்க முடியாது. ஏனெனில் டெங்கு உயிராபத்து அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய நோயாகும். ஆனால் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்துக் கொள்வதாலும், நுளம்புகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவதாலும் டெங்கு தொற்று பெருகுவதை கட்டுப்படுத்த முடியும்.

இந்நோய்க்கான பிரதான அறிகுறியாக விளங்குவது காய்ச்சல் ஆகும். காய்ச்சல் குறித்து ஆரம்பக் கட்டத்திலேயே அதிக அக்கறை கொண்டு மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்வது இன்றியமையாததாகும்.

இந்நோய் குறித்து மக்கள் மத்தியில் அலட்சியம் நிலவி வருகின்றது. அதன் காரணமாகவே பலர் இத்தொற்றுக்கு உள்ளாகின்றனர். பல நாட்கள் காய்ச்சல் தொடர்ந்த போதிலும், அதற்கான மருத்துவ உதவியை நாடாத பலர் ஆபத்தான நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர்.

டெங்கு வைரஸானது வெற்றுக் கண்களுக்குப் புலப்படாத நுண்ணங்கியாகும். இவ்வைரஸ் மற்றைய வைரஸ்கள் போலன்றி, வேறுபட்ட இயல்புகளைக் கொண்டுள்ளது. டெங்கு வைரஸ் காற்றினால் பரவுவதில்லை. நுளம்புகளாலேயே இந்த வைரஸ் நோயாளி ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகின்றது.

நுளம்பில் பல இனங்கள் உள்ளன. ஆனால் எல்லா இன நுளம்புகள் மூலமும் டெங்கு வைரஸ் ஒருவரில் இருந்து மற்றவருக்குப் பரவுவதில்லை. மாறாக நுளம்பு இனங்களில் காணப்படும் அனோபிளஸ் எஜிப்டைய் என்கிற இன நுளம்புகளையே டெங்கு வைரஸ் தனக்கான காவியாகப் பாவிக்கின்றது. இந்த நுளம்புகளே டெங்கு வைரஸ் கிருமிகளை காவிச் சென்று பரப்புகின்றன.

மழைக் காலநிலை தோன்றியதும் இந்த இன நுளம்புகள் பெருக்கமடைவது வழமையாகும். அதாவது தெளிந்த மழைநீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப்பெருகும் இயல்பை இவ்வின நுளம்புகள் கொண்டிருக்கின்றன. அதன் விளைவாகவே மழைக்காலநிலையுடன் சேர்த்து இவ்வின நுளம்புகள் பெருகுகின்றன. அதனால் இவ்வின நுளம்புகள் பெருக முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்துக் கொள்ள வேண்டும். அதன் ஊடாக டெங்கு நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாப்புப் பெறலாம்.

அதனால் தெளிந்த மழைநீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருப்பதில் நாம் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். எமது சுற்றாடலில் காணப்படுகின்ற வெற்றுப் பாத்திரங்கள், கைவிடப்பட்ட டயர்கள், சிரட்டைகள், உடைந்த மட்பாண்டங்கள், பொலித்தீன் உறைகள், இளநீர்க் குரும்பைகள் போன்றவாறான தேவையற்ற பொருட்களை சுற்றாடலில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். அல்லது அவற்றில் தண்ணீர் தேங்காதவாறு கவனமாக இருக்க வேண்டும். அத்தோடு வீடுகளின் கூரைகளில் உள்ள பீலிகளில் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு கவனம் செலுத்த வேண்டும்.

மலர்ச்சாடிகளில் உள்ள தண்ணீரை தினமும் மாற்ற வேண்டும். இவ்வாறு அவதானமாக இருப்பதன் மூலம் டெங்கு வைரஸை பரப்பக் கூடிய நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறு அவதானமாக செயற்படுவதன் மூலம் டெங்கு தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறலாம்.

editor.tkn@lakehouse.lk

# பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து அரசியலில் ஈடுபடுவது பொருத்தமானதல்ல!



## தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டச் செயலாளர் பவதாரிணி இராஜசிங்கம் கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு

"பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது, நமது தனித்துவத்தை இழப்பது மாத்திரம் அல்லாமல், நாம் கரைந்து காணாமல் போகக்கூடிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டச் செயலாளர் பவதாரிணி இராஜசிங்கம் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மற்றொரு தேசியக் கட்சியில் போட்டியிட்டாலும் கூட, அந்தத் தேர்தலில் என்னால் எனது இலக்கினை அடைய முடியவில்லை. அதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் எனது அரசியலை தமிழர் விடுதலைக் கூட்டணி ஊடாக கடந்த நான்கரை வருடங்களாக மேற்கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளேன்.

பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது, நமது தனித்துவத்தை இழப்பது மாத்திரம் அல்லாமல், நாம் கரைந்து காணாமல் போகக்கூடிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றது.

இந்நிலையில் தமிழர்களின் பாரம்பரியக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து, இந்தப் பொதுத் தேர்தலை நாங்கள் ஒரு குழுவாகச் சந்திக்கின்றோம்.

அந்த வகையில் வடக்கு, கிழக்கில் மூன்று மாவட்டங்களில் போட்டியிடுகின்றோம். கிழக்கிலே மட்டக்களப்பு, வடக்கிலே யாழ்ப்பாணம், வன்னி ஆகிய தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுகின்றோம். மத்தியிலே கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் தமிழர் விடுதலை கூட்டணி உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இதன் ஊடாக வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதன் மூலம் எமது ஐக்கியத்தை நாங்கள் வலியுறுத்துவது மாத்திரமல்லாமல், வடக்கிலே ஒரு பாரம்பரிய கட்சியின் முக்கியத்துவத்தையும் நாங்கள் முன்னிறுத்தி இருக்கிறோம்.

திடீரென பணத்தை முதலீடு செய்து வேட்பாளர்களை விலைகொடுத்து வாங்கி, புதிய கட்சியொன்றை உருவாக்கி அதன் ஊடாக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை கொண்டு வருவதானது முறையல்ல. அவர்கள் இந்தப் பணப் பரிமாற்றத்தை ஈடு செய்ய பாராளுமன்ற அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துவார்கள் என்பதையும் நாங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

பாரம்பரியமாக எங்களுக்கு இருந்த அரசியல் கொள்கை கோட்பாடுகளை சமகாலத்திற்கு ஏற்றாற் போல் நவீனத்துவப்படுத்திக் கொண்டு முன்செல்லக் கூடிவாறு எங்களைப் பலப்படுத்தி எமது குரல்கள் கூக்குரல்களாக மட்டுமல்லாது கொள்கைகளின் குரல்களாகவும், செயல்களாகவும் இருக்க வேண்டும்.

அதற்கான கடப்பாடு எமக்கு இருக்கின்றது. அந்த வகையில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு கட்சிகளை மாத்திரம் அல்லாமல் மலையகக் கட்சிகளையும் அரவணைத்து சென்றிருந்த வரலாற்றை நாங்கள் ஞாபகப்படுத்துகின்றோம்.

தேசிய சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கப் பொருளாளராகவும் சிறுவர் அபிவிருத்திக்காக தொடர்ச்சியாக உழைத்து வருபவர் என்ற வகையிலும், சிறுவர் பாடசாலை ஆசிரியர்களின் வாக்குகளை அரசியலில் பயன்படுத்த வேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

சிறுவர் பாடசாலை ஆசிரியைகளையோ அல்லது கலைஞர்களையோ வெறுமனே வாக்குகளைப் பெறும் தேவைக்காக பயன்படுத்தும் அரசியலுக்கு அப்பாற்பட்டு கொள்கை ரீதியாக நாம் செயற்பட வேண்டும். அவர்களை அரசியல்மயப்படுத்தாது கலைஞர்களின் நல்வாழ்வுக்காக சிரேஷ்ட கலைஞர்களுக்கான வீட்டுத்திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன்.

எம்மை நோக்கி வரும் சத்தங்களுக்கு அடிபணிந்து அந்த சத்தங்களில் மீது ஆசைப்பட்டு மக்கள் தமது வாக்குகளை வீணடிக்கக் கூடாது. ஒரே குரலாக தொடர்ச்சியாக ஒலிக்க கூடிய மறையாத சின்னமாகிய உதயசூரியன் கட்சியோடு இணைந்து செயற்படுவோம். சிரேஷ்ட தலைவர்களோடு புதிய இளம் முகங்களையும் அறிமுகப்படுத்தி இக்கட்சி தனது பயணத்தை ஆரம்பித்திருக்கிறது. ஐந்து மாவட்டங்களிலும் போட்டியிடும் அதன் வேட்பாளர்களை அன்புடன் வரவேற்று ஆதரிக்குமாறு இந்த ஊடக சந்திப்பின் ஊடாக மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்".

# கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்



## ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளர் எம். எச். எ. ஹலீம்

கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான எம். எச். எ. ஹலீம் தெரிவித்தார்.

**கேள்வி: நீங்கள் கண்டி மாவட்டத்தில் நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்டு மூன்று தசாப்த காலமாக ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியின் அமைப்பாளராகவும் மக்களின் அரசியல் பிரதிநிதியாகவும் இருந்து வருகிறீர்கள். அக்குறணை, கம்பளை, உடுநுவர, தெல்தோட்டை, கண்டி, மடவளை உள்ளிட்ட இன்னும் பல பிரதேச முஸ்லிம் கிராமங்களின் மேம்பாட்டுக்காக உழைத்து வரும் நீங்கள், இந்தப் பொதுத்தேர்தல் குறித்து என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: இம்முறை நடைபெறும் நடைபெறும் பொதுத்தேர்தல் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாட்டின் அரசியல் சூழல் ஒரு மாற்றத்தை நோக்கிய நிலையில் உள்ளது. எனினும் தமிழ் பேசும் சிறுபான்மையின மக்களாக வாழ்கின்ற பிரதேசங்களான கண்டி மாவட்டம் அதிலும் விசேடமாக ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதி, அக்குறணை போன்ற இடங்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் இந்தத் தேர்தல் முக்கியமானதாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

எனது தாய் மாமா முன்னாள் மறைந்த மர்ஹூம் ஏ. சி. எஸ். ஹமீத் அவர்களின் ஆசீர்வாதத்துடன் 1987 இல் மாகாண சபையில் பிரவேசித்தேன். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றி பெற்று அதன் உறுப்பினராக இருந்து கண்டி மாவட்டம் முழுவதும் அரும்பணிகள் புரிந்தேன். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத்து மாகாண சபைத் தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றிவாகை சூடி அமைச்சராக இருந்தேன். எனது மாமா ஏ. சி. எஸ். ஹமீத் அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் 2000 இல் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முதன் முதலாக பாராளுமன்றம் பிரவேசித்தேன்.

**கேள்வி: அப்படியாயின் கண்டி மாவட்டத்தில் ஒரு தேசியக் கட்சியின் நீண்ட நாள் பிரதிநிதியாக இருந்த பெருமை உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது ஆற்றிய சேவை, அதேபோன்று நீங்கள் தபால் துறை மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சராக இருந்தல் காலத்தில் ஆற்றிய சேவை பற்றி இன்றும் பேசப்படுகின்றது. அவை பற்றிக் கூறுவீர்களா?**

பதில்: உண்மையிலேயே தொடர்ந்து நடைபெற்று வந்த பொதுத்தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்டு கண்டி மாவட்ட மக்களினது தேசிய அபிலாசைகளை முன்னிறுத்தி கைகளில் கறைபடியாமல் ஊழலற்ற அரசியலை பொறுப்புணர்வுடன் செய்து வந்துள்ளேன். 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்லில் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தபால் துறை மற்றும் முஸ்லிம் சமய, கலாசார, பண்பாட்டலுவல்கள் அமைச்சராக இருந்து நாடளாவிய ரீதியில் சேவைகள் செய்தேன். இதில் விசேடமாக தபால் துறையில் எமது நாட்டிலுள்ள சிங்கள. தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ ஆகிய அனைத்து மக்களும் பயன்படும் வகையில் டிஜிட்டல் துறையில் புதுமையான தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்தேன் .

அதேபோன்று இலங்கையின் தனித்துவமான சமய, கலாசாரப் பண்பாடுகளைக் கொண்டு வாழுகின்ற எமது முஸ்லிம் சமூகத்தினுடைய மிக முக்கியமான அமைச்சுப் பதவிப் பொறுப்பை வகித்தேன். கடந்த 20 வருடங்கள் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. இந்தக் குறை நல்லாட்சி அரசாங்கத்தில் நிவர்த்தி செய்யப்பட்டது. அந்தப் பதவி எனக்கு கிடைத்ததை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். ஏனென்றால் இக்கால கட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் துலை தூக்கியிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நாட்டிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள் பதிவுகள் இல்லாமல் இருந்தன. அதற்கென புதிய செயல்வடிவம் கொடுக்கப்பட்டது.பள்ளிவாசல்களைப் பதிவு செய்வதற்காக பல இடங்களில் நடமாடும் சேவைகளை நடத்தியுள்ளோம்.இதன் மூலம் துரிதகதியில் பாரியளவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் பதிவு செய்யப்பட்டன. புனித மக்கா யாத்திரை செல்லும் ஹஜ் விவகாரம், சமய, கலாசார விடயங்களோடு தொடர்புபட்ட அனைத்து கருமகாரியங்களிலும் நேரடியாக பங்கேற்று செயற்பட்டேன்.

**கேள்வி:நீங்கள் இறுதியாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: உண்மையிலேயே இத்தேர்தலில் கண்டி மாவட்டத்தின் முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநித்துவத்தின் தெரிவு தொடர்பான மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எமது மாவட்டத்தின் நீண்ட கால முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கக் கூடியதாகும். அவர்களின் தெரிவுகள் நீண்ட அரசியல் அனுபவம்,, சமூக ஒற்றுமை, பொருளாதார செழிப்பு மற்றும் அரசியல் ஸ்திரத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதுடன் எதிர்காலத்திற்கான தொலைநோக்கு என்பவற்றைக் கருத்தில் கொண்டதாகும்.

மர்ஹூம் ஏ. சி. எஸ். ஹமீத் அவர்கள் முன்னோக்கு கொண்ட முஸ்லிம் சமூகத்தை உருவாக்க எத்தகைய அடித்தளங்களை விட்டுச் சென்றார் என்பதற்குச் சான்றாக கண்டி மாட்ட முஸ்லிம் வாக்காளப் பெருமக்களாகிய உங்களுடைய நீண்ட கால ஆதரவும் ஒத்துழைப்பு நன்றிக் கடனும் தொடர்ந்து இருந்து வருகின்றன. உங்களின் பிரதிநிதியாய் என்னையும் மனமுவந்து தெரிவு செய்து வருவது என்பது எனது நீண்ட கால அரசியல் அனுபவங்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். கண்டி மாவட்டத்தின் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான அர்ப்பணிப்பை மேற்கொண்டு வருகின்றோம். இன்றைய சூழலில் நமது வாக்குகளை பல கட்சிகளிலும் சுயேச்சைக் குழுவாகவும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அளித்து எமது பொன்னான வாக்குகளை சின்னாபின்னாமாக்கி சிதறடித்து விடக் கூடாது. நன்கு யோசித்து எமது மண்ணின், எமது ஊரின் நீண்ட பிரதிநிதித்துவங்களை தக்கவைத்துக் கொள்வதன் மூலம் கண்டி மாவட்டத்தின் எல்லா திக்குகளிலும் வாழுகின்ற எல்லா மக்களுடைய உரிமைகளையும் எதிரொலிக்கச் செய்யலாம். ஒற்றுமையை வலுப்படுத்தலாம். பொருளாதாரத்தை செழிப்பானதாக மாற்றியமைக்க முடியும்.

நேர்காணல்:
இக்பால் அலி...





# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**I.** **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

நாம் எப்பொழுதும் சுத்தமாக இருப்பதோடு எமது வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குப்பைகளைக் கண்ட இடங்களில் வீசாமல் ஒரு கூடையில் இட்டு அல்லது கிடங்கு ஒன்றில் புதைத்து குப்பை கூளங்களற்ற சுற்றாடல் ஒன்றினை எம்மால் அமைக்க முடியும். கூடைகளில் இட்டு வைக்கின்ற குப்பைகளை உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் சேகரிக்க வரும்போது அவர்களிடம் கையளிக்க வேண்டும். இதன் மூலம் பல கொடிய நோய்களிலிருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். எமது நாட்டைப் பொறுத்தவரையில் சுத்தம் பேணுதல் ஓர் இன்றியமையாத தேவையாக அமைந்துள்ளது.

01. இப்பந்தியில் எதனைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றிக் கூறப்படுகின்றது?

…………………………………………………………………………

02. குப்பை கூளங்களற்ற சுற்றாடல் ஒன்றினை அமைத்துக் கொள்ளக்கூடிய ஒரு முறையைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………

03. குழி என்பதன் ஒத்த கருத்துச் சொல்லினை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக. ……………………………………………………………

04. நாங்கள் என்பதன் படர்க்கைச் சொல்லைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

…………………………………………………………………………

05. உள்ளூராட்சி என்பதைப் பிரித்து எழுதுக. ………………………………………

06. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இணைமொழியை எழுதுக. ……………………………..

07. பின்வரும் பழமொழியைப் பூரணப்படுத்துக.

i. …………………………….. கசக்கிக்கட்டு

ii. ……………………………. கற்குழியும்

08. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

i. டெங்கு நுளம்புகளை ……………….……. க்க வேண்டும். (ஒலி / ஒளி / ஒழி)

ii. சிங்கத்தை கண்ட மானிற்கு ………………… ஏற்பட்டது (கிலி / கிளி / கிழி)

09. எதிர்பாற் சொற்களை எழுதுக.

i. வீரன் - ………………………… ii. சீமாட்டி - ……………………………..

**II.**

10. பொருத்தமான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
**(சிறுவர்கள், குதிரை, மேசைகள், அதிபர்)**

i. அஃறிணை பலவின்பால் சொல் - ……………………………………………..

ii. உயர்திணை பலர்பால் சொல் - ……………………………………………...

11. பின்வருவனவற்றுள் உள்ளீட்டு மரபுப் பெயர்களை எழுதுக.

i. நெல் - ………………………… ii. கற்றாளை - …………………………...

12. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திற்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

அந்த பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.

…………………………………………………………………………

13. பொருத்தமான இரட்டைக்கிளவி சொல்லை தெரிவு செய்து கோடிடுக.

i. பாட்டி ……………………..…….. (குடுகுடு / சடசட) வென நடந்து வந்தார்.

ii. ஆற்றுநீர் ………………………………..… (கலகல / சலசல) வென ஓடியது.

14. பின்வரும் சொற்களின் திருத்திய வடிவத்தினை எழுதுக.

i. மகிள்ச்சி - ……………………….. ii. விஞ்சாணி - ………………………

15. விடை தருக.
i. மின்குமிழை கண்டுபிடித்தவர் யார்? …………………………………………..

16. பிரித்தெழுதுக.
i. கற்பாறை - ………………………. ii. பூஞ்சோலை - ……………………….

17. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் பெயர் அடைமொழிகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
i. அது ஓர் அழகிய ஓவியம் : ……………………………………………

ii. உயர்ந்த மரங்களின் கிளைகளில் குருவிகள் கூடு கட்டின : …………………..

iii. நுளம்புகள் கொடிய நோய்களைப் பரப்பும் : ………………………………….

iv. சிபிச் சக்கரவர்த்தி சிறந்த குணம் படைத்தவன் : …………………………..

v. நாம் நல்ல புத்தகங்களைத் தேடிப் பெற்று அவற்றை வாசித்தல் வேண்டும் :

…………………………………………………………………………

18. “மாரி காலத்தில் உழவர்கள் மாடுகளை கலப்பையில் பூட்டி வயலை உழுவார்கள்” மேலே கூறப்பட்ட வாக்கியத்தின்

i. எழுவாய் யாது? …………………... ii. பயனிலை யாது? …………………....

19. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.
வழிகள் / நாம் / உள்ளன / ஆரோக்கியமாக / இன்னும் / பல / வாழ

…………………………………………………………………………

20. i. பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

i. Coconut - ……………………... ii. Flower - ……………………………....
ii. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான சிங்கள சொல்லை தமிழ் எழுத்துக்களிலேயே எழுதுக.





i. …………………………… ii. ……………………………..

**III.**

21. | 1 | 5 | 0 | 2 | இங்குள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய நான்கிலக்க

i. சிறிய எண் - ……………………………………………………………..

ii. ஆக்கிய சிறிய எண்ணைச் சொற்களில் எழுதுக. ……………………………

22. 

$\frac{2}{3}$ பங்கை நிழற்றிக் காட்டுக.

23. 2m கம்பி ஒன்று வளைத்து சதுர வடிவம் ஒன்று அமைக்கப்பட்டது.
அச் சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது? ……………………………………….

24. எண் சட்டம் ஒன்றில் 14 எண்ணிகள் கொண்டு ஆக்கக் கூடிய நான்கிலக்க சிறிய எண்ணை எண்சட்டத்தில் வரைந்து காட்டுக.




25. நண்பகல் 12.45 மணிக்குப் புறப்பட இருந்த புகையிரதம் 35 நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டது. புகையிரதம் புறப்பட்ட நேரம் யாது?

…………………………………………………………………………

26. 5005ml ஐ $l$, ml இல் தருக. ……………….. $l$ ……………….ml

27. 90 நிமிடங்களை மணித்தியாலம் நிமிடங்களில் தருக. ………………………….

28. 1kg பூசணிக்காயின் விலை 84.00 ரூபாய் ஆகும். 1kg 250g பூசணிக்காய் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?

…………………………………………………………………………

29. 324 மாபிள்களை 3 வகுப்புகளுக்கு சமமாகப் பகிர்ந்து கொடுத்தால் ஒரு வகுப்பிற்குக் கிடைக்கும் மாபிள்கள் எத்தனை?

…………………………………………………………………………

**IV.** **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. மரப்பலகை ஒன்றை அழுத்தமாகச் சீவுவதற்குப் பயன்படும் உபகரணம் பின்வருவனவற்றில் எது?

i.  ii.  iii. 

31. கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் அடங்கும் மாகாணம் எது?
i. மேல் மாகாணம் ii. வடமேல் மாகாணம் iii. சப்பிரகமுவ மாகாணம்

32. அலங்காரத் தையல் முறையாக அமைவது பின்வருவனவற்றில் எத்தையல் முறையாகும்?
i. பெரிய நூலோடி ii. கம்பளித் தையல் iii. சோம் தையல்

33. கிராமிய விளையாட்டு பின்வருவனவற்றில் எது?
i. பல்லாங்குழி ii. கரப்பந்து iii. கூடைப்பந்து

34. நீர் நிலைகளுக்கருகில் சஞ்சரிக்கும் பறவை அல்லாதது
i. நீர்க்காகம் ii. செண்பகம் iii. வாத்து

35. வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கிடையே காணப்படும் களைகளை அகற்றுவதற்கு மிகவும் பொருத்தமான முறை
i. களைகளைக் கைகளால் பிடுங்கி விடுதல்
ii. களை நாசினி தெளித்தல்
iii. மண்ணை உழுதல்

36. ‘வேலைக்காரன் கம்பு’ பயன்படுத்தப்படும் தொழில்
i. விவசாயம் ii. மீன்பிடி iii. கொழுந்து பறித்தல்

37. கல்சியம், இரும்புச்சத்து, உயிர்ச் சத்துக்கள் அதிகம் கொண்ட பழவகை எது?
i. தோடம்பழம் ii. மாம்பழம் iii. அன்னாசி

38. பின்வரும் மின்சுற்று இணைப்பில் மின்குமிழ் ஒளிராத சுற்று எது?

i.  ii.  iii. 

39. இரைமீட்கக் கூடியதும் காலில் குழம்புகளைக் கொண்டதுமான பிராணிகளின் தொகுதி
i. மாடு, ஆடு ii. ஆடு, புலி iii. மரை, யானை

(06ஆம் பக்கம் பார்க்க)

(05 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

40. வானில் சந்திரகிரகணம் ஏற்படக்கூடிய நாள் எது?
i. தேய்பிறை ii. வளர்பிறை iii. பௌர்ணமி

41. பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் அல்லாதது
i. பட்டாசு கொளுத்துதல்
ii. பாதையில் வலது புறத்தின் வழியே நடந்து செல்லல்
iii. புகையிரதத் தண்டவாளத்தின் வழியே நடந்து செல்லல்

42. தேய்வுற்றிருந்த நிலையில் எண்ணெய் இட்டு பயன்படுத்தக் கூடியது
i. மேசை ii. திரைச்சீலை iii. கப்பி

43. பாதுகாப்பிற்காக ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் திறன் கொண்ட பிராணி
i. நத்தை ii. எலி iii. அணில்

44. பின்வரும் இலைகளுள் ஒத்த வடிவ இலை அல்லாதது
i. அகத்தி ii. தொட்டாற்சுருங்கி iii. வெண்டி

45. பச்ச வளையல் தொட்டு ஏலேலோ … என்பது எவ்வகைப் பாடலாகும்?
i. சேனைப்பாடல் ii. அரிவு வெட்டுப் பாடல் iii. மீனவர் பாடல்

46. ஆதிகாலத்தில் நீரைச் சுத்தஞ் செய்த முறை
i. குளோரீன் இடுதல் ii. வடிகட்டியைப் பயன்படுத்துதல்
iii. கரியை நீரில் இடுதல்

47.  படத்தில் காட்டப்பட்டுள்ள வடிவமுடைய திருகாணியைக் கழற்றுவதற்கு மிகப் பொருத்தமான உபகரணம்
i. சுத்தியல் ii. பூமுனைத் திருப்புளி
iii. பொதுவான திருப்புளி

48. எமது நல்வாழ்விற்காக நாம் செய்யவேண்டியது?
i. முரண்பாடுகளை ஏற்படுத்தல் ii. வறியவர்க்கு உதவுதல்
iii. அச்சுறுத்தல்

49. எமது உடல் உள விருத்திக்காக நாம் செய்ய வேண்டியது?
i. உணவு உண்ணல் ii. சூரிய நமஸ்காரம் iii. சண்டை பிடித்தல்

50. எமக்கு முன்மாதிரியாக அமைந்து, எமது நாட்டிற்கு புகழ் சேர்த்த ஒருவர்
i. மகாத்மா காந்தி ii. டங்கன் வைட் iii. உஸைன் போல்ட்

51. எமது உலக மரபுரிமைகளில் ஒன்றாகக் கருதப்படக் கூடியது?
i. மன்னார் பெருக்க மரம் ii. மகாபோதி விருட்சம்
iii. டோசன் கோபுரம்

52. புரியாணி உணவுடன் தொடர்புபட்ட இனத்தவர்,
i. முஸ்லிம்கள் ii. தமிழர் iii. பறங்கியர்

53. மாமிச உண்ணிகள் எவை?
i. நாய், பூனை ii. கழுகு, புலி iii. மான், மரை

54. சில தாவரங்களில் காணப்படாத பகுதிகள் எவை?
i. வேர், இலை, தண்டு ii. வேர், இலை, கிளை iii. பூ, காய், பழம்

55. மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாத அமைப்பைக் கொண்ட பிராணி எது?
i. பாம்பு ii. பல்லி iii. மீன்

56. பொருட்களை உரிய இடங்களில் வைப்பதால் ஏற்படும் நன்மை,
i. நேர விரயம் ஏற்படும் ii. பராமரிப்பு இலகுவாகும் iii. பெறுமதி அதிகரிக்கும்

57. மின்சாதனங்களைப் பயன்படுத்தும் போது, நாம் பேண வேண்டியது,
i. ஆடம்பரம் ii. சிக்கனம் iii. பொறுமை

58. ஔடதத்திற்குப் பயன்படுத்தாத இலை பின்வருவனவற்றுள் எது?
i. வெண்டியிலை ii. கறிவேப்பிலை iii. சாத்தாவாரி

59. பின்வருவனவற்றுள் அதிக கால்கள் உள்ள உயிரினம்
i. சிலந்தி ii. மரவட்டை iii. நண்டு

60. 'கடும் மழை பெய்யும் போது அவதானமாக இருக்க வேண்டிய விடயங்கள்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு, எழுவாய், பயனிலை தொடர்பு முறையாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

### கடந்த வார (11.10.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 11. 1 | 21. 3 | 31. 3 |
| 02. 2 | 12. 3 | 22. 2 | 32. 2 |
| 03. 1 | 13. 2 | 23. 1 | 33. 2 |
| 04. 2 | 14. 1 | 24. 3 | 34. 2 |
| 05. 3 | 15. 2 | 25. 1 | 35. 1 |
| 06. 1 | 16. 3 | 26. 2 | 36. 3 |
| 07. 2 | 17. 3 | 27. 2 | 37. 2 |
| 08. 2 | 18. 1 | 28. 1 | 38. 1 |
| 09. 1 | 19. 2 | 29. 3 | 39. 3 |
| 10. 3 | 20. 1 | 30. 2 | 40. 2 |

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

தனது வள்ளத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவமொன்று எம்பிலிப்பிட்டிய ஹுங்கம கலமெட்டிய குடாவில் இடம்பெற்றுள்ளது.

இந்த நபர் நேற்று முன்தினம்(16) காலை 5.30 மணியளவில், தனது வள்ளத்தில் மீன்பிடிக்கச் சென்றதாக அவரது குடும்பத்தினர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இவரது மரணத்துக்கான காரணத்தை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இணையவழி மோசடி குற்றச்சாட்டு

## குண்டசாலையில் கைது செய்யப்பட்ட 108 சீன பிரஜைகளுக்கு விளக்கமறியல்

இணையவழி மோசடி குற்றச்சாட்டு தொடர்பாக கண்டி குண்டசாலையில் கைதுசெய்யப்பட்ட சீன பிரஜைகளை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

108 சீன இளைஞர்கள் மற்றும் 22 சீன பெண்கள் உட்பட 130 சந்தேகநபர்கள் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இணையவழி மோசடி குற்றச்சாட்டு தொடர்பாக, குண்டசாலையிலுள்ள ஹோட்டலொன்றில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், விசாரணைகள் நிறைவடையாத நிலையில், கண்டி கணினி குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினால், இலக்கம் 1520/24B அறிக்கையினூடாக நேற்று முன்தினம் (16) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேகநபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, குண்டசாலை தெல்தெனிய மாவட்ட நீதவான் தேவிகா சதுரங்கனி ஜயவர்தன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர்கள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்து திஸ்ஸ, சங்க அமர்ஜித் நாமல் ராஜபக்ஷ, அமித் பெரேரா, சமல் அல்விஸ் உள்ளிட்டோர் ஆஜரானார்கள்.

இந்நிலையில், சந்தேகநபர்களான சீன பிரஜைகள் கண்டி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## இ.தொ.காவின் தேர்தல் பிரசாரம் ஆரம்பம்





பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகளை சேகரிக்கும் பணியை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதன்படி, அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் ராமேஸ்வரன் மற்றும் தேசிய அமைப்பாளர் சக்திவேல் ஆகியோருக்காக டிலறி, போர்டயஸ், பொய்ஸ்டன், இன்ஜெஸ்டி, வனராஜா, மாணிக்கவத்த இலக்கம் 01, 02 ஆகிய தோட்டங்களில் செந்தில் தொண்டமான் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தே.ம.சக்தியின் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கலந்துரையாடல்



பாராளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி சார்பாக நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (16) மாலை நுவரெலியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கலந்தரையாடலில், ஆட்சி, அதிகார நிலவரம், எதிர்கால செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு எவ்வாறு ஒன்றிணைந்து செயற்படலாம் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டதுடன் தமது பயணத்தில் ஒன்றிணைந்து செயற்பட அனைவரும் முன்வருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஊவா மாகாண நூலக சேவை சபையின் சிறுவர் நூலகம் நேற்று முன்தினம் (16) ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர தலைமையில் திறந்து வைக்கப்பட்டபோது, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் காமினி மஹிந்தபால ஜோபியாஸ், உள்ளூராட்சி ஆணையாளர் ஹேமந்த திஸாநாயக்க மற்றும் அரச அதிகாரிகள், சிறுவர்கள் கலந்துகொண்ட போது... (படம்: ஊவா சுழற்சி நிருபர்)

## அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் மீட்பு

*நானுஓயா நிருபர்*

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்திலிருந்து அடையாளம் தெரியாத பெண்ணொருவரின் சடலம் நேற்று (17) காலை மீட்கப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் நிலையத்துக்குள் பெண்ணொருவர் இறந்து கிடப்பதை அவதானித்த, நுவரெலியா மாநகர சபை ஊழியர் ஒருவர், உடன் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். கடந்த 5 நாட்களுக்கு முன்பிருந்தே, சடலமாக மீட்கப்பட்ட இப் பெண்ணும் அவருடன் மற்றுமொரு பெண்ணும் நுவரெலியா பஸ் தரிப்பிடத்தில் யாசகம் பெற்று வந்ததாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், உயிரிழந்த பெண் யார் என்பது தொடர்பாக இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் அதிக குளிர் காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒல்லாந்தர் காலத்து VOC கேடயம், நாணயங்களை விற்க முயற்சி செய்தவர் ஹற்றனில் கைது



*ஹற்றன் சுழற்சி நிருபர்*

ஒல்லாந்தர் காலத்து VOC எழுத்து பொறிக்கப்பட்ட கேடயம் மற்றும் இரு நாணயங்களை, 20 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த சந்தேகநபரொருவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கினிகத்தேனை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய இந்த நபர், ஹட்டன் பிரதேசத்திலுள்ள நபரொருக்கு, VOC கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை 20 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்துள்ளார். இந்த தொல்பொருட்கள், எவ்வாறு கிடைத்தன என்பது தொடர்பாக, சந்தேகநபர் எதுவும் தெரிவிக்காத நிலையில், தொல்பொருள் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக தொல்பொருள் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டதாக ஹற்றன் தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

VOC என்பது ஒல்லாந்தர் கால "கிழக்கிந்திய கம்பனி" எனும் பெயரைக் குறிக்கும் சுருக்கக் குறியீடாகும். இந் நாணயம் 1732 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டவர் நேற்று (17) ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குண்டசாலை ஆரம்பப் பாடசாலையில் கெஹெலியவின் பெயர் நீக்கப்பட்டது

*(அக்குறணை குறூப் நிருபர்)*

வத்துகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட கெஹெலிய ரம்புக்வெல்ல ஆரம்பப் பாடசாலையின் பெயர் நேற்று (17) முதல் மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, கெஹெலியாகம ஆரம்பப் பாடசாலை என அழைக்கப்பட்ட இப் பாடசாலை, குண்டசாலை ரோயல் ஆரம்பப் பாடசாலை என அழைக்கப்படும் என மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபேகோன் தெரிவித்தார்.

1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, அக்காலத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க வித்தியாலயம் என அழைக்கப்பட்டது. பின்னர், நத்தரம்பொத்த வித்தியாலயம், குண்டசாலை மகாவித்தியாலயம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டது.

சுமார் 530 மாணவர்களைக் கொண்டு இயங்கிய இப்பாடசாலை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இடம் பெற்ற, இடம் பெயர்வுகள் காரணமாக மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டது. பின்னர் பண்டாரநாயக்கா மத்திய கல்லூரியின் ஒரு பிரிவாக இயங்கியது. பின்னர் 2012 ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தின்படி இது மீள அரம்பிக்கப்பட்டு கெஹெலிய ரம்புக்வெல்ல ஆரம்பப் பாடசாலையாக பெயர் மாற்றம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் தேர்தல் கால வன்முறைகளை தடுக்க 51 பேரடங்கிய விசேட குழு



யாழ். மாவட்டத்தில் தேர்தல் கால வன்முறைளைத் தடுக்க 51 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சார்பில் 7 உறுப்பினர்களும், தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 44 உறுப்பினர்களும் இந்தக் குழுவில் அடங்குவர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும் இடையில் இதுதொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ். பொலிஸ் நிலைய மாநாட்டு மண்டபத்தில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

பாராளுமன்றத் தேர்தல் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளைத் தடுக்கும் முகமாக குழுவொன்றை அமைக்க இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும், தேர்தல் பிரசார இடங்களுக்கு அனுமதி கோரல், ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும் கால அளவு தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டன.

## வடக்கின் உதயம்

# அற்றோனி தத்துவத்தை பயன்படுத்தி காணி மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

யாழ். விசேட நிருபர்

அற்றோனித் தத்துவத்தை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடா நாட்டில் வசிக்கும் நபர் ஒருவர் மானிப்பாய் பகுதியிலுள்ள தனது ஆதனங்கள் சிலவற்றுக்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்தவருக்கு தனது அற்றோனித் தத்துவத்தை வழங்கி இருந்தார்.

குறித்த நபர் தனக்கு வழங்கப்பட்ட அற்றோனித் தத்துவத்தில் வழங்கப்படாத அதிகாரத்தை பயன்படுத்தி மேலும் சில ஆதனங்களை மோசடியாக உரிம மாற்றம் செய்துள்ளார்.

இது தொடர்பில் கனடாவை சேர்ந்த நபர் யாழ் . மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து இருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

# விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

கரவெட்டி தினகரன் நிருபர்

மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டி விபத்தில் படுகாயமடைந்த முதியவரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். காவல்பட்டாங்கட்டி, புதுக்குடியிருப்பு, பேசாலை பகுதியைச் சேர்ந்த துரைச்சாமி கணபதி (வயது 74) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

இவர் கடந்த 2ஆம் திகதி பேசாலை மன்னார் வீதியால் தனது வீட்டை நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தார். இதன் போது எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதி விபத்து சம்பவித்துள்ளது. இந்நிலையில் அவர் மன்னார் பேசாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் மூன்றாம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# தென்னிலங்கை அரசியல் கட்சிகள் வடக்கில் கால் பதிப்பது ஆபத்தானது

யாழ்.விசேட நிருபர்

தென்னிலங்கை கட்சிகள் இனவாத சிந்தனைகளுடன் காணப்படுவதால் அவை வடக்கில் கால் பதிப்பது ஆபத்தானது என தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்.தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் நாங்கள் தகுதியான வேட்பாளர்களுடன் களமிறங்கியுள்ளோம்.

இந்த தேர்தல் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தியல் காணப்படுகின்றது.

தென்னிலங்கை மக்கள் பழைய ஆட்சியாளர்களை துடைத்தெறிந்து, ஊழலற்ற, நேர்மையான அரசியல்வாதிகளை கொண்டுவர வேண்டும். என்ற எண்ணத்தோடு உள்ளார்கள்.



அதனால், தென்னிலங்கையில் இருக்கக் கூடிய பல மூத்த அரசியல்வாதிகள் தேர்தலிலிருந்து விலகி உள்ளனர். ஆனால், வடக்கு அரசியல்வாதிகள் தொடர்ந்து போட்டியிட வேண்டும் என்ற பேரார்வத்துடன் காணப்படுகின்றனர்.

வடக்கில் எமது கட்சி தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் மாத்திரம் தான் தேர்தலிலிருந்து விலகி இளையோரிடம் கையளித்துள்ளார். மற்றையவர்கள் 15 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றத்திலிருந்தும் மக்களை எதுவும் செய்யாத நிலையிலும் தொடர்ந்தும் ஆசைப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் இருந்தவர்களுக்கு ஓய்வு வழங்க வேண்டும். வடக்கிலும் ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும். அதனால் தான் கற்றறிந்த இளையோரை நாங்கள் களமிறக்கியுள்ளோம். தமிழ் மக்கள் எங்களுக்கு ஒட்டுமொத்த ஆதரவையும் தர வேண்டும்.

தமிழ் இம்முறை தேர்தலில் ஆளுமைமிக்க ஆற்றல் உள்ளவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றை நிர்வகித்துள்ளோம். அதில் எங்களுடைய நிர்வாக ஆளுமைகளை காட்டியுள்ளோம். நாம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேசசபை ஆகியவற்றில் ஆட்சியிலிருந்த காலப்பகுதியில் தான் கொரோனா தொற்றும் அதனை தொடர்ந்து, பொருளாதார நெருக்கடிகளும் ஏற்பட்டன. அவ்வாறான இடரான காலப்பகுதியில் நாங்கள் 45 உறுப்பினர்களை கொண்ட மாநகர சபையில் 10 உறுப்பினர்களுடன் வினைத்திறனுடன் செயற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# மதுபானசாலை அனுமதி விவகாரம் நிரூபிக்கப்பட்டால் அரசியலில் இருந்து ஒதுங்க தயார்

சாவகச்சேரி விசேட நிருபர்



மதுபானசாலை விவகாரம் தொடர்பில் ஆதாரத்தோடு நிரூபிக்கப்பட்டால் அரசியலிலிருந்து ஒதுங்க தயார் என அங்கஜன் இராமநாதன் அறிவித்துள்ளார்.

நேற்று வெ ளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் புதிய மதுபானசாலைக்கான அனுமதியை அரசிடமிருந்து பெற்றுக் கொண்டதாக பல்வேறு தரப்புகளாலும் முன்வைக்கப்படுகிற ஆதாரப்பூர்வமற்ற தகவல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க தயாராகி வருகிறோம்.

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அடுத்தபடியாக பாராளுமன்ற தேர்தலை நோக்கி நாடு நகர்ந்து செல்கிறது. இந்நிலையில் என் மீதும் எனது தந்தையார் மீதும் பழி சுமந்தும் நோக்கில் சிலர் எந்தவிதமான ஆதாரமற்ற வீண் குற்றச்சாட்டுகளை தமது சுயலாப அரசியல் தேவைகளுக்காக முன்வைத்து வருகின்றனர். இந்த ஆதாரப்பூர்வமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைப்பது யார் என பார்த்தால் கடந்த காலத்தில் எம்மோடு நேரடியாக போட்டி போட்டு வெல்ல முடியாதவர்களே. இவ்வாறான பொய் குற்றச்சாட்டுகளை பரப்பி வருகின்றனர். ஒரு சில அரசியல்வாதிகளும், எமது சமூக சேவைக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களுமே இவ்வாறு பொய்யாக வாய்க்கு வந்தபடி பேசி வருகின்றனர்.

இவ்வாறானவர்களின் அர்த்தமற்ற பேச்சுகளுக்கு பதில் கூற வேண்டிய தேவை எமக்கில்லை. ஆனாலும் எம் மக்களை தெளிவுபடுத்த வேண்டிய தேவை நமக்கு உண்டு. அதனால் தான் சத்திய கடதாசி ஊடாக நாம் எமது ஆதாரங்களை முன்வைத்து, புதிதாக எந்த ஒரு மதுபான சாலை அனுமதியையும் அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்பதை மக்களுக்கு நிரூபித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்



தமிழ் மக்கள் தமது இருப்பை தக்க வைத்துக்கொள்ள தமிழர்களுக்கே ஆதரவளிக்க வேண்டுமென தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் தமது இருப்பை தக்க வைத்துக்கொள்ள தமிழர்களுக்கே ஆதரவளிக்க வேண்டும். பெரும்பான்மை கட்சிகளுக்கு ஆதரவளிப்பது மிக ஆபத்தானது.

அதேவேளை பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இழப்புக்களை பெருமளவில் சந்தித்தது பெண்களே. அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# அகில இலங்கை கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் இரண்டாமிடம்





பருத்தித்துறை விசேட நிருபர்

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாணத்தில் முதல் முறையாக இரண்டாமிடத்தை பெற்றுகொண்ட யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு யாழில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில ரீதியில் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கூடைப்பந்தாட்டப் போட்டியில் 17 வயது பிரிவில் இறுதி போட்டியில் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடம் அணியுடன் மோதிய யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு தனுஷ் ராஜசோபனா பயிற்றுவிப்பாளராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை அதிபர் மரியசீலி மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜசீலன், யாழ்ப்பாண வலய உடற்கல்வி உதவிக் பணிப்பாளர் சாரங்கன், ஆசிரிய ஆலோசகர் சசிகுமார் என பலரும் கலந்துகொண்டனர்.

# திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கண்காட்சி

கரவெட்டி தினகரன் நிருபர்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் 'சித்திர முத்திரைகள்' என்னும் ஓவிய, கைவினைப் பொருட்களின் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தையும் ஏனைய நுண்கலைக் பாடங்களையும் பயில்கின்ற மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற இக்கண்காட்சி இம்முறையுடன் எட்டாவது தடவையாக நடைபெறுகின்றது.

இக்கண்காட்சியில் அயல் பாடசாலைகளில் சித்திர பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களது ஓவிய, கைவினைப் பொருட்களும் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

'சித்திர முத்திரைகள்' கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும். இதன்போது சித்திரப் பாட ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ஜெயராணி அம்பலவாணர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி பிரதேச அலுவலகம் திறப்பு



சாவகச்சேரி விசேட நிருபர்

தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான அலுவலகம் நேற்றுமுன்தினம் மாலை ஏ 9 வீதி, சாவகச்சேரி பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமாகிய இராமலிங்கம் சந்திரசேகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களும் மேள வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளர் கருணாநாதன் இளங்குமரன் மற்றும் முன்னாள் மருத்துவ நிர்வாக அதிகாரி எஸ்.சிறீ.பவனந்தராஜா, அதிபர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன், தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி மகளிர் அணி அமைப்பாளர் வெண்ணிலா இராசலிங்கம், ஆசிரியர் காரளசிங்கம் பிரகாஸ், மென்பொருள் பொறியியலாளர் உதயகுமார் கீர்த்தி ஆகிய வேட்பாளர்கள் மற்றும் பிரதேசமக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# பெண்களால்தான் குடும்பச் சுமைகளை தெளிவாக புரிந்து கொள்ள முடியும்

## ஐ.ம.சக்தி வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரசிகா பிரியதர்சினி

வவுனியா விசேட நிருபர்



வன்னி மக்களின் நிலமையை புரிந்து வைத்துள்ள ஒரு பெண்ணாக என்னை கருதும் வன்னி மக்கள் எமக்கான ஆணையை வழங்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரசிகா பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் வன்னி மாவட்டத்தில் அதிகமான மக்கள் எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்து தமது ஆதரவை வழங்கியிருந்தார்கள். வன்னி மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கையே அதற்கு காரணம். அந்தவகையில் வன்னி மக்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலிலும் உங்கள் ஆதரவு எமக்கிருக்கும் என நம்புகின்றேன். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் ஒரு பெண் வேட்பாளராக உங்களில் ஒருவராக நான் போட்டியிடுவதால் எனக்கு ஆதரவளியுங்கள்.

ஒரு பெண்ணுக்கு தான் குடும்பத்திலுள்ள பிரச்சினைகள், குடும்ப சுமைகள் தெளிவாக தெரியும். அரசியலுக்கு வருவதற்கு முன்னரே மக்களுக்கான சேவைகளை வழங்குகின்றேன் என அவர் தெரிவித்தார்.

# ரூ.80 இலட்சம் மோசடி செய்தவருக்கு விளக்கமறியல்

யாழ்.விசேட நிருபர்

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி, ரூ.80 இலட்சத்தை மோசடி செய்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே இவ்வாறு 80 இலட்சம் ரூபாவை இழந்துள்ளார். பாதிக்கப்பட்ட இளைஞன் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், இளைஞனை ஏமாற்றி பணத்தை பெற்றுக்கொண்ட நபரை கைது செய்துள்ளனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன் 2024.10.16

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5627
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.34,100,300.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 8 9 8 5 6 6

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 202
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 8 5 6 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3869
சீட்டிழுப்பு திகதி 2024.10.16
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,546,555.20
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 13 17 25 59
விசேட எழுத்து O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 131816

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1975
2024.10.16
035048
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.449,781,418.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 08 18 20 35

VIP
திகதி 2024.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 453
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 3 1 1 8 5 5
L7 எழுத்து Q
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 21,209,533.76

ராசி சுப பலன்
திகதி 2024.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 936
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,298,956.00
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 22 34 43 52
தனயோக இலக்கம் 102169
நாளுக்கான விதி எண் 43

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1657
2024.10.16
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,010,105.28
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 14 23 64 74
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 101360

# சண்டிலிப்பாய் இந்து கல்லூரி 'நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 'நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும் 2024' நாளை சனிக்கிழமை 19ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அப்பாடசாலை பவள விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பாடசாலையின் அதிபர் வ. நந்தீஸ்வரன் தலைமை தாங்கவுள்ளதுடன், நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுப்பிரமணியம் ஜீவசுதனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் உதவி கல்விப் பணிப்பாளர் சோமசுந்தரம் கலாவண்ணனும், கௌரவ விருந்தினர்களாகவும் பிரித்தானியா பழைய மாணவர் சங்கத் தலைவர் சாருலதா ஆனந்தராஜாவும் பழைய மாணவர் தர்மலிங்கம் கேதீஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை ஓய்வுநிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் நிகழ்த்தவுள்ளார். நினைவுப் பேருரையை வலிகாமம் கல்வி வலயத்தின் ஓய்வுநிலை உதவி கல்விப் பணிப்பாளர் கலாநிதி சின்னையா குகநேசன் நிகழ்த்தவுள்ளார்.



கொழும்பு 15, காக்காதீவு விஹாரையில் அமைக்கப்பட்டுள்ள பிள்ளையார் திருக்கோவிலைப் படத்தில் காணலாம்.

படம் தினகரன் கொழும்பு வடக்கு நிருபர்.







சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதஸ்வாமி ஆலயத்தின் பிரதோஷ விசேட பூஜையின்போது, நடைபெற்ற அபிஷேகமும் சுவாமி ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

உடப்பு குறூப் நிருபர்

# இன்றைய பலன்கள்

(18.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்களும் வந்து இணைவர். நினைத்த காரியங்களை தீவிர முயற்சியுடன் செய்து முன்னேறுவீர்கள்.

**ரிஷபம் :**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் வருகையும் அவர்களால் பொருளாதார முன்னேற்றமும் உண்டு.

**மிதுனம்:**
சொந்தத் தொழிலில் பரபரப்பாக வேலை நடைபெறும். ஓய்வின்றி உழைப்பீர்கள். எதிர்பார்க்கும் பணம் கைக்கு வந்து சேரும்.

**கடகம்:**
உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சுமூகமாக நடந்து கொள்வீர்கள். வெளிநாட்டு தகவலில் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:**
அவசரமாக செய்து முடிக்க வேண்டிய காரியங்களை திட்டமிடுவீர்கள். முக்கிய நண்பர்களின் துணை கொண்டு கடினமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:**
பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். சகல விடையங்களிலும் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்:**
அலுவலகத்தில் தங்கள் எதிர்பார்ப்புகளை அடைவதில் சிக்கல் ஏற்படலாம். செய்யும் காரியங்களில் கவனமும் நிதானமும் தேவை.

**விருச்சிகம்:**
வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானமான முடிவை எடுங்கள்.

**தனுசு:**
சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் ஆதாயம் கிடைக்கும். வரவேண்டிய தன வரவுகள் தாமதம் இல்லாமல் வந்து சேரும்.

**மகரம்:**
எதிர்பார்க்கும் பண வரவு குறித்த காலத்தில் வந்து சேரும். எதிர்பார்த்திருந்த கடன் உதவியும் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:**
எதிர்பார்த்த பண வரவும் அலுவலகத்தின் மூலம் கிடைக்கப்பெறும். முயற்சியுடன் செயல்பட்டு காரியங்களில் வெற்றி அடைவீர்கள்.

**மீனம்:**
அனேக காரியங்களில் தீவிரமாக முயற்சி செய்தாலும் சில வற்றிலேயே எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கும்

## தேவையான நேரத்தில்...

விஜித ஹேரத் நேற்று (17) தெரிவித்தார்.

ஒவ்வொரு தனிநபரின் வாக்கு மூலங்களின் அடிப்படையில்,அதனை ஏன் வெளியிடவேண்டுமென கேட்ட அவர், பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், இந்த விவகாரம் சரியான முறையில் கையாளப்படுமென்றும் கூறினார்.

மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக சிறு பிள்ளைகள் விளையாட்டுப் பொருட்களை நிலத்தில் அடிப்பதுபோன்று, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில செயற்படுவதாக தெரிவித்த அமைச்சர், இவற்றுக்கு நாம் கலவரப்படத்தேவையில்லை. தேவைப்படும் போது அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## வாக்காளர் ஒருவருக்கு...

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க, இது தொடர்பான தெரிவித்துள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலில் நேற்றுமுன்தினம் (16) கையொப்பமிட்டு அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்டங்களின் அடிப்படையில் கொழும்பு 114 ரூபா, கம்பஹா 110 ரூபா , களுத்துறை 108 ரூபா, கண்டி 108 ரூபா, மாத்தளை 107 ரூபா,நுவரெலியா 110 ரூபா, காலி 109 ரூபா, மாத்தறை 109 ரூபா, ஹம்பாந்தோட்டை 111 ரூபா, யாழ்ப்பாணம் 100 ரூபா, வன்னி 82 ரூபா,மட்டக்களப்பு 110 ரூபா, திகாமடுல்ல 113 ரூபா , திருகோணமலை 115 ரூபா, குருநாகல் 107 ரூபா, புத்தளம் 109 ரூபா , அநுராதபுரம் 110 ரூபா,பொலன்னறுவை 109 ரூபா , பதுளை 109 ரூபா, மொனராகலை 110 ரூபா,இரத்தினபுரி 110 ரூபா,கேகாலை108 ரூபா வீதம் வாக்காளர் ஒருவருக்கு வேட்பாளர் ஒருவர் செலவிட வேண்டும் என,வரம்பெல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 2026 FIFA உலகக்...

சேர்ந்தவர். இலங்கை தமிழர் வம்சாவளியைச் சேர்ந்த அவரின் இந்த சிறப்பான ஆட்டம், அவுஸ்திரேலிய கால்பந்தாட்ட அணியை FIFA உலக கிண்ணத்தை நோக்கிய பயணத்துக்கு சிறப்பாக வழிவகுக்குமென இரசிகர்கள் தெரிவிக்கின்றனர்.

## பிரதமராக இருந்த காலத்தில்...

இச்சம்பவத்தின போது நான், பாராளுமன்றத்தில் இருந்தேன். அப்போது எனது மேசைக்கு ஒருவர் 05 மில்லியன் அமெரிக்க டொலர்களை எடுத்து வந்தார். எடுத்து வந்தவரிடம் பணத்தை எடுத்துக் கொண்டு இப்போது வெளியேறி விடுங்கள் என வலியுறுத்தினேன்.

எனது அரசிலிருந்த இளம் அமைச்சரின் கணவரால் அது கொண்டு வரப்பட்டது. நான், உன்னைக் கைது செய்வேன், இப்போதே வெளியேறு' என்று அவரிடம் சொன்னேன், என முன்னாள் ஜனாதிபதி பண்டாரநாயக்க அந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார்,

இந்நபருடன் சிங்கப்பூர் தொழிலதிபர் ஒருவரும் இருந்தார்.

ஊழலுக்குப் பழக்கப்பட்ட பெரியவர்களின் மனதை மாற்றுவது சாத்தியமில்லை. சிறு வயதிலிருந்தே இது தொடர்பான விழுமியங்களை வடிவமைக்க வேண்டியதன் அவசியத்தை இதன் போது வலியுறுத்தினார்.

எங்களிடம் ஒரு ஜனாதிபதி இருந்தார், அவர் உங்களால் முடிந்தவரை திருடுங்கள், ஆனால் பிடிபடாதீர்கள். இவ்வாறு அவர் தனது அமைச்சரவையிலும் தெரிவித்தார். இதை அவர், தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் கூறி வந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எல்லோரும் திருடினார்கள், யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த கட்டமைப்புதான் எமது நாட்டை சீரழித்துள்ளது' என்றும் சந்திரிகா தெரிவித்தார்.

## வலி. வடக்கு காணிகளை...

கூட்டம் ஒன்று நடைபெற்றது. இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக இதில், கலந்துரையாடப்பட்டது. இதன் போது, காணி தொடர்பாகவும் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் பல கோரிக்கைகளை முன் வைத்து, பலர் தமது மன ஆதங்கங்கள், வேதனைகளை தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வெளிப்படையாக தெரிவித்திருந்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்திருந்த சந்திரசேகர், வலி வடக்கு பிரதேசத்தில் உள்ள காணிகள் விடுவிப்பு சம்பந்தமாக ஏற்கனவே ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். இது தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி, விவரங்களையும் கோரியுள்ளார்.

எனவே, வலி வடக்கு பிரதேசத்தில் உள்ள இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள காணிகள் பெரும்பாலானவற்றை விடுவித்து தருவதாக, அங்கு கூடியிருந்த பொது அமைப்புக்கள் மற்றும் மக்களிடம் உறுதி மொழி அளித்தார்.

## பட்டுச் சாரிகளுக்குள்ளிருந்து...

சந்தேக நபரும் போதைப் பொருளுடன் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## இலங்கையரின்...

மத்திய கிழக்கில் பணிபுரியும் மற்றும் வசிக்கும் தனது நெருங்கிய உறவினருக்கு அவசர நிலை ஏற்பட்டிருப்பின், அது பற்றிய தகவல்களுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவைத் தொடர்பு கொள்ள முடியுமென்றும் இலங்கைவெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது. இதற்கான தொலைபேசி இலக்கங்களையும் வழங்கியுள்ளது.

அதன்படி 011 – 2338812 / 011 – 7711194 என்ற இலக்கங்களூடாகதொடர்பு கொள்ளுமாறும் அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

## சவூதி வழங்கிய 500...

அரேபிய தூதுவர் மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த வீட்டுத்திட்டம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர், இதனை . உடனடியாக பயனாளிகளுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சவூதி அரேபிய தூதரகம் தெரிவித்துள்ளது.

சவூதி அரேபிய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 500 வீட்டுத் திட்டம் பாழாகி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வீடுகளை புனரமைத்து மக்களிடம் ஒப்படைக்குமாறு திகவாபி புராண ரஜமஹா விகாரையின் விஹாராதிபதி சாஸ்த்ரவேத மஹாஓய சோபித தேரர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அரசாங்க இரகசியங்களை...

ஜனாதிபதியோ அல்லது குழுவோ இரகசிய அறிக்கையாகக் கருதினாலும், அவ்வாறான அறிக்கையை பகிரங்கப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கம்ம்ம்பில பகிரங்கப்படுத்தும் அறிக்கை பாதுகாக்கப்பட வேண்டிய அரச இரகசியம் என்றால், கம்மன்பில செய்வது குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றமாகும்.

எனவே, இப்பணியை கம்மம்பில கவனமாக செய்ய வேண்டும்.தவறினால், எங்கே சிக்குவாரென கூற முடியாது.

## கோடிகளை வாங்கியவர்களே...

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் 20 கோடி ரூபா பணம் வாங்கிவிட்டே தேர்தலில் போட்டியிட்டதாக, எதிரணி தரப்பில் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல வாக்குகளை சிதறடிப்பதற்காகவே நான் களமிறக்கப்பட்டுள்ளேன் என்றெல்லாம் தகவல்கள் பரப்பட்டன. ஆனால், இவை எதுவும் உண்மை அல்ல. எனது தந்தையின் நண்பர்களின் உதவியுடனே, பொதுத்தேர்தலை எதிர்கொண்டேன்.

தேர்தலில் மக்கள் எனக்கு ஆதரவு வழங்கி இருந்தனர். எனினும், பாராளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய வாக்குகளை நோக்கி நகரமுடியவில்லை.

இவ்வாறு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாததால், அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டேன்.

## வட, கிழக்கில் ஊழலை ஒழிக்க...

இதுபற்றித் தெரிவித்த அவர்: பொதுத் தேர்தலின் பின்னர் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் தரப்புக்களின் ஆதரவை நாடுவதற்கான தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்டால், தம்முடன் பேரம் பேசுவது கடினமானதாகவே இருக்கும்.

வடக்கின் இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடுகிறது.வெற்றியை நோக்கி என்பதைவிடவும், தெளிவான இலக்கினை நோக்கி பயணிக்கிறோம். இந்தத் தீவில் இரண்டு தேசங்கள் அங்கிகரிக்கப்படவேண்டும். சிங்கள தேசம் அங்கிகரிக்கப்பட்டு தமிழர் தேசம் அங்கீகரிக்கப்படாத நிலையால் மிகமோசமாக நாங்கள் பாதிக்கப்பட்டுள்ளோம்.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாயின் வட, கிழக்கிலிருந்து தெரிவாகும் பாராளுமன்ற உறுப்பினர்களில், தமிழ்தேசிய மக்கள் முன்னணி குறைந்தது 10 ஆசனங்களை பெற்றாக வேண்டும். இதுதான் எங்கள் இலக்கு என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மலையக மக்களுக்கு... (02ஆம் பக்கம் பார்க்க)

தேர்தலில் தோல்வியடையச் செய்வார்கள். அவர்கள் செய்த ஊழல்களுக்கு கிடைத்த பரிசாக அது அமையும்.

எதிர்வரும் காலங்களில் மலையகத்தில் ஊழலற்ற இலஞ்சமில்லாத நீதியான அரசியல் இடம்பெறும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## போக்குவரத்து, வீதி... (02ஆம் பக்கம் பார்க்க)

வகையில் ரயில் தண்டவாள வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டீ.எஸ். ருவன்சந்திர உட்பட அமைச்சின் அதிகாரிகள் பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## வரி ஏய்ப்புச் செய்த... (02ஆம் பக்கம் பார்க்க)

நிறுவனங்களின் பெயர்களை வெளியிட முடியாது என்று ம் அவர் தெரிவித்தார்.

3.5 பில்லியன் ரூபா வரி ஏய்ப்பு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜூன் அலோசியஸின் நீதிமன்ற கணக்கு இலக்கத்திற்கு வரிப்பணம் வரவு வைப்பது தொடர்பான விடயங்கள் நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளின் ஊடாக விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

வரி மோசடி தொடர்பில் உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் வழக்குத் தொடரும். ஆனால், தவறிய வரியை மீட்டெடுப்பதில் நீதிமன்றங்கள் அதிகார வரம்பைக் கொண்டிருக்கும்.

இதற்கமைவாக அர்ஜுன் அலோசியஸ் செலுத்த தவறியதாக குற்றம் சுமத்தப்பட்ட தொகை நீதிமன்றத்தின் சட்ட நடைமுறையில் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வரி ஏய்ப்பு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த பணத்தை செலுத்துவார்களா என்பதை நாட்டு மக்கள் காத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வெட் வரி ஏய்ப்பு தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மென்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் மீது, யாரேனும் ஒருவர் செலுத்த வேண்டிய கடனில் அல்லது அலோசியஸின் வங்கிக் கணக்குகளிலிருந்து 3.5 பில்லியன் ரூபாவை அவரது சொத்துக்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் சட்டரீதியான அனுகூலங்களைப் பெறுவதற்கு உரித்துடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிதி அதிகாரத்தை... (02ஆம் பக்கம் பார்க்க)

நாடுகள், மற்றும் தனியார் கடன் பத்திரம் வைத்திருப்பவர்கள் ஆகியோருடன் பேச்சுவார்தததை நடத்தி ஒப்பந்தம் செய்து கொண்டேன்.

இதற்கமைவாக நமது கடனை நீடித்து நிலைக்கக் கூடியதாக மாற்றுவது குறித்தும், பின்னர் நமது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து அகற்றுவது குறித்தும் ஒரு உடன்பாட்டை எட்டினோம். இந்த நடைமுறைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, இந்த ஆண்டு செப்டம்பர் முதல் வாரத்தில் தனியார் பத்திரதாரர்களின் இணக்கப்பாடும் பெறப்பட்டது.

இவ்வாறு நாம் ஏற்படுத்திக் கொண்ட முறையால், இப்போது எமக்கு வெளிநாட்டு வங்கிகளுடன் வர்த்தகம் செய்ய முடிகிறது. இதேபோன்று வெளிநாட்டு உதவியும் கிடைக்கிறது. எமது கடன் நிலைத்தன்மையின் காரணமாக வங்குரோத்து நிலை இப்போது முடிந்துவிட்டது.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கான பணிக்கு, நான் கடந்த பாராளுமன்றத்துடன் இணைந்து செயற்பட்டேன். இதற்காக அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று அந்த பாராளுமன்றத்துடன் இணைந்து பணியாற்றிய எனது அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## எவர் வெளியேறினாலும்... (02ஆம் பக்கம் பார்க்க)

தீர்மானித்தோம். அந்த தேர்தலில் சுமார் 95,000 வாக்குகளை சஜித்துக்குப் பெற்றுக் கொடுத்தோம்.

ஆனால், எமது தீர்மானத்துக்கு உடன்பட முடியாது எனக்கூறிய அப்துல்லா மஹ்ரூப் , அமைதியாக இருக்கப்போவதாகத் தெரிவித்தார். பின்னர், ரணிலின் தந்திரத்துக்குப் பலியாகி எமது கட்சியிலிருந்து தூரமாகி விட்டார்.

அப்துல்லா மஹ்ரூப் கட்சியின் வளர்ச்சிக்காக கடந்த காலங்களில் செய்த பணிகளுக்கு நன்றி கூறுகிறோம்.

2010 மற்றும் 2015 தேர்தல்களில் அவரை வேட்பாளராக நிறுத்தி வெல்ல வைத்ததும் எமது கட்சியே.இதற்காக இம்மாவட்டத்தைச் சேர்ந்த பலர் உழைத்தனர். இப்போது அப்துல்லா மஹ்ரூப் எங்களுடன் இல்லை.

எவர் வெளியேறினாலும் பறவாயில்லை. திறமையானவர்களை களத்துக்கு கொண்டு வந்து,கட்சியை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்வதே எமது இலக்காக இருக்கும்.

அந்த வகையில், டொக்டர் ஹில்மி மஹ்ரூபை பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்தி உள்ளோம். நகர சபைத் தவிசாளராக இருந்த இவரிடம் நிறைய அனுபவங்கள் உள்ளன.சிறந்த கல்விமானாகவும் ஒழுக்க சீலராகவும் இவரை நாம் பார்க்கிறோம்.

இறைவன் நாடினால் அவரது வெற்றி உறுதியாகும்.புல்மோட்டை முதல் தோப்பூர் வரை அவருக்கு ஆதரவு இருக்கிறது.

இம்மாவட்டத்தின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி உழைப்பதற்கு டொக்டர் ஹில்மி மஹ்ரூபை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்றும் ரிஷாட்பதியுதீன் தெரிவித்தார்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 117 வேன்கள் விற்பனைக்கு

SG JG-4368 DAIHATSU HIJET VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070707

252-0267 NISSAN SERENA VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070728

52-4867 MITSUBISHI DELICA VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070709

58-4784 NISSAN VANNETTE - 1992, VAN கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே. 0711210810/ 0714542958. 070858

58-9966 NISSAN CARAVAN VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070717

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

EP LH-7554 TATA LPK2516 TIPPER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070714

NC DAC-2875 TATA ACE XPRESS TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070712

NP LJ-3369 LANKA ASHOK LEYLAND DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070719

41-4880 ISUZU ELF TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070718

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

EP BJE-6680 BAJAJ DISCOVER 125 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070721

EP BJF-4716 RANOMOTO MOPED SUPER MOTOR BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070729

NP AAD-1502 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070722

QS-4204 BAJAJ- 2009, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே. 0711210810/ 0705999163. 070868

SG AAL- 1 875 PIAGGIO APE THRE E WHEELER அதியுயர் விலை க்குண்டு. செங்கட க ல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070711

SG YA-1523 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070727

UP AAI-0749 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070710

WP AAA-8394 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070715

YM-3574 BAJAJ - 2011, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு-03. தொ.பே. 0711210810/ 0705999163. 070856

### 124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு

SP SP-5 6 90 K UBOTA K08 NEW L ION HAND TR A CTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 070716

## வேலைவாய்ப்பு

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

கொழும்பு முன்னணி சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு சுத்திகரிப்புச் சேவையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். கவர்ச்சியான சம்பளம், சீருடை, ஊழியர் சேமலாப கொடுப்பனவு (கொழும்புக்கு அருகில் இருப்போர் விரும்பத்தக்கது.) அழையுங்கள் - 0766009055. 070657












# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14

## உடல் வலிமையிழப்பிற்குட்பட்டவர்களால் விசேட போக்குவரத்து வசதிகளைக் கோரல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 83(4)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம், உடல் வலிமையிழப்பிற்குட்பட்ட எவரேனுமொருவர் கால்நடையாகவோ, இலங்கை பொதுப் போக்குவரத்து சாதனமொன்றிலோ தமது வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு முடியாதவராக இருப்பின், குறித்த வாக்களிப்பு நிலையத்திற்குப் போய்வருவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களது பிரதேசத்திற்குரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் தானாகவோ அல்லது தனது சார்பாக மற்றொருவரோ, குறித்த நபர் வேட்பாளர், தேர்தல் முகவர், அதிகாரம் பெற்ற முகவர், பிரதேச முகவரொருவராக அல்லாத வேறொருவரினால் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க முடியும்.

02. இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும், பிரதேச செயலகங்களிலும், கிராம அலுவலர் அலுவலகங்களிலும் அல்லது www.elections.gov.lk இணையதளத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை தேர்தல் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பாக அதாவது 2024 நவம்பர் மாதம் 07 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய தெரிவத்தாட்சி அலுவலரிடம் (மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்) அல்லது மாவட்ட பிரதி அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்குச் (மாவட்டத் தேர்தல் அலுவலகம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விண்ணப்பத்தை சமர்ப்பிப்பவர், தன்னால் பொதுப் போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியோ அல்லது கால்நடையாகவோ வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்ல முடியாதென்பதை நிரூபிக்கக்கூடியவாறு, பதிவுசெய்யப்பட்ட வைத்தியரொருவரின் (மேற்கத்தேய, உள்நாட்டு) வைத்தியச் சான்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டிருப்பின், தெரிவத்தாட்சி அலுவலரால் அதற்கான தீர்மானம் மேற்கொள்வதற்குப் பெரிதும் உதவியாக அமையும். உடல் வலிமையிழப்பிற்கு உட்பட்டவராகவிருப்பவர், ஒரு அரச வைத்தியர், பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியர், ஆயுர்வேத வைத்தியர் ஒருவரிடம் சென்று எவ்வித கட்டணமுமின்றி தன்னை பரிசோதித்து வைத்திய சான்று வழங்குமாறு கோரமுடியும். தனியார் வைத்தியராகவிருப்பின் (மேற்கத்தேய அல்லது உள்நாட்டு) அவர் வழங்கும் சான்றிதழில் அவ்வைத்தியரின் பெயர், பதிவிலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேர்தல் ஆணைக்குழுவால் வலிமையிழப்புக்குட்பட்ட மற்றும் பார்வையிழப்பிற்குட்பட்ட நபர்களுக்காக விநியோகிக்கப்பட்ட 10 வருடங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்காலிக அடையாள அட்டையுடைவர்கள் வைத்திய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் அவசியமில்லை.

**ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க**
**தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு**
**தேர்தல் ஆணைக்குழு சார்பாக**

**தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,**
**சரண மாவத்தை, இராஜகிரிய.**

2024.10.18

## 2024/2025 ஆம் ஆண்டுக்காக களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் மத்திய வளிச்சீராக்கி அமைப்பின் தடுப்புப் பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தலுக்காக பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்கான அழைப்பு

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு 2024/2025 ஆம் ஆண்டுக்காக களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் மத்திய வளிச்சீராக்கி அமைப்பின் (NWB) தடுப்பு மற்றும் திருத்தப் பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தலுக்காக பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடம் இருந்து திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியிலான விலைமனு (NCB) முறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் கீழ் விலைமனுதாரர் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் மு.ப. 9:00 மற்றும் பி.ப. 2:30 இற்கு இடையே களுபோவில. கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளர் இடமிருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500.00 ரூபாவை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 2024.11.01 ஆம் திகதி வரை மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளரிடம் இருந்து ஆர்வமுடைய தகுதி பெற்ற விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனு 49 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.10.24 ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு பணிப்பாளரின் அலுவலகத்தில் இடம்பெறும்.
8. விலைமனுக்களை 2024.11.04 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 2025.01.18 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக 50,000.00 இலங்கை ரூபா தொகைக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் உள்ள புகழ்பெற்ற வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேல் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குப் பின் கீழுள்ள முகவரியில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**பணிப்பாளர்,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை - களுபோவில,**
**களுபோவில - தெஹிவளை**
**தொடைர்பு - 0112832950**
**தொலைநகல் - 0112765505**







# உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரி 1ஆவது பட்டமளிப்பு விழா – 2024

**(காலம் : 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.45; இடம் : ICST பல்கலைக் கழக பூங்கா)**

கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் மகளிர் மத்தியிலான ஆன்மீக எழுச்சியில் முக்கியமாக பங்காற்றும் ஒரு கல்வி நிறுவனமாக உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரி காணப்படுகின்றது.

எம்.பீ.சீ.எஸ். வீதி, மீராவோடை, ஓட்டமாவடி எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ள தாருஸ் ஸலாம் ஜும்ஆப் பள்ளிவாசலின் மேல் தளத்தில் தற்போது இக்கல்லூரி தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இப்பிரதேசத்தின் முக்கிய இஸ்லாமிய தஃவா அமைப்புக்களில் ஒன்றான ஜம்இய்யத்துல் தஃவத்தில் இஸ்லாமிய்யா கல்குடா என்ற நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் தஃவா செயற்பாடுகளின் ஓர் அங்கமாகவே இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளைக் கொண்டு இத்தகையதொரு கல்வி நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும் என்பது ஜம்இய்யாவின் நீண்டகால கனவாக இருந்து வந்தது. அதன் சிரேஷ்ட உலமாக்களும் உறுப்பினர்களும் மகளிர் பிரிவினரும் இதன் அவசியத் தேவையை அடிக்கடி வலியுறுத்தி வந்தனர். ஆயினும் இத்தகையதொரு மகளிர் கல்வி நிறுவனத்தை உருவாக்கிச் செயற்படுத்துவதில் உள்ள சிரமங்கள், பொருத்தமான இடம், பௌதீக வளங்கள், சவால்கள் என்பன குறித்து அதிகம் சிந்தித்தும் கலந்துரையாடியும் வந்ததால், 2010ஆம் ஆண்டு முதல் இவ்விடயம் ஜம்இய்யாவின் பேசு பொருளாகவே இருந்து வந்தது. ஆயினும் சிரேஷ்ட நிருவாகிகளின் அழுத்தமும் எத்தகைய சவால்கள் வந்தாலும் அவற்றை எதிர்கொள்வோம் என்று அவர்கள் ஊட்டிய தைரியமும் 2016.02.06ஆம் திகதி 12 மாணவியரைக் கொண்டு இக்கல்வி ஆரம்பிக்க துணை நின்றன.

அல்குர்ஆன் மற்றும் சரியான சுன்னாவை மூலாதாரமாகக் கொண்டு ஸலபுஸ் ஸாலிஹ் வழியிலான இஸ்லாமிய போதனைகளை மகளிர் மத்தியில் கொண்டு சேர்ப்பதிலும் ஷரீஆத்துறை பயிலும் மகளிர் மத்தியில் பொதுக் கல்வித் துறையில் ஓர் எழுச்சியை ஏற்படுத்துவதிலும் குறுகிய காலத்தில் இக்கல்வி நிறுவனம் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி இருக்கின்றது.



இப்பிரதேசத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவிகள் குறிப்பாக தனது க.பொ.த. உயர் தரத்தில் கலைத் துறையில் கல்வி கற்கும் ஆர்வம் கொண்ட மாணவிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்த கல்வி நிறுவனமாகவே இந்நிறுவனம் காணப்படுகின்றது.





கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி அடைந்த மாணவிகளை உள்வாங்கி அவர்களை சிறந்த முறையில் பயிற்றுவித்து, வருடாந்தம் பல்கலைக் கழகங்களுக்கு மாணவிகளை இக்கல்வி நிறுவனம் அனுப்பிக்கொண்டிருப்பதுடன் அவர்களில் திறமைமிக்கவர்களை பயிற்றுவித்து பருவ காலத்தில் இஸ்லாமிய பிரசார களத்திற்கும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மிகக்குறைந்த வளங்களுடன் தற்காலிகமான ஓர் இடத்தில் இக்கல்வி நிறுவனம் செயற்பட்டாலும் கடந்த எட்டு வருட காலத்தில் சுமார் ஐந்து தொகுதியைச் சேர்ந்த 64 மாணவிகள் இக்கல்வி நிறுவனத்திலிருந்து தமது கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளதுடன் அவர்களில் 38 மாணவிகள் இலங்கையின் பல்வேறு அரச பல்கலைக்கழகங்களில் தமது உயர்கல்வியை தொடர்ந்து வருவதுடன் ஒரு மாணவி சட்டமாணி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டு தனது உயர் கல்வியைத் தொடர்ந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

குறிப்பாக கடந்த ஆண்டு (2024) உயர்தர பரீட்சைக்கு கலைப் பிரிவில் தோற்றிய எமது கல்லூரியின் 18 மாணவிகளில் 16 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன் ஐந்து மாணவிகள் 3A சித்திகளைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். இப்பெரும் வெற்றிகளின் பின்புலத்தில் கூடிய அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஷரீஆத் துறை மற்றும் பொதுக் கல்வித் துறை ஆசிரிய ஆசிரியைகளின் பங்களிப்பு மகத்தானது. அவர்களது இவ்வொத்துழைப்பு கிடைத்திராவிடின் குறுகிய காலத்தில் இம்மகத்தான வெற்றிகளை நாம் அடைந்திருக்க முடியாது. அவர்கள் என்றென்றும் எமது விசேட நன்றிக்கு உரியவர்கள்.

எமது கல்லூரியில் கல்வி கற்கும் மாணவிகளின் எதிர்கால ஜீவனோபாயத் தேடலுக்கான சிறிய ஒத்தாசையாக மேலதிக இணைப் பாடவிதானமாக தையல் பயிற்சி நெறியும் பகுதி நேரமாக நடைபெறுகிறது. தனது கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவிகள் பலர் தத்தமது வீடுகளில் இருந்தவாறு சிறுகைத் தொழில் முயற்சியாக தையல் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். எதிர் காலத்தில் அமையவுள்ள இடவசதிகளைப் பொறுத்து இத்துறையை மேம்படுத்தவும் மேலும் பல தொழில்சார் பயிற்சி நெறிகளை உள்வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



படமும் தகவலும்: இக்பால் அலி

மேலும் மாணவிகள், எதிர்கால குடும்ப வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் இறுதி வகுப்பு மாணவிகளுக்கு குடும்ப உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறியும் துறைசார் ஆசிரியர்களைக் கொண்டு வழங்கப்படுகிறது.

நான்கு ஆண்டுகளைக் கொண்ட குறுகிய கால அதேவேளை மிகவும் செறிவான கல்வித் திட்டத்தை கொண்டு செயற்படும் இக்கல்வி நிறுவனம் விடுதி வசதிகள் எதுவும் அற்ற நிலையில் மாணவிகள் தினமும் தங்கள் வீட்டிலிருந்தே வருகை தந்து தமது கல்வி நடவடிக்கைகளை தொடரும் அமைப்பிலேயே தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

தற்போது 88 மாணவிகள் இக்கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று வருகின்றனர். காலை 7.45 மணி முதல் மாலை 5.30 மணி வரை இயங்கும் இக்கல்லூரியில் விடுதி வசதி இன்மையால் தினமும் பெற்றோர்கள் மாணவிகளுக்கான பகல் போசனத்தை மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் தங்களது வீடுகளில் இருந்தே கொண்டு வந்து வழங்குகின்றனர்.

பறகஹதெனிய ஜம்இய்யதுல் அன்சாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் 2005 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டு ஜம்இய்யாவினால் பராமரிக்கப்பட்டு வந்த, பிரதான வீதி, ஹிஜ்ரா நகர், நாவலடி, வாழைச்சேனை எனும் முகவரியில் (ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அருகில்) அமையப் பெற்றுள்ள காணியில் உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரிக்கான சகல வசதிகளுடனும் கூடிய நிரந்தர கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காணிக்கு முழுமையான சுற்று மதில் அமைக்கப்பட்டுள்ளதுடன் வகுப்பறைக் கட்டடட நிருமாணப் பணியும் உள்ளூர், வெளியூர் தனவந்தர்களின் நிதிப் பங்களிப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிருமாணப் பணிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவிய அனைத்து நல்லுள்ளங்களும் மிகுந்த நன்றிக்கு உரியவர்கள். ஜஸாகுமுல்லாஹு ஹைரா.

இன்ஷா அல்லாஹ் இம்முயற்சிகள் துரித கதியில் வெற்றி பெற்று சகல வசதிகளும் கொண்ட மிகப் பெரும் கல்வி நிறுவனமாக இந்நிறுவனம் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக...

ஆக்கம் : அஷ்ஷெய்க் ஏ.எல். பீர்முஹம்மது ( காஸிமி) எம்.ஏ ...

### தற்போதைய விரிவுரையாளர்கள்

01. அஷ்ஷெய்க் A.L முஹம்மத் (காஸிமி) MA. அதிபர்
02.அஷ்ஷெய்க் A.G சாதிகீன் (மதனி) BA.Hons. பிரதி அதிபர்
03.அல்–ஆலிமா M.S.F பஹ்மிதா (பாஸியா) மேற்பார்வை ஆசிரியை
04.அஷ்ஷெய்க் V.T.M முஸ்தபா (தப்லீகி) ஆசிரியர்
05.அஷ்ஷெய்க் M.T அப்துல் ரஹ்மான் (அஸ்ஹரி) M phil ஆசிரியர்
06.அஷ்ஷெய்க் H.L.M முஹைதீன் (பலாஹி) PhD. ஆசிரியர்
07.அல்–ஆலிமா M.H.F. மஸ்வியா (ஸஹ்ராவியா) BA. ஆசிரியை
08.அல்–ஆலிமா M.S.F ஸஹ்னாஸ் (சுலைமியா) ஆசிரியை
09.அஷ்ஷெய்க் A.L.M பைரூஸ் (ஹாமி) BA, Dip in Couns. ஆசிரியர்
10.N.M பியாஸ் MA, PGDE, SLTS – 1 ஆசிரியர்
11.M.L நௌபியா பயிற்றுவிப்பாளர்
12.அல்–ஆலிமா A.நிரோஸா (சுலைமியா) ஆசிரியை
13.H.F ஹிக்மா BSc ஆசிரியை
14.M.B ஜெமீல் BA, PGDE, TKT, Dip in Eng, SLPS – 111 ஆசிரியர்
15.அஷ்ஷெய்க் M.B.M ஷியாம் (ஹலீமி) BA, ஆசிரியர்
16.அல்–ஆலிமா M.B. முபீனா (சுலைமியா) ஆசிரியை

## கல்லூரியின் நிருவாகத் தலைவர் சட்டத்தரணி எம்.எம்.எம். ராஸிக்



உம்முசுலைம் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா நடைபெறுவதையிட்டு நான் அதன் நிர்வாக சபைத்தலைவர் என்ற வகையில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாத் தொகுதியில் 2016 ஆம் ஆண்டு 12 மாணவிகளோடு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக அல் குர்ஆன், அஸ் ஸுன்னாவின் அடிப்படையில் மகளிர் மத்தியில் மார்க்கக் கல்வியினை போதிப்பதில் தன்னால் முடியுமான முழுப் பங்களிப்புகளையும் செய்துகொண்டிருக்கிறது.

மார்க்கக் கல்விக்கு மேலதிகமாக, அரச பாடத்திட்டத்திற்கு அமைவாக க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையினை சிறப்பாகக் கற்பித்து மாணவிகளின் பல்கலைக்கழகக் கனவை நனவாக்குவதில் முன்னணி வகிக்கிறது. இதுவரையில் எமது கல்லூரியில் இருந்து 19 மாணவிகள் இலங்கை பல்கலைக்கழகங்களில் தங்களது பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், 2024 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட க.பொ.த. உயர்தர பெறுபேற்றின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய 18 மாணவிகளில் 16 பேர் பல்கலைக் கழக நுழைவுக்கான வாய்ப்பினை பெற்று இப்பிரதேசத்தில் வரலாற்று சாதனையை எமது கல்லூரியின் மாணவிகள் படைத்துள்ளனர்.

மேலும், அரபு, ஆங்கிலமொழிப் புலமையோடு வாராந்த தர்பிய்யா, மாணவியர் மன்றங்கள், மாதாந்த சன்மார்க்க விளக்கச் செயலமர்வுகள் என பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து மாணவியரைப் நெறிப்படுத்தி தூய இஸ்லாமிய கொள்கையை இளம் யுவதிகளுக்கு கற்பித்து சிறந்த தாயியாக்களையும், குடும்பத் தலைவிகளையும் உருவாக்கும் உன்னத பணிக்கென உத்வேகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இதுவரை எமது கல்லூரியில் இருந்து நான்கு தொகுதி மாணவிகள் அதாவது 64 மாணவிகள் மௌலவிய்யாக்களாக வெளியேறி இருக்கின்றார்கள். ஒவ்வொரு தொகுதி மாணவிகள் வெளியாகும் போதும் அவர்களுக்கென்று தனித்தனியாக பட்டமளிப்பு விழாவினை நடத்த முடியாத ஒரு சூழ்நிலையில் இதுவரை எமது கல்லூரியில் இருந்து வெளியேறிய அனைத்து மாணவிகளையும் உள்ளடக்கியதாக முதலாவது பட்டமளிப்பு விழாவாக இன்றையநாளில் நாங்கள் பெருமையுடன் நடத்திக் கொண்டிருக்கின்றோம். அல்ஹம்து லில்லாஹ்

மேலும் இன்றைய தினம் பட்டங்களை பெறுகின்ற அனைத்து மாணவிகளும் இக்கல்லூரியில் கற்றுக்கொண்ட விடயங்களை தங்களது வாழ்க்கையில் எடுத்து நடந்து உன்னத வாழ்வினை வாழ வாழ்த்தி அவர்களுடைய இம்மை, மறுமை வாழ்வும் சிறக்க வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எல். பீர்முஹம்மது காஸிமி (எம்.ஏ)



உம்முசுலைம் மகளிர் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா இன்றைய தினம் நடைபெறுவதையிட்டு அதனுடைய அதிபர் என்றவகையில் பெருமிதம் அடைகின்றேன்.

இஸ்லாமிய சமூகத்தில் பெண்ணானவள் அவளது இயல்புக்கும் இயலுமைக்கும் ஏற்ற வகையில் சமூக அந்தஸ்தும் முக்கியத்துவமும் பெறுகின்றாள். அவளது முக்கியத்துவத்திற்கு ஏற்ப தனிமனித, குடும்ப, சமூக உருவாக்கத்தில் அவளது பொறுப்பும் கடமையும் மிகவும் மகத்தானது. அவளுக்கு முறையான இஸ்லாமிய அறிவையும் கொள்கையையும் ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுத்து சமகால சமூக சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலையும் மேம்படுத்திவிடுவது சிறந்ததொரு சமுதாய உருவாக்கத்திற்கு அஸ்திவாரமிடும் பணியாகும். அந்தவகையில் இலங்கையிலுள்ள பல்வேறு மகளிர் இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள் தங்கள் இயலுமைக்குட்பட்ட சமூகப் பங்களிப்பைச் செய்து வருகின்றன.

அதன் ஒருதொடர்ச்சியே உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரி. எமது கல்லூரி, அது உருவாக்கப்பட்டு எட்டு ஆண்டுகளே பூர்த்தியாகியுள்ள நிலையில் மிகக் குறைந்த வளங்களோடு பல தசாப் தங்கள் கடந்த வரலாற்றைக் கொண்ட மகளிர் கல்லூரிகளுடன் போட்டியிடும் அளவுபெரும் வளர்ச்சி அடைந்திருப்பது கண்டு மகிழ்வடைகிறேன்.

இவ்வளர்ச்சியில் என்னோடு இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஆசிரியர் குழாம், பணியாளர்கள், பொருளாதார ரீதியிலும் முகாமைத்துவ ரீதியிலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் நிருவாகிகள் மற்றும் பொருளாதார ரீதியில் எமக்கு உதவி செய்துகொண்டிருக்கும் தனவந்தர்கள், நலன்விரும்பிகள் என்றென்றும் நன்றிக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்கள். இக் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகள் கல்வியில் மென்மேலும் சிறக்கவும் தான் கற்ற கல்வியைக் கொண்டு தானும் பயன் பெற்று தான்சார் குடும்பமும் சமூகமும் பயன்பெற பிரார்த்திக்கின்றேன்.

## அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்குடா கிளையின் தலைவர்



கல்குடா உலமா சபை சார்பாக, உம்மு சுலைம் மகளிர் அறபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற வேண்டுமென முதலில் நான் பிரார்த்திக்கிறேன்.

நமது நாட்டில் சிறந்த இலக்குகள், திட்டங்களுடனும் உறுதியான கட்டமைப்பின் கீழ் இயங்கிவரும் குறிப்பிடத்தக்க மகளிர் அறபுக் கல்லூரிகள் வரிசையில் உம்மு சுலைமும் ஒன்றாகும். இக்கல்லூரி குறுகிய காலப்பகுதிக்குள் தனக்கெனதொரு நற்பெயரையும், இடத்தையும் பெற்று சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு தசாப்த கால எல்லைக்குள் பன்முக ஆளுமை கொண்ட மகளிர் அணியொன்றை உருவாக்கி வெற்றி கண்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும். 'முன்மாதிரியான சமூகம், அமைதியான தேசம்' இவை இரண்டும் இன்று எமது நாடு வேண்டி நிற்கும் மிகப்பெரும் தேவையாகும். இவற்றை அடையும் பயணத்தில் ஆண், பெண் இரு தரப்பினரதும் காத்திரமான பங்களிப்புக்கள் இன்றியமையாதவைகளாகும். பெண்கள் இணையாத அல்லது அவர்களைத் தவிர்த்த ஒரு சமூக, தேச மாற்றம் சாத்தியமற்றது. வரலாற்று நெடுகிலும் சமூக மாற்றங்களின் முகவர்களாக ஆண்களைப் போல பெண்களினதும் காத்திரமான பங்களிப்பு இருந்து வந்துள்ளமையை அறியமுடிகின்றது.

சமகாலத்திலும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் இஸ்லாமிய எழுச்சி அலையின் பங்காளிகளாக உயிர்த்துடிப்புள்ள பெண்கள் அணிகள் இருக்கின்றார்கள் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். அந்தவகையில் அறிவு, ஆன்மீகம், பண்பாடு, சமூக உணர்வுகளால் வளர்க்கப்பட்ட உயிர்த்துடிப்புள்ள மகளிர் அணியொன்றை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். இம்மகத்தான பணியை நிறைவேற்றுவதில் உம்மு சுலைமின் பங்கு மகத்தானது.

**அஷ்ஷெய்க் எம்.எம். தாஹிர் (ஹாமி)**

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் நவாஸ்



கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் இயங்கிவரும் உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரி மகளிர் மத்தியிலான ஆன்மீக எழுச்சியில் முக்கியமான பங்காற்றும் ஒரு கல்வி நிறுவனமாக காணப்படுகின்றது. அல்குர்ஆன் மற்றும் சரியான சுன்னாவை மூலாதாரமாகக் கொண்டு இஸ்லாமிய போதனைகளை மகளிர் மத்தியில் கொண்டு சேர்ப்பதிலும் ஷரீஆத் துறையில் மகளிர் மத்தியில் மற்றும் பொதுக் கல்வித் துறையில் ஓர் எழுச்சியை ஏற்படுத்துவதிலும் இக்கல்வி நிறுவனம் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வருகின்றது.

கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை எழுதிய மாணவிகள் குறிப்பாக தனது க.பொ.த. உயர் தரத்தில் கலைத் துறையில் கல்வி கற்கும் ஆர்வம் கொண்ட மாணவிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்த கல்வி நிறுவனமாகவே இந்நிறுவனம் காணப்படுகின்றது. நவீன சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சிறந்த ஆலிமாக்களையும் தாயியாக்களையும் மேலும் சமூகப் பொறுப்புள்ள பெண்களையும் மார்க்கப்பற்றுள்ள குடும்பப் பெண்களையும் உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

நிபுணத்துவம் வாய்ந்த பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் இயங்கும் அனுபவமும் அறிவும் சிறந்த கல்வித்தரமும் கொண்ட ஆசான்களின் கற்பித்தல் செயற்பாடுகள் சிறந்த பயன்களை ஈட்டித்தரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இப்பணியில் பல்வேறு தியாகங்களுடனும் அர்ப்பணிப்புகளுடனும் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் சிறப்பான வாழ்வினையும் பூரண நற்கூலிகளையும் வழங்குவானாக!

## ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவின் தலைவர்



இஸ்லாத்தில் பெண்களுக்கான அறிவுத் தேடலும் பங்களிப்பும் உன்னதமானது. ஸஹாபியப் பெண்கள் அறிவுத் தேடலை ஓர் ஆன்மீகக் கடமையாக முன்னெடுத்துச் சென்றார்கள். இதனால்தான் வரலாற்றில் அவர்கள் உன்னதமானவர்களாக போற்றப்படுகின்றார்கள். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க பாதையில் நமது இளம் பெண்களையும் உள்வாங்கச் செய்து இஸ்லாத்தின் போதனைகளை புகட்ட வேண்டுமென்ற நோக்கில் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

மிக எளிமையான முறையில் ஓட்டமாவடி மஸ்ஜித் தாருஸ் ஸலாம் வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி மிகக்குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்திருப்பது அல்லாஹுத்தஆலா செய்த பெரும் அருளாகும். சமுதாயத்தின் வளர்ச்சியில் பெண்களில் பங்கை உணர்ந்தவர்கள் சமூக ஆர்வளர்கள், புத்திஜீவிகள், தனவந்தர்கள் இக்கல்லூரியின் தொடரான வளர்ச்சிக்கு பெரும் பங்காற்ற கடமைப்பட்டுள்ளனர்.

பல தசாப்தகால தஃவா, கல்வி, சமூகப் பணிகளில் ஓட்டமாவடிப் பிரதேசத்தில் தடம்பதித்திருக்கின்ற ஜம்இய்யதுல் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா அமைப்பு இக்கல்லூரியின் கல்விப் பயணத்தில் பங்களிப்புச் செய்ய இன்ஷா அல்லாஹ் காத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சிகரமான இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறுவதில் பெருமிதமடைகின்றேன்.

**அஷ்ஷெய்க். என்.பீ. முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி,**

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# மக்களுக்கு இடையிலான பிளவுகளை களைந்த இஸ்லாம்



மனிதர்கள் வாழக்கூடிய இடமாகப் பூமியைப் படைத்து, அதிலே வாழக்கூடிய மனித குலத்தையும் படைத்தவன் தான் அல்லாஹ். அதனால் தான் அவன் தன்னை ரப்புல் ஆலமீனாக உலகுக்கு அறிமுகப்படுத்துகிறான். உலகத்தார் அனைவருக்குமான இரட்சகன் அல்லாஹ் ஒருவன் தான்.

அல்லாஹுத்தஆலா தனது இறுதித் தூதரை உலகுக்கு அனுப்பும் போது அவரை ரஹ்மதுன் லில் ஆலமீனாகவே அனுப்பி வைத்தான். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் உலக மக்கள் அனைவருக்குமான அருட்கொடையாக உலகில் தனது பணியை முன்னெடுத்தார்கள்.

இந்த வகையில் அல்லாஹுத ஆலா உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான கடவுள் என்பதும் முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு மனித சமூகத்துக்குமான தலைவர் என்பதுமே இஸ்லாம் முன்வைக்கின்ற கோட்பாடாகும்.

மனிதர்கள் அனைவரும் ஒரே ஆணிலிருந்தும் ஒரே பெண்ணிலிருந்தும் படைக்கப்பட்ட ஒரு மனிதக் குடும்பம் என்பதாகவே இஸ்லாம் கருதுகிறது. 'மனிதர்களே, நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்துமே படைத்தோம். நீங்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைப் பல கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்... (4913) என்று அல்லாஹுத்தஆலா கூறுவதில் இருந்து மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட ஒரே குடும்பத்தினரே என்பதும் அவர்கள் பல பிரிவுகளாக ஆக்கப்பட்டிருப்பது ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காகவேயன்றி மக்களைப் பிரித்து வைப்பதற்காகவல்ல என்பதும் தெளிவாகிறது.

மக்காவில் வாழ்ந்த ஜாஹிலிய்யத் சமூகத்தில் அற்பக் காரணங்களும் அவர்களைப் பிளவுபடுத்துவதாக இருந்தன. கோத்திரங்களுக்கிடையில் வரும் சண்டைகள் அவர்கள் பிளவுபடுவதற்கு காரணமாக அமைந்திருந்தன. குலப்பெருமை, குடும்ப கௌரவம் ஒருவரை ஒருவர் உயர்ந்தவராகப் பிரித்து வைத்திருந்தது. இதனால் ஓயாத சண்டைகளும் சச்சரவுகளும் அன்றாட நிகழ்வுகளாகி அந்தச் சமூகத்தின் முன்னேற்றத்துக்கே முட்டுக்கட்டையாக அமைந்திருந்தது.

இச் சமூகத்துக்கு மத்தியில் இருந்த பிளவுகளையெல்லாம் களைவதற்காக அரும்பாடுபட்ட நபியவர்கள் தமது இறுதி ஹஜ்ஜில் உரையாற்றும் போது, 'மக்களே, நிச்சயமாக உங்களது இறைவன் ஒருவனே, உங்கள் தந்தையும் ஒருவரே. நீங்கள் எல்லோரும் ஆதமின் மக்கள். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர். அரபிகளை விட மற்றையவர்களோ, மற்றையவர்களை விட அரபிகளோ மேலானவர்களல்லர். வெள்ளையர் கறுப்பரை விடவோ கறுப்பர் வெள்ளையரை விடவோ மேலானவர்கள் அல்லர் என்று கூறினார்கள்.

ஒருமுறை நபியவர்களின் சன்னிதானத்தில் அபூதர் அல் கிபாரி (ரழி) அவர்களுக்கும் அபீஸீனியாவைச் சேர்ந்த ஒரு கருப்பு அடிமையின் மகனுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. தர்க்கம் சூடு பிடித்து இருவருக்குமிடையில் கோபம் மேலோங்கியது. கோபம் மேலோங்கிய அபூதர் (ரழி) அவர்கள், தன் பிரதிவாதியைப் பார்த்து கறுப்பியின் மகனே என்று கூறிவிட்டார்கள். இதைக் கேட்ட நபியவர்கள், பேச்சு எல்லை மீறிவிட்டது. இறையச்சத்தினாலன்றி கறுத்த பெண்ணின் மகனை விட வெள்ளைப் பெண்ணின் மகனுக்கு எந்தச் சிறப்புமில்லை எனக் கூறி தோழர் அபூதர் (ரழி) அவர்களைக் கண்டித்தார்கள். கோபத்தின் காரணமாக தம் நிதானத்தை இழந்திருந்த அபூதர் (ரழி) அவர்களுக்கு நபியவர்களின் இந்த எச்சரிக்கை வசனங்கள் மிகுந்த மனத்தாக்கத்தை ஏற்படுத்தியது. நிலத்தில் தனது தலையை வைத்துப் படுத்து, நான் செய்த இந்தத் தவறுக்காக உங்களது காலால் எனது கன்னத்தை உதையுங்கள் என்று அந்த அடிமையிடம் கூறினார்கள்.

முஸ்லிம்களை மட்டுமன்றி முஸ்லிம் அல்லாதவர்களையும் நபி (ஸல்) அவர்கள் மனிதன் என்ற குடும்பத்துக்குள்ளால் வைத்தே நோக்கினார்கள். யூதர் ஒருவருடைய ஜனாஸா தம்மைக் கடந்து சென்ற போது எழுந்து நின்ற நபியவர்கள், இதுவும் அல்லாஹ்வுடைய ஆத்மாதான் எனக் கூறினார்கள். நீதி செலுத்துவதிலும் நபியவர்கள் மனிதன் என்ற அந்தஸ்தை மாற்று மதத்தினருக்கும் வழங்கினார்கள். தமது கொள்கையை உயிரிலும் மேலாக மதித்த நபியவர்கள், தமது கொள்கையுடன் அடுத்தவர்கள் முரண்படும் போது உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு, எங்களது மார்க்கம் எங்களுக்கு எனக் கூறி அடுத்தவர்கள் தனது கொள்கையை ஏற்காவிட்டாலும் மனிதர்கள் என்ற ரீதியில் அவர்களுடன் பண்பாக நடந்து கொண்டார்கள்.

எனவே ஆதமின் (அலை) பிள்ளைகள் அனைவரும் சமமானவர்கள், அவர்கள் மனிதர்கள் எனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், மனிதர்களுக்கிடையே பிளவுகள் இருக்க முடியாது என்பதே அல்லாஹ்வின் கட்டளையும் ரஸூல் (ஸல்) அவர்களது வாழ்க்கை முறையுமாகும். இதற்கு மாற்றமாக மனிதர்கள் தமக்கிடையே பிளவுகளை ஏற்படுத்திக் கொள்வது அல்லாஹ் மனிதனுக்குப் புரிந்த அருளுக்கு மாற்றமானது என அல்லாஹுத்தஆலா கூறுகின்றான். அல்லாஹுத்தஆலாவை தனது இறைவனாக ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் இந்த அருளை ஏற்றுக் கொள்கிறார்கள். முஸ்லிம்கள் அல்லாஹ்வை தமது இறைவனாக ஏற்றுக்கொண்டவர்கள் என்ற வகையில் அவர்கள் ஒரே குடும்பத்தின் சகோதரர்களாக மாறுகின்றார்கள். இந்த சகோதரர்களுக்கிடையே பிளவுகள் வராமல் அல்லாஹ்தஆலா அருள்புரிகின்றான்.

இது குறித்து அல்லாஹுத்தஆலா குறிப்பிடும் போது, "உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் விரோதிகளாயிருந்தீர்கள். அவன் உங்கள் இதயங்களுக்குள் அன்பையூட்டி ஒன்று சேர்த்தான். எனவே அவனுடைய அருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள். அதற்கு முன்னர் நீங்கள் நரக நெருப்பின் விளிம்பில் இருந்தீர்கள். அதிலிருந்து அவன் உங்களைக் காப்பாற்றினான்.. (3103) என்று கூறுகின்றான்.

அதற்கு முன்னர் நீங்கள் நரக நெருப்பின் விளிம்பில் இருந்தீர்கள் என்று அல்லாஹுத்தஆலா சொல்வது அவர்கள் தமக்கிடையே பிளவுபட்டிருந்ததையாகும். அதனால் தான் அவர்களை ஒன்று சேர்த்ததை அல்லாஹ் அருளாகக் குறிப்பிடுகின்றான்.

இது தொடர்பாக அல்குர்ஆன் கூறும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மனிதர்கள் எந்த நிலையில் இருந்தாலும் பயபக்தி உடையவர்கள் மாத்திரமே சிறந்தவர்கள் எனக் கூறுகிறது. இந்தவகையில் மனிதர்களைப் பிரித்துப் பார்க்க முடியுமாக இருப்பது அவரவருடைய இறையச்சத்தைப் பொறுத்து மாத்திரமே என அல்லாஹ்வும் அவனது தூதரும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

இப்படிப் பார்க்கும் போது சின்னச் சின்ன விடயங்களுக்காகவெல்லாம் தமக்கிடையே பிளவுபட்டுக் கொள்பவர்கள் அல்லாஹ்வின் அருளை இழந்தவர்களாகவே கருதமுடிகிறது. ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய ஆறு கடமைகள் இருக்கின்றன. சந்தித்தால் ஸலாம் சொல்வது, அழைப்புக்கு பதிலளிப்பது, தேவைப்படும் போது உபதேசிப்பது, தும்மினால் பதிலளிப்பது, நோய்வாய்ப்பட்டால் தரிசிப்பது, மரணித்தால் மரணச்சடங்கில் கலந்து கொள்வது என்று நபியவர்கள் கூறியிருக்கிறார்கள். (ஆதாரம்: முஸ்லிம்). குறைந்தபட்சம் இந்தக் கடமைகளைக் கூட தமக்கிடையே பிளவுபட்டவர்கள் நிறைவேற்றாமல் இருப்பது தாம் நபியவர்களின் போதனைக்கு மாற்றமாகச் செயற்படுபவர்கள் என்பதைப் பறைசாற்றுவதாகவே அமைகிறது.

தமது கருத்தில் உள்ளவர்களே சிறந்தவர்கள் என்றும் கருத்து வேறுபாடுபட்டவர்கள் மோசமானவர்கள் அல்லது நரகவாசிகள் என்றும் பிரிக்கும் போது உங்களில் அல்லாஹ்விடத்தில் சிறந்தவர் இறையச்சம் (தக்வா) உடையவர்களே என்ற அல்லாஹுத்தஆலாவின் மதிப்பீடு பொய்ப்படுத்தப்படுகிறது.

ஆதமின் பிள்ளைகள் என முழு மனித குலத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்த இஸ்லாம், எந்தக் காரணத்துக்காகவும் எந்த மனிதனையும் மனித குலத்தில் இருந்து பிரித்துப் பார்க்குமாறு ஏவியதில்லை. இந் நிலையில் இந்த இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் தமக்கிடையே அடுத்தவனை மனிதனாகவே பார்க்க முடியாத அளவுக்கு பிளவுகளை உருவாக்கிக் கொள்ளும் போது அவர்கள் அல்லாஹ்வின் அருளை இழந்தவர்களாகவே கருதப்பட வேண்டியிருக்கிறது.

பியாஸ் முஹம்மத்...



# பிறர் குறை தேடுவதை தவிர்ப்போம்!

இஸ்லாம் மனித சமுதாயத்தை நேர்வழியில் இட்டுச் செய்வதுடன் மனித வாழ்வின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் காத்திடும் உயர் மார்க்கமாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு முஸ்லிமினதும், உரிமைகளையும், கௌரவத்தையும், கண்ணியத்தையும் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அல்குர்ஆனும் நபியின் வழிமுறைகளும் எமக்குக் காட்டி நிற்கின்றன.

உண்மை முஸ்லிமின் நற்பண்புகளில் ஒன்று தன் சகோதர முஸ்லிமுடைய கண்ணியத்தைப் பாதுகாப்பதாகும். அத்துடன் பிறர் குறைகளை மறைப்பதும் அவரது கடமையாகும். திருமறையும், நபி மொழியும் முஸ்லிம்களின் குற்றம் குறைகளைத் துருவி ஆராய்ந்து அவர்களது கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கும் பண்புடையோரை வன்மையாகக் கண்டிக்கின்றது.

எவர்கள் (இதற்குப் பின்னரும்) விசுவாசிகளுக்கிடையில் இத்தகைய மானக்கேடான வார்த்தைகளைப் பரப்ப விரும்புகின்றார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு. (அல் குர்ஆன் 24:19)

எவருடைய குற்றத்தையும் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். (அல்குர்ஆன் 49:12)

மேலுள்ள இறைவசனங்கள் இஸ்லாமிய சமூகத்தில் வாழ்பவர்கள் இழிவான, கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருப்பதுடன் பிறரது அந்தரங்கங்களில் தலையிடாமலும், பிறர் குறைகளைப் பகிரங்கப்படுத்தாமலும் வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது. இதே கருத்தை நபி (ஸல்) அவர்களின் வாக்கும் வலியுறுத்துகிறது.

ஓர் அடியானின் குறையை மற்றொரு அடியான் மறைத்தால் அவனது குறையை அல்லாஹ் மறுமை நாளில் மறைக்கின்றான். (ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

ஒரு அடியான் தன் சகோதர முஸ்லிமைத் திருத்த நாடினால், அவனது குறையைப் பகிரங்கப்படுத்தலாகாது. இது அவனைக் கேவலப்படுத்துவதாகவே அமையும். இது எவ்வகையிலும் நிவாரணமாகாது. உண்மை நிவாரணம் யாதெனில் இம் மனிதர்களிடம் சத்தியத்தை எடுத்துரைத்து நன்மைகளில் ஆர்வத்தை ஏற்படுத்தி, இழிசெயல்களின் மீது அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த வேண்டும். பண்பான முறையில் இரகசியமாகத் தனிமையில் மென்மையும், நேசமும் கொண்ட வார்த்தைகளால், கண்ணியமான நடவடிக்கைகளினால் அவர்களது மூடிய இதயத்தைத் திறந்து தூய்மைப்படுத்த முடியும். இதனால் தான் இஸ்லாம் முஸ்லிம்களின் குறைகளைத் துருவி ஆராய்வதைத் தடைசெய்துள்ளது. எனவே தான் நபி (ஸல்) அவர்கள், என்னுடைய தோழர்களில் யாரும் யாரைப் பற்றியும் எந்தக் குறையையும் என்னிடம் கொண்டுவந்து விடவேண்டாம். என்னுடைய உள்ளம் உங்கள் அனைவரைப்பற்றியும் நல்லெண்ணம் கொண்ட நிலையில் நான் உங்களிடம் வருவதையே விரும்புகிறேன் என அருளினார்கள். (நபிமொழி)

ஆனால் நாம் இலகுவாக எவர் மீதும் குறைகூறி பிறரது உள்ளத்தை வேதனைப்படுத்தி விடுகின்றோம். ஆனால் எம்மில் உள்ள குறைகளை மறந்து விடுகிறோம். பிறரின் சாதாரண குறையும் எமக்கு பெரிதாகத் தென்படுகிறது. ஆனால் தன்னுடைய பெரும் பெரும் குறைகள் எவருக்கும் தென்படுவதில்லை.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள், 'மனிதனுக்குத் தன் சகோதரனுடைய கண்ணிலுள்ள ஒரு சிறு துரும்பும் தென்பட்டு விடும். ஆனால் தன் கண்ணிலுள்ள பெரும் மரத்தைக் கூட அவன் மறந்து விடுகிறான்.'

நாமும் எவர்மீதும் குறைகூறி அவர்களை நோவினைப்படுத்துவதில் நின்றும் தவிர்ந்து வாழப்பழக வேண்டும். ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் 'யாரசூலல்லாஹ் எந்த முஸ்லிமுடைய இஸ்லாம் சிறந்தது?" என ஸஹாபாக்கள் கேட்டனர். எந்த முஸ்லிமுடைய நாவை விட்டும், கரத்தை விட்டும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றுள்ளனரோ அவருடைய இஸ்லாம் தான் சிறந்தது' என்று ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (ஆதாரம்: புஹாரி)

இன்னுமொரு தடவை நபி (ஸல்), 'நாவால் ஈமான் கொண்டு இதயத்தில் ஈமான் நுழையாதவர்களே! விசுவாசிகளை நோவினை செய்யாதீர்கள். பிறர் குறைகளை துருவி ஆராயாதீர்கள். எவன் தனது சகோதர முஸ்லிமின் குறையை துருவி ஆராய்கிறானோ அவனது கௌரவத்தை அல்லாஹ் அழித்து விடுவான். எவன் தனது சகோதரனின் குறையை ஆராய்கிறானோ அவன் தனது வீட்டுக்கு மத்தியில் இருந்தபோதும் அல்லாஹ் அவனைக் கேவலப்படுத்துவான், என எச்சரித்தார்கள். (நபிமொழி)

ஆகவே பிறரை குறை கூறும் இழிவான குணத்திலிருந்தும் அல்லாஹ் எம்மைப்பாதுகாத்திடட்டும்.

யாழ் அஸீம்...

# வாக்குரிமையை பயன்படுத்துவது எவ்வாறு?

முஸ்லிம்கள் தாய் நாட்டின் நலன்களுக்காக உழைப்பதும் பாடுபடுவதும் ஒரு தவிர்க்க முடியாத வணக்கமாகும். தாய் நாட்டை கட்டியெழுப்புவதில் பங்காளிகளாக இருப்பது ஒவ்வொரு குடிமகன் மீதுமுள்ள தார்மீகக் கடமையாகும்.

ஒரு முஸ்லிம் சிறந்த நாகரீகத்தின் விழுமியங்களை பரப்புரை செய்வதை தனது வாழ்வியல் கடமையாகவே கருதுவான். அந்த வகையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் குடிமகன் தனது நாட்டின் அரசியல் வாழ்விலும் தேர்தல் வழிமுறைகளிலும் முன்மாதிரியாக நடந்து கொண்டால் அதுவே ஒரு சிறந்த, உயர்ந்த விழுமியமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

'இரண்டு தீமைகளில் தாக்கம் குறைந்ததை தெரிவு செய்தல்' என்பது ஒரு சட்ட விதியாகும். இதே கருத்தை கொடுக்கும் இன்னும் பல சட்டவிதிகள் நிறையவே காணப்படுகிறன்றன. இந்த சட்டவிதிகள் அரசியல் செயற்பாட்டில் எமது வகிபாகம் எப்படி அமைய வேண்டும் என்பதையும் கற்றுத் தருகிறது. நன்மை, நலன்கள் மாத்திரம் உள்ள ஒரு விடயத்தை தெரிவு செய்வது இலகுவானதே. தீமை மாத்திரம் உள்ள ஒன்றை தவிர்ந்து கொள்வதும் இலகுவானதே.

நன்மை தீமை இரண்டும் கலந்த அல்லது இரண்டு தீமைகளில் பாதிப்பு குறைந்த தீமையை தெரிவு செய்வது என்ற நிலை வரும் போது சொந்த நலன் பாராது ஷரீஆவின் நிலைகளில் நின்று குறைந்த பாதிப்பை தரும் தீமையை தெரிவு செய்வது ஆகுமானதே என இந்த சட்ட விதி கூறுகிறது.

எனவே பாராளுமன்றம் செல்வது அல்லது நாட்டினதும் மக்களினதும் நலன்கருதி ஒரு கட்சியுடன் கூட்டிணைவதும் அல்லது இரு வேட்பாளர்களில் இருவருமே பொருத்தமற்றவர் என்று கருதப்படும் போது ஒருவரை ஒப்பீட்டு ரீதியில் முற்படுத்தி தெரிவு செய்வதுவும் ஆகுமானதே என்ற கருத்தை இந்த விதி தருகிறது. 'நலன்களை நிலை நிறுத்துவதை விடக் கேடுகளை தடுப்பது முதன்மையானது' என்பது இன்னொரு முக்கியமான சட்டவிதியாகும்.

சிறுபான்மையாக இருந்து அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்வதன் மூலம் தேச நலன்களையோ, சமூக மேம்பாட்டையோ அடைவது எப்படிப்போனாலும் கூர்மையடைந்துள்ள தீமைகளை குறைப்பது முதல் கட்ட தேவையாகும். எனவே கூர்மையடைந்துள்ள அதிகார வெறியை, அரசியல் சீர்கேடுகளை குறைப்பதற்காக தேர்தல் என்ற ஆயுதத்தை பயன்படுத்துவது கண்டிப்பான தேவையாகும்.



இது நலன்களை பெறுவதை விட தீமைகளை தடுப்பது முதன்மை படுத்தப்பட வேண்டிய அணுகுமுறையாகும். இந்த விதி நமது வாக்குரிமையை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதற்கு வழிகாட்டுகிறது. இந்த விதிக்கு சீராவிலிருந்து ஒரு சான்றாக பின்வரும் சம்பவத்தை குறிப்பிடலாம்.

நபி (ஸல்) அவர்கள் புனித கஃபாவை இப்ராஹீம் (அலை) அவர்கள் கட்டிய அதே அடித்தளத்தில் மீண்டும் இடித்துக் கட்டுவதை மிகவும் விரும்பினார்கள். இருப்பினும் புதிதாக இஸ்லாத்தை தழுவியர்கள் மத்தியில் அது குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கஃபாவின் மீது வைத்துள்ள மதிப்பும் கண்ணியமும் மாசுபடும் என்ற கருதுகோளில் கஃபாவை புனர்நிர்மானம் செய்வதை நபிகளார் கைவிட்டு விட்டார்கள்.

கஃபதுல்லாவை ஆதியில் இருந்த அத்திவாரத்தில் கட்டுவது சர்வதேச உம்மத்துக்கான ஒரு பொது நலன். அதனால் உருவாகும் பித்னா அந்த நலனை மிகைத்துவிடும் தீங்காகும். எனவே தீங்கை தடுப்பதை இங்கு நபி (ஸல்) முதன்மை படுத்தியுள்ளார்கள்.

இந்த சம்பவம் புஹாரியில் பதிவாகியுள்ளது.

எனவே எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் அரசியல் தீமைகளை தவிர்ந்து கொள்வதற்காக நமது வாக்குரிமையை பயன்படுத்துவது அல்லது சிவில் அரசியலில் ஈடுபடுவது கடமையாகும். நன்மைகள் கிடைக்காது என்றிருப்பினும் தீமைகள் குறைவதற்கு அது பயன்படுமே என்ற சிந்தனையே நாம் கருத்திற் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். நலன்களை முற்படுத்தி தீமைகளை தவிர்ப்பதற்கோ அல்லது அழிவுகளை, சேதங்களை குறைப்பதற்கோ சிவில் அரசியல் செயற்பாடு ஒரு சிறந்த ஆயுதமாகும்.

சிறுபான்மைக்கான அரசியல் போராட்டத்தில் வாக்குரிமை என்பதும் மாற்றத்திற்கான மிக முக்கிய சாதனமாகும். அதனை மிகச்சரியாக பயன்படுத்துவதற்கு இந்த சட்டவிதிகள் துணை நிற்கிறது. தாய் நாட்டின் குற்றச் செயல்களை ஒழித்து நீதி, நேர்மை, இனங்களுக்கு இடையிலான சௌஜன்யம், சமாதானம், பொருளாதார சுபீட்சம் போன்றவற்றை உருவாக்குவதற்கான தேர்தல் அரசியல் ஒரு சாத்வீக போராட்ட வழிமுறையாகும்.

இத்தகைய சிவில் அரசியல் செயற்பாட்டிக்காக ஒத்துழைப்பது நாட்டின் பெருந் தீமையொன்றை ஒழிப்பதற்கு செய்யும் உதவியாகும். நமது வாக்குரிமையை அத்தகைய மாற்றத்திற்காக பயன்படுத்துவது நிச்சயமாக ஒரு வணக்கமாகும்.

தூய எண்ணத்துடன் அது நடந்தால் கூலி நிச்சயம். அல்லாஹ் விளைவுகளை பார்த்து கூலி வழங்குவதில்லை. எண்ணத்திற்கே வெகுமதி தருகின்றான்.

முஹம்மத் பகீஹுத்தீன்...

# சர்வதேச செய்திகள்

# வடக்கு காசாவில் முற்றுகையை இறுக்கும் இஸ்ரேல் லெபனான், சிரியாவில் தாக்குதல்

## யெமன் மீது அமெரிக்கா தாக்குதல்: ஈரான் மீண்டும் எச்சரிக்கை

ஓர் ஆண்டை கடந்திருக்கும் காசா போர் தற்போது பிராந்தியம் எங்கும் பரவி உள்ள சூழலில் சிரிய கடற்கரை நகர் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி இருப்பதோடு யெமனில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது.

லெபனானில் புதிய வெளியேற்ற உத்தரவைப் பிறப்பித்து இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் ஈரான் மீது தாக்கினால் கடுமையான பதில் தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் நேற்று மீண்டும் எச்சரித்தது.



இந்நிலையில் காசா நகரில் இஸ்ரேல் நேற்று நடந்திய வான் தாக்குதலில் 11 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரம் தெரிவித்திருக்கும் அதேநேரம் ஜபலியா அகதி முகாமுக்கு இஸ்ரேலிய டாங்கிகள் ஊடுருவி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கு காசாவில் நிலவும் உணவு மற்றும் மருந்துகளுக்கான பற்றாக்குறை தொடர்பில் பலஸ்தீனர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டு வருகின்றனர்.

ஜபலியாவில் இஸ்ரேலியப் படைகள் வான் தாக்குதல் நடத்தியும், டாங்கிகள் மூலம் செல் குண்டுகளை வீசியும், குண்டுகளை வைத்தும் வீடுகளை தகர்த்து வருவதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். பாடசாலை ஒன்றில் அடைக்கலம் பெற்றிருக்கும் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்களை வெளியேற்றும்போது வீசப்பட்ட செல் குண்டுத் தாக்குதலில் அவர் சிக்கியதாக காசாவின் சிவில் அவசரப் பிரிவு தெரிவித்தது.

காசா நகரில் இருந்து தூர வடக்காக பெயித் ஹனூன், ஜபலியா மற்றும் பெயித் லஹியா பகுதிகளை இஸ்ரேலியப் படையினர் தனிமைப்படுத்தி இருப்பதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இப்பகுதிகளில் இருந்து வெளியேறுபவர்களுக்கு இந்த முற்றுகை கடைப்பிடிக்கப்படுவதில்லை.

'நாம் எமது மரண சாசனத்தை எழுதி வருவதோடு ஜபலியாவில் இருந்து நாம் வெளியேறப்போவதில்லை' என்று குடியிருப்பாளர் ஒருவர் 'சாட் ஏப்' செயலி வழியாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

'போரின் ஆரம்ப காலத்தில் எமது வீடுகளில் இருந்து வெளியேறாததற்கு ஆக்கிரமிப்பாளர்கள் (இஸ்ரேல்) எம்மை தண்டித்து வருகின்றனர். இப்போதும் கூட நாம் வெளியேறப்போவதில்லை. அவர்கள் எமது வீடுகள் மற்றும் வீதிகளை தகர்த்து எம்மை பட்டினியில் வைக்கிறார்கள். என்றபோதும் நாம் இறப்போமே ஒழிய எமது கௌரவத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம்' என்று தமது பெயரைக் குறிப்பிடாத நான்கு குழந்தைகளின் தந்தை ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் வசித்து வந்த வடக்கு காசா, போரின் ஆரம்பக் கட்டத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் சின்னபின்னமாக்கப்பட்டது. தற்போது அங்கு நான்கு இலட்சம் வரையான பலஸ்தீனர்கள் எஞ்சி இருப்பதாக நம்பப்படுகிறது.

காசாவுக்கான உதவிகள் செல்வது மற்றும் போர் வலயங்களில் விநியோகங்கள் தடுக்கப்பட்டு வருவதாக ஐ.நா. குற்றம்சாட்டி வருகிறது. இதில் வடக்கு காசாவுக்கு கடந்த ஒக்டோபர் 2 மற்றும் 15 ஆம் திகதிக்கு இடையே எந்த உணவு உதவிகளும் செல்லவில்லை என்று ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் ஜோர்தான் வழங்கிய உணவு, நீர், மருந்துகள் மற்றும் தங்குமிட உபகரணங்களை ஏற்றிய 50 லொறிகள் வடக்கு காசாவுக்கு சென்றதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது.

காசாவுக்கு உதவிகளை அனுமதித்ததாக இஸ்ரேல் இராணுவத்தின் கூற்று தவறான வழிநடத்தலாகும் என்று காசாவின் அரச ஊடகப் பணிப்பாளர் இஸ்மைல் அல் தவப்தா குறிப்பிட்டுள்ளார். 'இஸ்ரேல் இராணுவம் பொய் கூறுகிறது, உணவு லொறிகள் நுழைவது தொடர்பில் பொதுமக்களை தவறாக 'வழிநடத்த முயற்சிக்கிறது' என்று அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

அனைத்து மனிதாபிமானப் பாதைகளையும் மூடி காசாவின் தூர வடக்கே தொடர்ந்து 170 நாட்களாக இஸ்ரேல் இராணுவம் விரிவான முற்றுகையை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 10 நாட்களில் இங்கு இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 342 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

'வெளியேற்றும் திட்டம் ஒன்றாக இனச்சுத்திகரிப்பு, குடியிருப்புப் பகுதிகள், வீடுகள், விதிகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், பள்ளிவாசல்கள் மற்றும் உட்கட்டமைப்புகளை அழித்தது வடக்கு காசாவில் இனப்படுகொலை ஒன்றே இடம்பெற்று வருகிறது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

காசாவில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக இடம்பெற்று வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,400ஐ தாண்டியுள்ளது.

**சிரியா, யெமனில் தாக்குதல்**

சிரியா, யெமனில் ஹுத்தி கிளர்ச்சியாளர்கள், லெபனானில் ஹிஸ்புல்லா மற்றும் காசாவில் ஹமாஸ் ஈரான் ஆதரவு பெற்ற கூட்டணியாக கருதப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஒக்டோபர் 1ஆம் திகதி இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய 200க்கும் அதிகமான ஏவுகணைகளுக்கு பதிலடி கொடுப்பதில் இஸ்ரேல் தொடர்ந்து உறுதியாக உள்ளது.



இது பல முனைகளில் இடம்பெற்று வரும் போரை பிராந்திப் போராக மாற்றும் அபாயம் குறித்து எச்சரிக்கப்பட்டு வருகிறது.

'தவறு செய்து பிராந்தியத்தில் அல்லது ஈரானில் எமது இலக்குகள் மீது தாக்குதல் நடத்தினால் வலிமிக்க பதில் தாக்குதலை நாம் நடத்துவோம்' என்று ஈரான் புரட்சிக் காவல் படை தளபதி ஹுஸைன் சலாமி எச்சரித்துள்ளார்.

கடந்த மாதம் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்ட தெற்கு பெய்ரூட்டில் இடம்பெற்ற இஸ்ரேலின் தாக்குதலின்போது பலியான ஈரானிய ஜெனரல் ஒருவரின் இறுதிக் கிரியையில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத்தின் கோட்டை என கருதப்படும் லடகியா நகரில் நேற்று முன்தினம் (16) இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் இரு பொதுமக்கள் காயமடைந்ததாக சிரிய அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

'ஹிஸ்புல்லாவுக்குச் சொந்தமான அயுதக் கிடங்கு ஒன்றை இலக்கு வைத்தே இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாக பிரிட்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இஸ்ரேல் தரப்பில் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

மறுபுறம் இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா பி2 குண்டுவீசும் விமானத்தைக் கொண்டு ஹூதி கட்டுப்பாட்டு யெமன் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

ஆயுதக் கிடங்குகளை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணுவம் மற்றும் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பி2 என்பது 40,000 பௌண்ட் குண்டுகளுடன் அமெரிக்காவில் இருந்து இரகசியமாக இடைவிடாது பயணிக்கும் திறன் கொண்டது என்று அமெரிக்க விமானப்படை அதன் இணையதளத்தில் தெரிவித்துள்ளது. நவீன ரக விமானங்களில் அதிக எடையுடைய ஆயுதங்களை சுமக்கக்கூடிய விமானமாக இது உள்ளது.

லெபனானில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் கிழக்கு லெபனானில் பக்கா பள்ளத்தாக்கில் உள்ள மக்களுக்கு இஸ்ரேல் புதிய வெளியேற்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இது ஹிஸ்புல்லா அமைப்பு பலம்பெற்ற பகுதியாக உள்ளது.

இஸ்ரேலுடனான லெபனான் எல்லையில் மற்றொரு இஸ்ரேலிய டாங்கியை அழித்ததாக ஹிஸ்புல்லா போராளிகள் நேற்றுத் தெரிவித்தனர். இங்கே இரு தரப்புக்கும் இடையே உக்கிர மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## ட்ரம்பின் பிரசாரத்திற்கு மஸ்க் 70 மில். டொலர் நன்கொடை



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக உலகப் பணக்காரர்களில் ஒருவரான எலன் மஸ்க் 70 மில்லியன் டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 05 ஆம் திகதி அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இத்தேர்தலின் நிமித்தம் பிரசாரம் சூடு பிடித்துள்ளன.

இந்நிலையில் குடியரசு கட்சி அபேட்சகரை தீவிரமாக ஆதரிக்கும் எலன் மஸ்க் பென்சில்வேனியாவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் ட்ரம்புடன் பங்கேற்றார். இந்நிலையில் ட்ரம்பின் பிரசார நடவடிக்கைகளுக்காக இந்நிதியை எலன் மஸ்க் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

---

## பங்களாதேசத்தில் எட்டு தேசிய தினங்கள் ரத்து



பங்களாதேசத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருந்த எட்டு தேசிய தினங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. இதற்கான அறிவிப்பை புதிய இடைக்கால அரசு விடுத்துள்ளது.

அவாமி லீக் கட்சி தலைமையிலான கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த எட்டு தேசிய தினங்களும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

பங்களாதேசத்தின் விடுதலைப் போருக்கு தலைமை தாங்கிய முன்னாள் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையைக் குறிக்கும் மார்ச் 7 ஆம் திகதி, சிறுவர் தினமாக அறிவிக்கப்பட்டிருந்த முஜிபுர் ரஹ்மானின் பிறந்த நாளான ஒகஸ்ட் 5 ஆம் திகதி, அவர் படுகொலை செய்யப்பட்ட ஆகஸ்ட் 15 ஆம் திகதி உள்ளிட்ட எட்டு தேசிய நினைவு தினங்கள் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த நினைவு தினங்கள் இனிமேல் கடைப்பிடிக்கப்பட மாட்டாது என்று இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

---

## மூன்றாவது வருடமாக மெட்டா ஆட்குறைப்பு




உலகின் முன்னணி சமூக ஊடகங்களின் நிறுவனமாக விளங்கும் மெட்டா நிறுவனம் மூன்றாவது வருடமாக தமது நிறுவனத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

வட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், த்ரெட்ஸ், பேஸ்புக் ஆகிய சமூக ஊடகங்களின் நிறுவனமாக மெட்டா விளங்குவது தெரிந்ததே.

மார்க் சொல்பேர்க் உரிமையாளராக விளங்கும் மெட்டா நிறுவனம், செலவுக் குறைப்பு திட்டத்தின் கீழ் கடந்த 2022 முதல் ஆட்குறைப்பு நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் 2022 இல் 11 ஆயிரம் பேரும் 2023 இல் 10 ஆயிரம் பேரும் இந்நிறுவனம் பணி நீக்கம் செய்துள்ளது. என்றாலும் இவ்வருட ஆட்குறைப்புக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் எவ்வளவு தொகையானோர் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர் என்பதை மெட்டா நிறுவனம் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

---

## இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதி நிறுத்தப்படும் – இத்தாலி பிரதமர்



இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்படும் என்று இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று லெபனானுக்கு விஜயம் செய்யவிருப்பதாக நேற்று முன்தினம் அவர் அறிவித்துள்ளார்.

காசா மீது ஒரு வருடத்திற்கு மேலாக முன்னெடுக்கப்படும் யுத்தம், அதன் விளைவாக அங்குள்ள மக்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகள் மற்றும் தெற்கு லெபனானில் கடமையாற்றும் ஐ.நா. அமைதி காக்கும் படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டமை, அவர்களை அங்கிருந்து வெளியேற கூறியமை போன்ற விடயங்களில் கவனம் செலுத்திய இத்தாலிய பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இத்தாலியில் இருந்து இஸ்ரேலுக்கு இராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்வதற்கான அனைத்து புதிய உரிமங்களுக்கும் உடனடியாக நிறுத்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேல் முன்னெடுக்கும் போருக்கு அமெரிக்கா, இத்தாலி உள்ளிட்ட நாடுகள் ஆயுத உதவி அளித்து வருகின்றன.

இந்நிலையிலேயே இத்தாலி இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறது.

---

## யுத்த விமானங்கள் தாய்வானுக்குள் பிரவேசித்ததாக குற்றச்சாட்டு



சீனா விமானப்படையின் 20 போர் விமானங்களும் 08 யுத்தக் கப்பல்களும் தாய்வான் எல்லைக்குள் நேற்று காலையில் அத்துமீறி பிரவேசித்ததாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.

சீனாவின் போர் விமானங்களும் யுத்தக்கப்பல்களும் தாய்வானின் இறையாண்மைப் பிராந்தியத்திற்குள் உள்ளூர் நேரப்படி காலை 6 மணியளவில் அத்துமீறிப் பிரவேசித்ததாக வரைபடங்களுடன் தாய்வான் பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள தாய்வான் பாதுகாப்பு துறை அதிகாரிகள், தாங்கள் சூழலை கண்காணித்து வருவதாகவும், சூழலுக்கு ஏற்ப செயல்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

தாய்வான் அமெரிக்காவிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்திருக்கும் நிலையில், அந்நாட்டின் வான் எல்லையை ஒட்டிய பகுதிகளில், சீனாவின் யுத்த விமானங்கள் பறந்துள்ளன. அத்தோடு கடல் எல்லையையும் சீனாவின் கடற்படை கப்பல்கள் மீறியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தாய்வானின் தேசிய தினம் கொண்டாடப்பட்ட போது தாய்வான் எல்லையில், சீன விமானப்படையும் கடற்படையும் இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டன.

அப்பயிற்சியில் 125 போர் விமானங்களும், போர்க் கப்பல்களும், சீனாவின் மிகப் பெரிய விமானம் தாங்கி கப்பலான லியோனிங்கும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

## ஆசியாவின் சிறந்த நிதி நிலையமாக ஹொங்கொங்

சுதந்திரமான பொருளாதாரம் கொண்ட நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூரை முந்தி கொங்ஹொங் முதலிடம் பெற்றுள்ளது.



உலகின் பொருளாதார சுதந்திரம் குறித்து ஃப்ரேசர் நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

சுதந்திரமான பொருளாதாரம் என்பது தனியார் நிறுவனங்களுக்கு குறைவான அரச கட்டுப்பாடுகள் இருப்பதும், சுதந்திரமான பொருளாதாரம் கொண்ட சந்தையின் விலைகள் தேவை மற்றும் வழங்கல் அடிப்படையில் நிர்ணயிப்பதும், குறிப்பாக இதற்குள் அரசின் தலையீடு எதுவும் இல்லாமல் இருப்பதும் ஆகும்.

இந்த ஆய்வில் சிங்கப்பூர் 8.55 புள்ளிகள் பெற்றுள்ள நிலையில் ஹொங்கொங் 8.58 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன்படி ஆசியாவின் சிறந்த நிதி நிலையமாக ஹொங்கொங் உருவெடுத்துள்ளது. பொருளாதார சுதந்திரம் கொண்ட நாடுகளின் பட்டியலில் 3 ஆவது இடத்தில் சுவிட்சர்லாந்தும் 4 ஆம் இடத்தில் நியூசிலாந்தும் 5 ஆம் இடத்தில் அமெரிக்காவும் உள்ளது. 3.02 புள்ளிகள் பெற்று வெனிசுலா கடைசி இடத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.



# வெலம்பொட முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பழைய மாணவிகளின் ஒன்றுகூடல் நிகழ்வு

கண்டி மாவட்டத்தில் உடுநுவர தேர்தல் தொகுதியில் உடுநுவர கதுபலாத்தப் பகுதியில் அமைந்துள்ள பிரதேசமே வெலம்பொட ஆகும். வரலாற்றுச் சான்றுகளின்படி கி.பி 1610 ஆம் ஆண்டு சிங்கள அரச குடும்பத்துக்கு வைத்தியம் செய்த காரணத்தினால் வழங்கப்பட்ட "சன்னச" உயில் மூலமான 600 ஏக்கர் பரப்பைக் கொண்ட பகுதியே வெலம்பொட கிராமம் என்பது கோடிட்டுக் காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இப்பிரதேசத்தின் எல்லையில் 1917ஆம் ஆண்டு தனியார் கட்டிடமொன்றில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பள்ளிக்கூடமே இன்று முஸ்லிம் மகா வித்தியாலயமாக வளர்ந்தோங்கி நிற்கிறது என்றால் மிகையில்லை. இச்சிறுவர் கல்விக்கூடமே 1929 இல் தற்போதைய பாடசாலை அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. முதல் கட்டடம் ஓலைக் குடிசையாகும். இதற்குரிய காணியைக் காலஞ்சென்ற இராஜ கருண வைத்திய திலக முதியன்சலாகே பெறத்கே வலவ்வ சேகு முஹம்மத் உடையாரின் தந்தையினால் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1929ஆம் ஆண்டு அதிபராக கார்த்திகேசு என்பவர் கடமையாற்றினார் என்று அறிய முடிகிறது. இப்பாடசாலையின் முதல் மாணவன் மர்ஹூம் என். எல்.ஏ லதீப் ஆவார்.

ஆரம்ப நிலையில் தரம் ஐந்து வரை காணப்பட்ட இப்பாடசாலை, பின் வந்த காலகட்டத்தில் படிப்படியாக வளர்ச்சி கண்டு தற்போது உயர்தர கலை வர்த்தக பிரிவுகளை உள்ளடக்கிய பாடசாலையாக மிளிர்கின்றது.

வைத்தியர்களையும் பொறியியற் துறை சார்ந்தவர்களையும் வர்த்தகத் துறை சார்ந்தவர்களையும் பட்டதாரிகளையும் உருவாக்கிய பாடசாலையாக மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் ஏனைய துறைகளிலும் பல ஆளுமைகளை உருவாக்கிய பெருமையைக் கொண்டது என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

பரந்த விளையாட்டு மைதானத்தை தன்னகத்தே கொண்ட பாடசாலையாக இது மிளிர்கிறது. கணினி கற்றல் நிலையம், கணினிப் பிரிவு, தொழில்நுட்ப ஆய்வு கூடம் போன்றவை இப்பாடசாலை பௌதீக ரீதியாக வளர்ச்சி பெற்றுள்ளது என்பதைச் சான்று பகர்கின்றது.

ஆரம்பப் பிரிவு முதல் உயர் தரம் வரை இயங்கிய இக்கலையகம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு ஆரம்பப் பிரிவு வேறொரு பிரிவாக 2013ஆம் ஆண்டு முதல் சுயமாக இயக்கம் பெற்றது. அதனையடுத்து இடைநிலைப்பிரிவும் உயர் தரப்பிரிவும் கொண்டமைந்த பாடசாலையாக இது மாற்றம் பெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்தி நிர்வாகக்குழு என்பன தொடர்ச்சியாக தங்கள் பங்களிப்பை செய்து வந்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

2017 ஆம் ஆண்டு ஒரு நூற்றாண்டைக் கண்ட இக்கல்விக்கூடம் துரதிஷ்டவசமாக நூற்றாண்டைக் கொண்டாடத் தவறிவிட்டது என்பது கசப்பான உண்மையாகும்.

நீண்ட காலத் தேவைகளில் ஒன்றான "பழைய மாணவியர் சங்கம் " கால நெடுகிலும் பேசப்பட்டு வந்தாலும் அதற்கான வாய்ப்பும் வசதியும் 2023ஆம் ஆண்டே அமைந்தமை ஒரு வரப்பிரசாதமாகும். பழைய மாணவியர் சங்கம் என்ற அமைப்பு இக்கலைகூடத்தில் 2023.05.06ஆம் திகதி அப்போதைய அதிபர் M.R.M. அனஸ் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டது.

இதன் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் கொழும்பு பல்கலைக்கழக புவியியற் பீட தலைவி திருமதி பரீனா ருசைக் எல்லோராலும் வேண்டப்பட்டார். இவர் இப்பாடசாலையின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. எமது சங்கத்தின் இலக்கு "பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் நாமும் ஒரு பங்காளியே " என்பதாகும்.

இப்பழைய மாணவியர் சங்கம் அன்றிலிருந்து இன்று வரை பல வேலைத் திட்டங்களை மும்முரமாக எடுத்து வந்தது. விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சியை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் நடத்தியது. அத்தோடு பிரதான மண்டபத்துக்கு ஒரு இலட்சத்து எழுபதினாயிரம் பெறுமதியான கதிரைகளைப் பெற்றுக் கொடுத்தது. மேலும், சாதாரண தர மாணவர்களுக்கு கணித கருத்தரங்குகளை நடத்தியது.

அத்தோடு, ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் வேறான க/அமீனியா ஆரம்ப பாடசாலைக்கும் இப்பழைய மாணவியர் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கேட்போர் கூடத்துக்கான கதிரைகளையும் கையளிக்கவுள்ளது.

புதிய அதிபரின் வருகையோடு ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்களில் நிர்வாக முகாமைத்துவ அலுவலகமொன்று இல்லாமை பெரும் குறைபாடாகக் காணப்பட்டது. அதனை நிவர்த்தி செய்யுமுகமாக குறைபாடுகளுடன் இருந்த கட்டடமொன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பூரணமான நிர்வாக அலுவலகமாக மாற்றி புதுப்பொழிவுடன் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்காக இப்பழைய மாணவியர் சங்கம் பத்து இலட்சம் ரூபாய்களை செலவிட்டது. இன்ஷா அல்லாஹ் நாளைய தினம் (19) இப்பாடசாலையின் பழைய மாணவியர் சங்கம் ஒன்று கூடலொன்றை நடத்துகின்றது என்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறது. புதிய அதிபராக கடமை ஏற்றுள்ள எம். எஸ்.எம். பைரூஸ் (SLPS) அவர்களின் கீழ் இக்கலைக்கூடம் செழித்தோங்க வேண்டும் என்றும் அதற்கு கைகொடுக்க இச்சங்கம் காத்திருக்கிறது என்ற நற்செய்தியையும் கூறிக் கொள்ள விரும்புகிறது.

தொகுப்பு...✍
பாரா தாஹீர், நளீபா அஸீஸ்





M.Z.M. பாஸிம் - பிரதி அதிபர்



(OBA) செயலாளர்









## பழைய மாணவிகள் சங்க பிரதித் தலைவி பாஹிமா மஜீத்



வெலம்பொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியர் சங்கம் (OGA) 2023 ஆம் ஆண்டு மே மாதம் பதினாராம் திகதியன்று உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு செயல் பட்டுக்கொண்டிருக்கின்றது.

எமது பழைய மாணவியர் சங்கத்தின் தலைவராக எமது பாடசாலையின் அதிபர் எம். எஸ்.எம். பைரூஸ் (SLPS) ஆலோசகராக பேராசிரியை பரீனா ருஸைக் பிரதித்தலைவியாக பாஹிமா அப்துல் மஜீத், இணைச்செயலாளர்களாக ஆசிரியைகளான நளீபா அஸீஸ், பரீஹா சமத், பொருளாளராக ஆசிரியை நிஹாரா முபாரக் மற்றும் பல அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து செயல் பட்டுக்கொண்டிருக்கிருக்கின்றனர். சுமார் 105 வருட கால வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலையில் கடந்த ஒன்றரை வருட காலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த பழைய மாணவியர் சங்கம் புதிய மாணவியர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமையப் பெற வேண்டும்.

எமது பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக வளங்களில் முன்னேற்றத்தில் பங்களிப்பு செய்து ஒரு தன்னிறைவு பெற்ற பாடசாலையாக திகழ வேண்டும் என்பதுவே இந்த பழைய மாணவிகள் சங்கத்தின் நோக்கமாகவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் காலங்களிலும் எமது பாடசாலையின் மாணவர்களது கல்வி, ஒழுக்கம் மற்றும் பௌதீகவள முன்னேற்றத்தில் பங்களிப்பு செய்து இன்றைய சமூகத்திற்கும் நாளைய சமுதாயத்திற்கும் நல்லொழுக்க. சீலர்களை உருவாக்க பங்களிப்பு செய்வோம்.

## பழைய மாணவியர்களின் ஒன்றுகூடல் மனதுக்கு நிறைவைத் தருகிறது



பாடசாலை நாட்களை யாராலும் இலகுவில் கடந்து செல்ல முடிவதில்லை. மனித வாழ்வியலின் ஒவ்வொரு கட்டங்களிலும் சிலாகித்து பேச வேண்டிய காலம் பாடசாலைக் காலம். வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவியர்கள் ஒன்று சேரும் நிகழ்வு மனதிற்கு நிறைவையும் மகிழ்வையும் தருகிறது.

110 ஆவது வருட நிறைவை மிக விரைவில் கொண்டாடி தீர்ப்பதற்கு மாதங்களை எண்ணிக் கொண்டிருக்கும்இத்தருணங்களில் பழைய மாணவியர்கள் தாங்கள் கல்வி கற்று விளையாடி திரிந்த பசுமையான பாடசாலை வளாகத்தையும் வகுப்பறைகளையும் ஆசிரியர்களையும் தங்கள் இணை பிரியா நண்பியர்களையும் சந்தித்து உறவாடிக் கொள்ளுகின்ற இத்தருணங்கள் வாழ்வின் பசுமையான நினைவுகளில் முதன்மையானவை.

பாடவிதானத்திற்கு சமனாக இணைப் பாட செயற்பாடுகளிலும் மத்திய மாகாணத்தில் தனது இருப்பையும் நிலை கொள்ளுதலையும் எமது பாடசாலை கடந்த காலங்களில் மேலோங்கச் செய்திருப்பது பாடசாலையில் வரலாறு தெரிந்தவர்கள் நன்கு அறிவர்.

ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தில் சமூகம் சார் உதவிகள் பிரதான வகிபாகம் பெறுகிறது. அதன் அடிப்படையில் வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியரின் பாடசாலை மீதான கரிசனையும் உதவிகளும் வரலாறு நெடுகிலும் சிலாகித்து பேசப்பட வேண்டியதொன்றாகும்.

**எம்.எஸ்.முஹம்மட் பைறூஸ்**
அதிபர், க/ தெனு/ வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயம்)
வெலம்பொட.

## பழைய மாணவியர் சங்க செயலாளர் A.L.N. நளீபா அஸீம்



நூற்றாண்டொன்றைக் கடந்து வரலாற்றுச்சாதனையொன்றை படைத்துக் கொண்டிருக்கும் வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியர் சங்கம் தனது பயணத்தில் ஒன்றாக பழைய மாணவியர் ஒன்றுகூடலொன்றை நடாத்துவதில் பெருமையும் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

ஒவ்வொருவர் வாழ்விலும் மறக்க முடியாத தடயமாக இது அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மீண்டுமொருமுறை தாய்ப் பாடசாலையைப் பார்த்து விடக்கூடாதா? என ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு இது ஒரு வரப் பிரசாதமாகும்.

இப்பாடசாலைக்கென தம்மாலான பங்களிப்பொன்றைச் செய்துவிட்டு மகிழ்ச்சி பொங்க தம் தோழியரைச் சந்தித்து களிக்கின்ற நாளுக்காக காத்திருக்கும் எம் சகோதரிகளை வரவேற்பதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆசிரியை:க/தெநு/அரபா.மு.ம.வி ஹந்தெஸ்ஸ.)

## பழைய மாணவியர் சங்க இணைச் செயலாளர் பரீஹா சமத்



நூறு ஆண்டுகளை கடந்த எமது பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக நிகழும் பாடசாலை வளர்ச்சியில் ஒன்றாய் கை கோர்ப்போம்" என்ற தொனிப்பொருவில் அனைத்து பழைய மாணவிகளும் ஒன்று சேரும் இந்த நிகழ்வு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் மறக்க முடியாத நிகழ்வாகும். இதனை ஏற்பாடு செய்வதில் நானும் ஒரு பங்காளியாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பல நற்பிரஜைகளை சமூகத்திற்கு ஈன்றெடுத்த பெருமை எமது பாடசாலைக்கு உண்டு. அத்துடன் பல்துறை சார்ந்த கல்வியியலாளர்களை உருவாக்கி ஊருக்கு பெருமை சேர்த்த, சேர்த்துக்கொண்டு இருக்கின்ற எமது பாடசாலை மென்மேலும் வளர்ந்து கம்பீரமாய் வீறுநடை போட வேண்டும் என்பதே எனது அவா.

## பேராசிரியை பரீனா ருசைக்



வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயம் ஒரு நூற்றாண்டைக் கடந்த ஒரு கல்விக் கூடமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் கடந்த வருடம் தான் இப்பாடசாலைக்கான பழைய மாணவியர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

இச்சங்கத்தின் பிரதான நோக்கம் பாடசாலையின் நலன் விருத்தி நடவடிக்கைகள் , மாணவர்களின் கற்றல்செயற்பாடுகள் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் எய்தல் போன்ற விடயங்களுக்கு உதவுதல் வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் சமூக தலைமைத்துவ ஆளுமைகளைப் பெற்றவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் உயர் பதவிகளில் அங்கம் வகிக்கக்கூடியவர்களாகவும் இம் மாணவர்கள் திகழ வேண்டும் என்பதே எமது உறுதியானதும் இதயபூர்வமான இலக்காகக் காணப்படுகின்றது.

இதற்காக பழைய மாணவியர் என்ற அடிப்படையில் குழுமமாக அல்லது கூட்டாக இணைந்து அயராது செயற்பட்டு வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதே எமது அவாவாகும். இதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ் துணை புரியட்டும்.

(பழைய மாணவியர் சங்க ஆலோசகர், தலைவர்; புவியியல் துறை கொழும்பு பல்கலைக்கழகம்)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு செயலாளர் எஸ்.எம். ஸாஹிர்



105 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த இப்பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கம் ஏற்பாடு செய்துள்ள "மீண்டும் பாடசாலைக்கு" (BACK TO SCHOOL) பெரு விழா சிறப்பாக நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பழைய மாணவிகள் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு ஒரு வருடமேனும் பூர்த்தியடையாத போதிலும், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தங்களது அயராத உழைப்பினால் 700 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை தனதாக்கிக் கொண்டு நாம் படித்த பாடசாலையை கல்வி, கலை, கலாசார, விளையாட்டுத்துறை போன்ற சகல துறைகளிலும் மேலோங்கி தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் இப்பாடசாலையின் நற்பெயரை உலகறியச் செய்ய உங்களது இவ் ஒன்றுகூடல் பெரிதும் துணை புரியும் என நம்புகிறேன்.

உங்களது இவ் ஒன்றுகூடல் சகல வழிகளிலும் சிறப்பானதாகவும் வெற்றிகரமானதாகவும் அமைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

## பழைய மாணவிகள் சங்க பொருளாளர் நிஹாரா ஆசிரியை



வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலய அன்னையின் உதிரமதில் பிறந்த புதல்வியருள் நானும் ஒருத்தி. நூற்றாண்டுகள் கடந்த இப்பாடசாலையின் பழைய மாணவியர் சங்கத்தின் பொருளாளராக இருந்து பாடசாலையின் வளர்ச்சிப் படியில் கைகோர்த்திட ஓர் இடம் கிடைத்ததையிட்டு முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

பழைய மாணவியர் ஒன்றுகூடல் இடம்பெறும் இத்தருணம் மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியை தருகிறது.

என் தாய்ப் பாடசாலையில் ஓர் ஆசிரியையாக நான் தற்போது சேவையாற்றி வந்தாலும் அனைத்து சக நண்பிகளையும் சந்திக்கும் இத்தருணத்தில் துள்ளித் திரிந்த அந்தப் பள்ளிப் பருவம் என் கண்முன்னே நிழலாடுகின்றது.

அன்று முதல் இன்று வரை தொடர்ந்தும் எமது பாடசாலை பெற்றுக் கொண்ட வெற்றிகளோ பல.

அத்தோடு இன்றைய நிகழ்வின் கதாநாயகிகளான எமது பழைய மாணவியர் அனைவரினதும் பக்கபலத்தோடு தற்போதைய எமது அதிபரின் அர்ப்பண சிந்தையுடனான பயணத்தில் எமது பழைய மாணவியர் சங்கம் கைகோர்க்கும் என்று கூறி அகம் மகிழ்கிறேன்.

# நகர்வலம்



உலக வங்கியின் நிதி உதவியுடன்

## 19,600 விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கும் செயற்திட்டம் ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்





நாட்டில் காலநிலை சீரமைவு நீர்ப்பாசன விவசாய திட்டத்தை விரிவு படுத்துவதற்காக காலநிலை சீரமைவு நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் மூலம் செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் 117 மில்லியன் ரூபா செலவில் தெற்காசியாவில் முதல் தடவையாக அநுராதபுரம் மாவட்டத்தில் திறப்பனை பகுதியில் விவசாயிகளுக்கான பயிற்சி பாடசாலை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு 86 செயற்திட்டங்கள் மூலம் 788 மகளிர் தலைவர்கள் உட்பட 1966 விவசாயத்துறை தலைவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் மூலம் 19,600ற்கும் அதிகமான விவசாயிகளுக்கு காலநிலை சீரமைவு நீர்ப்பாசன விவசாயம் தொடர்பில் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

## அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவை அதிகரிக்க கோரிக்கை



தமிழ்நாடு, நவகளனிபுர அறநெறி பாடசாலை ஆசிரியர் குழுவின் தலைமை ஆசிரியை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் மேல்மாகாண சபையின் உறுப்பினருமான எஸ் ராஜேந்திரன் மற்றும் தேசியப்பட்டியல் உறுப்பினர் பாபுசர்மாவுடனும் அண்மையில் கலந்துரையாடி தங்களுக்கான நூலை பெறுவதற்காக வருடாந்தம் 5000 ரூபாய் மாத்திரமே இந்து கலாசார திணைக்களத்தில் வழங்கப்படுவதாகவும் இந்த தொகை தற்போதைய சூழ்நிலையில் போதாமல் இருப்பதாகவும் இந்தத் தொகையை அதிகரித்து தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பாபுசர்மா கருத்து தெரிவிக்கையில் ,

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்து கலாசார அமைச்சராக இருந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் நிலமைகளை நன்கு தெரிந்துகொண்டவர். அந்த வகையில் இணக்க அரசியலை முன்னெடுத்து செல்லும் டக்ளஸ் தேவானந்தா நிச்சயமாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தி ஜனாதிபதியிடம் இவ்விடயத்தை முன்சென்றுகொண்டு அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை நிச்சயமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பார் என அவர் தெரிவித்தார்.

வாகனங்களிலிருந்து டீசல் திருட்டு;

## 1125 லீட்டர் டீசலுடன் சந்தேக நபர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வடமத்திய மாகாண மஹா உமா செயற்திட்டத்திற்குட்பட்ட வாகனங்களில் எரிபொருள் திருடி விற்பனை செய்யும் பாரிய அளவிலான வியாபாரி ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். திருடப்பட்ட 1125 லீட்டர் டீசல் தொகையுடன் சந்தேக நபரை பொலிஸார் (16) மாலை கைது செய்துள்ளனர்.

தம்புள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய (16) மாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்ப்பாசன அமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வட மத்திய மாகாண மஹா உமா திட்டத்திற்குட்பட்ட வாகனங்களில் இருந்து திருடிய 1125 லீட்டர் டீசல் தொகையினை மகாமீகஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்ற முடிந்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் கலென்பிந்துனுவெவ மீகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபராவர்.

கைப்பற்றப்பட்ட எரிபொருள் மற்றும் சந்தேக நபரை மேலதிக விசாரணைகளுக்காக மொரகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

## வீதியை புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொத்தான் தீவு கிராமத்தில் இருந்து கட்டைக்காடு ஊடாக சின்னப்பாடு வரைசெல்லும் 5கிலோ மீற்றர் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி மக்கள் நேற்று (17) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உடப்பு கரம்பை பிரதான வீதியின் கட்டைக்காடு முச் சந்தியில் நேற்றுக் காலை 9.00 மணி முதல் காலை 10.00 மணி வரை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'கட்டைக்காடு வீதி மோசடியுடன் சம்பந்தப்பட்ட விஷமிகளை கைது செய்ய வேண்டும்', 'வீதி புனரமைப்பு தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்', 'அரசு எம்முடன், நாமும் அரசுடன்தான்', 'எமது பகுதியை ஊழல்வாதிகளிடமிருந்து பாதுகாத்திடுங்கள்' என்று இது போன்ற பல வாசகங்கள் எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர். இந்த வீதியை கார்பட் வீதியாக புனரமைப்பு செய்வதற்காக கடந்த அரசாங்கத்தினால் abc கற்கள் போடப்பட்டு ஒரு வருடமாகியும் இது வரை புனரமைப்பு செய்யப்படாமையினால் இந்த வீதியை பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் போது அங்கு வருகை தந்த உடப்பு பொலிஸார் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர்.

## ஐ.ம.சவின் அநுராதபுரம் மாவட்ட அமைப்பாளராக ரொஷான் புஹாரி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட புதிய அமைப்பாளராக அநுராதபுரம் மாநகர சபையின் முன்னாள் மாநகர சபை உறுப்பினரும் தொழிலதிபருமான ரொஷான் புஹாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவினால் இவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.அதற்கு மேலதிகமாக இஸ்லாம் மதவிவகாரங்களுக்குப் பொறுப்பான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட இணைப்பாளராகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இஸ்லாம் பாட ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வு





அஜ்வாத் பாஸி

இஸ்லாம் பாட ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வு கம்பஹா மற்றும் களனி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் தவ்ஸீர் தலைமையில் திஹாரிய, தாருஸ் ஸலாம் ஆரம்பப் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கம்பஹா வலய இஸ்லாம் பாட ஆசிரிய, ஆசிரியர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. மினுவாங்கொட கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.புஹாரி 'நவீன கற்பித்தல் முறைகள்' என்ற தலைப்பிலும் கம்பஹா கல்வி வலய இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷெய்க் எம்.ஆர். ரம்ஸி அலி வலயத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் இஸ்லாம் பாட பரீட்சை அடைவுகளைப் பற்றியும் விவரித்தார்.

தொடர்ந்து, 'ஆசிரியத்தில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துதல்' எனும் தலைப்பில் ஒரு விழிப்பூட்டல் அமர்வை ஊடகப் பயிற்றுவிப்பாளரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் தயாரிப்பாளருமான அஷ்ஷெய்க் இஸ்பஹான் சாப்தீன் நடாத்தினார். இதனை, கம்பஹா கல்வி வலயம் மற்றும் கல்வி அபிவிருத்தி மன்றம் (Educational Development Forum) ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தே.ம.சக்தி வேட்பாளர் அரூஸ் அஸாத்

## தனது தேர்தல் பணிகளை தகப்பனாரின் ஆசிர்வாததுடன் நேற்று ஆரம்பித்தார்

பேருவளை விசேட நிருபர்





களுத்துறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அரூஸ் அஸாத் தனது தேர்தல் பிரசாரப் பணிகளை தனது பிறந்தகமான பேருவளை மருதானையிலிருந்து நேற்றைய தினம் (17) காலையில் ஆரம்பித்தார்.

தனது தகப்பனாரான பேருவளை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் முன்னாள் தர்மஹர்தா எம்.ஐ.எம் அஸாதிடம் துண்டுப்பிரசுரங்களை முதன் முதலாக கையளித்து நல்லாசிகளைப் பெற்றுக் கொண்டார். இதன் போது தேர்தலில் வெற்றி பெற்று மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென அவர் துஆ பிரார்த்தனையும் செய்தார்.

தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் பெருமளவிலானோர் வீடு வீடாகச் சென்று தேசிய மக்கள் சக்திக்கும் வேட்பாளர் அரூஸ் அஸாதுக்கும் ஆதரவு தெரிவிக்கும் படி ஒவ்வொருவரிடமும் கேட்டுக் கொண்டனர்.

இதன்போது திரண்டிருந்த மக்கள் மத்தியில் வேட்பாளர் அரூஸ் அஸாத் கருத்து தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூட்டணி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்காக அமோக வாக்களித்து அவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க உதவிக்கரம் நீட்டியது போல இந்த பாராளுமன்றத்தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பாராளுமன்ற ம் ஒன்றை தேசிய மக்கள் சக்திக்கும் கிடைக்க உங்கள் மேலான வாக்குகளை திசைகாட்டி சின்னத்திற்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

## "பென் கிளப்பின்" பாடல் போட்டியில் வெற்றி பெற்றோர்

அகில இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை உள்ளடக்கிய ஸ்ரீ லங்கா பென் கிளப்பின், நான்காவது தேசிய மாநாட்டை முன்னிட்டு நடைப்பெற்ற கவிதை மற்றும் சிறுகதை போட்டிகளுக்கான முடிவுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது பாடல் போட்டிக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் முதலிடத்தை அக்கரைப்பற்று ஏ.எல்.பாத்திமா ஷன்பராவும், இரண்டாம் இடத்தை காத்தான்குடி ஜெஸ்மின் ரமீஸும், மூன்றாம் இடத்தை காத்தான்குடி பஸ்லா பர்ஸானும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசில்கள் திருகோணமலையில் நடைப்பெறும் மகா நாட்டில் வழங்கி வைக்கப்படும்.

இப் பாடல் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த சங்கீத ஆசிரியையான மருதமுனை ஜெம்ஸித் முகம்மட் மஜீதுக்கு பென் கிளப்பின் சார்பாக அதன் தலைவி சம்மாந்துறை மஷூரா சுகுர்தீன் நன்றியை தெரிவித்துள்ளார்.

## அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 78 பேர் மருத்துவ பீடத்திற்கு தெரிவு

கல்நேவ தினகரன் விசேட நிருபர்

அண்மையில் வெளியிடப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான இஸட் ஸ்கோர் வெட்டுப்புள்ளிகளின் படி அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 78 பேர் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழ் மொழி மூலமாக பரீட்சைக்கு தோற்றியோரில் 12 பேர் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இதில் 09 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாகவும் 03 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இதில் கலாவெவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து எம்.ஆர்.எம். ருஷ்தி, எச்.கே.எம். சம்ரி,ஏ.ஏ. ஹய்ருன் நிஸா ஆகியோரும் கடாண்டுகம ஜாயா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து ஏ.ஏ.அஸ்கீ, எம்.வீ.சமீஹா மற்றும் சாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து எஸ்.எச். ஹப்ரி,எம்.பீ. ஆதீல்அகமட்,ஆம்.ஏ. அயாஸ் அகமட் ஆகியோரும் கஹடகஸ்திஹிலிய முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து ஆர்.எப்.மொகம்மட் ஹாரீஸ் மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக எம்.என். பாத்திமா மனால், ஏ.ஆர். பாத்திமா ஆத்தீபா ,ஆர்.எப். பாத்திமா ருஸ்தா ஆகிய மூன்று மாணவிகளுமாக இவ்வருடம் மருத்துவ பீட பல்கலைக்கழக அனுமதிக்காக 12 முஸ்லிம் மாணவர்கள் தமிழ்மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சீரற்ற காலநிலையால் படகுகளுக்கு சேதம்

வெலிகம தினகரன் நிருபர்

சீரற்ற காலநிலையால் வெலிகம கப்ரத்தோட்ட மீன் பிடித்துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10க்கும் மேற்பட்ட மீன்பிடி படகுகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் படகு உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 15ஆம் திகதி இரவு வீசிய பலத்த காற்றின் காரணமாகவும், கடல் அலை காரணமாகவுமே இப் படகுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. படகுகளின் இயந்திரங்கள் செயல் இழந்துள்ளதால் மீண்டும் கடலுக்கு சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியாமல் உள்ளனர்.

இது விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மலையுடனான காலநிலையால் டெங்கு பரவும் அபாயம் அதிகரிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

நாடு பூராகவும் தற்சமயம் மழையுடனான காலநிலை நிலவுவதன் மூலமாக டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் காணப்படுவதால் அவ்வாறான இடங்களை கண்டுபிடித்து அவற்றை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் தற்சமயம் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

நாடு பூராவும் தொடர்ந்து மழை பெய்வதால் கண்ட கண்ட இடங்களில் வீசப்பட்டுள்ள வெற்றுச்சிரட்டைகள், குரும்பைக் கோதுகள், பொலித்தீன் உரைகள், யோகட் , வெற்று கோப்பைகள், போன்றவற்றிலிருந்து டெங்கு நுளம்புகள் பெருகும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதால் அவற்றை தேடி கண்டு பிடித்து சுத்தம் செய்யும் நடவடிக்கையிலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொது மக்களும் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் பிரகாரம் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள பல இடங்களில் இவ்வாறான சிரமதான பணிகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு அங்கமாக ரம்பாவ பிரதேச செயலகப் பிரிவில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு அவை சிரமதானத்தின் மூலம் தடயங்களை அழித்து சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ரம்பாவ பிரதேச செயலாளர் சந்தன கித்சிரி மடுகல்ல தலைமையிலான குழுவினர் கடந்த 09ஆம் திகதி பிரதேசத்தை சிரமதானத்தின் அடிப்படையில் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்தர் சரித் கௌசல்யா மற்றும் ரம்பாவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ரம்பாவ உள்ளூராட்சி சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச இளைஞர்கள், பொது மக்கள் என பலர் இந் நிகழ்வில் இணைந்து இச் சிரமமான பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கின் குரல்



## புல்மோட்டை பிரதேசத்தில் நீர் விநியோகம் பாதிப்பு

புல்மோட்டை தினகரன் நிருபர்

திருகோணமலையின் புல்மோட்டை பிரதேசத்துக்கான நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக, அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

புல்மோட்டையில் 1,500க்கும் அதிகளவான தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் விநியோகப் பாவனையாளர்கள் உள்ளனர்.

கடந்த செப்டெம்பரிலும் இவ்வாறு இரண்டு வாரங்கள் நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது. அதேபோன்று இம்மாதமும் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. ஆகையால் இது விடயமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, புல்மோட்டை பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பாராளுமன்ற தேர்தல்; கஃபே அமைப்பு அதிகாரிகள் 65 பேர் கண்காணிப்பில்

### கஃபேயின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தகவல்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கஃபே சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த 65 பேர் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக, அந்த அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் ஏ.எல். மீராசாஹிபு தெரிவித்தார். இவர்களில் 50 ஆண்கள் மற்றும் 15 பெண்கள் அடங்குவதாகவும், அவர் கூறினார்.

பாராளுமன்ற தேர்தலுக்கான தமது நடவடிக்கை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் நடவடிக்கையை மட்டக்களப்பு மாவட்டத்துக்கான கஃபே சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழு ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியானதும் சுதந்திரமானதுமான பாராளுமன்ற தேர்தல் நடைபெறுவதற்கான கண்காணிப்பு நடவடிக்கையை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் இந்நிலையில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளிலும் தமது கண்காணிப்பு அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

வாக்களிப்பு நிலையங்கள், வாக்குகள் எண்ணும் நிலையங்கள் மற்றும் தபால்மூல வாக்களிப்பு நிலையங்களிலும் தமது அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமைதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவது தொடர்பாக கஃபே அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள பிரசுரங்களும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## அரசியல் கட்சிகள், சுயேச்சை குழு பிரதிநிதிகளுக்கு தேர்தல் செயலமர்வு



(புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்)

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டுவதற்கான செயலமர்வு, ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள பழைய மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான ஜஸ்டினா முரளிதரன் தலைமையிலும் உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம்.சுப்யானின் ஒழுங்குபடுத்தலிலும் கடந்த செவ்வாய்க்கிழமை இச்செயலமர்வு நடைபெற்றது.

இதன்போது அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டம் தொடர்பாகவும் விரிவாக தெளிவூட்டப்பட்டது.

## பொருளாதார வளர்ச்சிக்கு பல்கலைக்கழகங்கள் பங்களிப்பு வழங்க வேண்டும்

(ஒலுவில் விசேட, அம்பாறை மத்திய நிருபர்கள்)

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பல்கலைக்கழகங்கள் பங்களிப்பு வழங்க வேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப்பீடம் ஏற்பாடு செய்த 'டிஜிட்டல் சகாப்தத்தில் நிலையான வளர்ச்சியை நோக்கி அரபு மற்றும் இஸ்லாமிய கல்வி' எனும் தொனிப்பொருளின் கீழ் சர்வதேச ஆய்வு மாநாடு ஒலுவில் வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மேற்படி பீடாதிபதி எம்.எச்.ஏ.முனாஸ் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"தற்போதைய காலகட்டத்தில் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற போது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறான தீர்வை வழங்க வேண்டுமென்று ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களால் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிகள் எதிர்கால இளம் சமுதாயத்தினருக்கு நன்மை பயக்கக்கூடியதாக அமைய வேண்டும்.

இந்த ஆய்வரங்கானது எமது சிந்தனையை விருத்தி செய்கின்றது. விரிவுரையாளர்களும் மாணவர்களும் இதன் மூலம் தமது ஆய்வுத்திறனை விருத்தி செய்கின்றனர்.

இஸ்லாமிய அரபு கற்கைகள் மிகவும் அறிவுபூர்வமான விசேடத்துவமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு பயனுடையதாக காணப்படுகின்றது. மிகவும் பரந்த அறிவை பெற்றுக்கொள்ளக்கூடிய இஸ்லாமிய கற்கைகளுடன் தொழில்நுட்ப ரீதியான அறிவையும் பெற்றுக்கொள்ளும் போது காலத்துக்கு பொருத்தமாக நம்மை நாம் விருத்தி செய்து கொள்ள முடியும். நிலைபேறான அபிவிருத்திக்கும் அரபுமொழி மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கும் இடையிலான ஆய்வை மேற்கொள்வது மிக முக்கியமானதாகும். அதனால் இந்த ஆய்வு மாநாடு மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் நிறைபேறான அபிவிருத்தியில் ஆய்வை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுமென்று நம்புகின்றேன்" என்றார்.



## அபிவிருத்திகளை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதற்கு ஏற்பாடு

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)



புதிய அரசாங்கத்தின் கொள்கை திட்டப்படி எதிர்காலத்தில் சகல அபிவிருத்திப் பணிகளும் ஒருங்கிணைந்த வகையில் செயற்படுத்தப்படுமென, கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.

அம்பாறை நகர சபை மற்றும் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலக பணி, குறைபாடுகள், தேவைகளை கண்டறியும் பொருட்டு அங்கு விஜயம் செய்து நிலைமையை அவதானித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்த அவர், அம்பாறை மாவட்டத்தில் புத்தங்கல மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் நிலவும் காட்டு யானை விவகாரம், அவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக கலந்துரையாடியதுடன், குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்" என்றார்.

இதேவேளை தெஹியத்தகண்டி மற்றும் மகாஓயா அரச வைத்தியசாலைகளுக்கும் அவர் சென்ற போது பணியாளர் தேவை, வாகன தேவை உட்பட தேவையான வளங்கள் தொடர்பாகவும் அவரிடம் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் நீண்டகால தேவையான குறைபாடுகளை படிப்படியாக நிறைவேற்ற தாம் நடவடிக்கை எடுப்பதாகவும், கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

## காட்டு யானைகளால் உடைமைகளுக்கு சேதம்

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வயல்வெளியினூடாக குடியிருப்பு பகுதிக்குள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நுழைந்த காட்டு யானைகள், குடியிருப்புகள் உட்பட உடைமைகளையும் சேதமாக்கியுள்ளன.

இதன்போது பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக, மேற்படி பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் காட்டு யானைகளின் தொல்லை காரணமாக இரவு வேளையில் தாம் அச்சமடைவதாகவும் தெரிவித்த அட்டாளைச்சேனை பிரதேசவாசிகள், சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தரினூடாக பிரதேச செயலாளர், வனப்பரிபாலன திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு அறிவித்ததாகவும் குறிப்பிட்டனர்.

காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து தம்மை பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களென்று தாம் நம்புவதாகவும், அப்பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.



கிழக்கு மாகாணத்தில் வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தினுடைய வருடாந்த உற்சவ நிகழ்வின் போது திரௌபதை மற்றும் கிருஷ்ணர் சகிதம் பாண்டவர்கள் வனவாசம் செல்லும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது. (படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

### சம்மாந்துறை ஊடக

## பிரதிநிதிகளுடன் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் சந்திப்பு



(இறக்காமம் தினகரன் நிருபர்)

சம்மாந்துறை ஊடக மைய பிரதிநிதிகளுடன் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சந்தித்து கலந்துரையாடினார்.

சம்மாந்துறை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த சந்திப்பு நடைபெற்றது. இதன் போது எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக கலந்துரையாடியதுடன், தேர்தல் நடவடிக்கையை கண்காணிக்க விசேட குழுவும் நியமிக்கப்பட்டது. இதில் சம்மாந்துறை ஊடக மைய சிரேஷ்ட ஆலோசகர் காமில் இம்டாட், தலைவர் ஏ.பி.எம். இம்றான், DYRF மற்றும் VIEW நிறுவனத்தின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

## திருகோணமலையை அபிவிருத்தி செய்ய மக்கள் ஆணை தேவை

### தேசிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்

(கிண்ணியா மத்திய நிருபர்)



"திருகோணமலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு எனக்கு அரசியல் ரீதியான மக்கள் ஆணை தேவைப்படுகின்றது" என, தேசிய ஜனநாயக முன்னணியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் பாத்திஹ் கஸ்ஸாலி தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக கிண்ணியாவில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இச்சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

"கடந்த 13 வருடங்களாக தொடர்ச்சியாக பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்ற எனக்கு அச்சேவைகளை மேலும் விஸ்தரிப்பதற்கு அரசியல் ரீதியான அங்கீகாரம் தேவைப்படுகிறது. அதற்காக இந்த தேர்தலில் போட்டியிடுகிறேன். மக்களின் தேவைகளையும் நன்கு அறிந்து வைத்துள்ளேன்.

மீனவ, விவசாய சமுதாயம் மற்றும் மாணவர் சமூகத்தின் தேவைகள் அடையாளம் காணப்படுகின்ற போது சமூக நீதி நிலை நாட்டப்படும். இதன் மூலம் சிறப்பான சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்" எனத் தெரிவித்தார்.

## மாகாண ஆளுநருடன் கிழக்கு கடற்படை தளபதி சந்திப்பு

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவுக்கும் கடற்படையின் கிழக்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோவுக்கும் இடையில் சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஆளுநருக்கு கிழக்கு கடற்படை தளபதி வாழ்த்து தெரிவித்ததுடன், சிநேகபூர்வமான உரையாடலில் ஈடுபட்டார். மூவினத்தவரும் வாழும் மாகாணமாக கிழக்கு மாகாணம் இருப்பதால், அம்மாகாணத்திலுள்ள கடல் பாதுகாப்பு, கடற்றொழிலாளர் பாதுகாப்பு தொடர்பாக அவர்கள் இருவரும் கருத்துகள் பரிமாறினர்.



இதன்போது கிழக்கு மாகாண ஆளுநருக்கு நினைவுப்பலகையை கிழக்கு கடற்படை தளபதி வழங்கிக் கௌரவித்தார்.

## திகாமடுல்லவில் பாராளுமன்ற தேர்தல் பிரசாரம் சூடுபிடிப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர்களுக்கு தனிப்பட்ட தெரிவு இலக்கம் வழங்கப்பட்டதை அடுத்து திகாமடுல்ல மாவட்டத்தில் தேர்தல் பிரசாரப் பணிகள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பாளர்கள் தமது தெரிவு இலக்கத்தை வாக்காளர்களுக்கு தெரியப்படுத்தி, விருப்பு வாக்கு பெறும் பணியில் தீவிரம் காட்டி வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பாராளுமன்ற தேர்தலில் வாக்காளர் ஒருவர் தான் விரும்பும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கும் உச்சபட்சமாக தான் விரும்பும் மூன்று வேட்பாளர்களுக்கும் தனது விருப்பு வாக்கை அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்கள் பலர் தமது தேர்தல் பிரசாரத்தை ஏற்கெனவே ஆரம்பித்துள்ளனர். பிரதேச, வட்டார ரீதியாக பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. அத்துடன் வேட்பாளர்கள் வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை சந்தித்து தேர்தலில் ஆதரவளிக்குமாறு கோரிக்கை விடுத்து வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

திகாமடுல்ல மாவட்டத்தில் 7 பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு 21 அரசியல் கட்சிகளிலும் 43 சுயேச்சைக் குழுக்களிலுமாக மொத்தம் 640 பேர் போட்டியிடுகின்றனர். பட்டியலொன்றில் 10 வேட்பாளர்கள் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு

(பாலமுனை விசேட நிருபர்)

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தையிட்டு சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நடைபவனி மற்றும் கருத்தரங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சம்மாந்துறையில் நடைபெற்றது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரியும் வைத்தியருமான எம்.ஐ.எம்.கபீர் தலைமையிலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீனின் பங்கேற்புடனும் இவை நடைபெற்றன. மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை நடைபவனியில் பங்கேற்றவர்கள் தாங்கிச் சென்றதுடன், துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை ~ குருநாகல்

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவினால் பின்வரும் மருத்துவ / சத்திரசிகிச்சை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| # | இலக்கம் | மருத்துவ உபகரணங்கள் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப் படாத விலைக் கோரல் ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1. | THK/FS02/2024/26 | Orthopedic Drill | 02 | 300,000.00 | 10,000.00 |
| 2. | THK/FS02/2024/27 | Syringe Pump | 40 | 100,000.00 | 4,000.00 |
| 3. | THK/FS02/2024/28 | Mini Autoclave | 03 | 20,000.00 | 1,000.00 |

02. இதன் பொருட்டு NMRA பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ள நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பப் படிவத்தின் பொருட்டு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை இந்த வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் இயைபுடைய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தொழில்நுட்ப விபரக்குறிப்புகளை கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2024-11-07ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை மட்டும் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

03. 5,000,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான விலைமனுக்களுக்கு PCA3 சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் எந்தவொரு அரசாங்க வங்கியிலோ அல்லது தனியார் வங்கியிலோ வைப்புச் செய்து விலைமனுப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. சகல விண்ணப்பப் படிவங்களும் 2024-11-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் இந்த வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உபகரணத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. இது தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பழைய பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

07. 2024.11.08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வைத்தியசாலையின் புதிய கேட்போர்கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுமென்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

08. இந்தக் கேள்வி தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

09. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 037-2222261 நீடிப்பு 2261 எனும் தொலைபேசி இலக்கத்தில் கணக்குப் பிரிவைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (இந்த அறிவித்தல் www.kurunegalahospital.health.gov.lk எனும் வைத்தியசாலையின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

# விலைக்கோரலுக்கான அழைப்பு

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நகர அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் (கீழ்நிலை) இப்போது அழைக்கின்றார்.

**அட்டவணை -01**

| விலைக் கோரல் இல. | திட்டத்தின் பெயர் | வெட் வரியின்றி வேலையின் மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணைமுறி (ரூபா) | விநியோகக் காலம் (நாட்கள்) | தேவையான CIDA பதிவுத் தரம் | விலைக் கோரல் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | தென் மாகாணம், மாத்தறை கோட்டை, நீதிமன்றக் கட்டிடத்தொகுதி இடப்பரப்பில் தற்போதுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தை விஸ்தரித்தல் மற்றும் திருத்துவதற்கான முன்மொழிவு (கட்டம் II) | 12,500,000.00 | 3,500.00 + வரிகள் | 125,000.00 | 120 நாட்கள் | C6, C7 அல்லது SP3 மற்றும் அதற்கு மேல் | 2025-02-20 |

01. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் நடாத்தப்படும்.

02. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்குட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனைய தேவைப்பாடுகள் விலைக்கோரல் ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, ‘‘செத்சிறிபாய - படிநிலை 1’’ 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைக்கான தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024 ஒக்டோபர் 18ஆம் திகதி முதல் 2024 நவம்பர் 07ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெறுகைக்கான தலைவரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவு சிறாப்பருக்கு செலுத்துவதன் பேரிலும் 2024 ஒக்டோபர் 18ஆம் திகதி முதல் 2024 நவம்பர் 07ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் பத்தரமுல்லை, செத்சிறிபாய - படிநிலை 1, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவு, பெறுகைக் குழுத் தலைவருக்கு செலுத்தி எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரரும் அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும் மற்றும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்டதும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரக்குறிப்பின் பிரகாரம் வங்கி உத்தரவாதமொன்றை விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுக்களுடன் இணைத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறித் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் என்பன 01ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன என்பதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

06. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன் 2024 நவம்பர் 08ஆம் திகதி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை), நகர அபிவிருத்தி அதிகார சபை, 7ஆம் மாடி, செத்சிறிபாய - படிநிலை 1, பத்தரமுல்லை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஒக்டோபர் 28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்லை, செத்சிறிபாய - படிநிலை 1, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவில் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு திட்டமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

08. விலைமனுதாரர்களைத் தெரிவு செய்கையில் விலைமனுதாரர்களின் முன்னைய செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைமை என்பன திட்டவட்டமாக மதிப்பீடு செய்யப்படும். மோசமான செயற்பாடுகளைக் கொண்ட விலைமனுதாரர்கள் எந்தவொரு விலைக்கோரல் கையளிப்பின் பொருட்டும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டார்கள்.

09. விலைக்கோரல் ஆவணங்கள் தயாரித்தல் தொடர்பான எவ்வித செலவுகளுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை எவ்விதப் பொறுப்பும் கூறப்படமாட்டாது மேலும் கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்களில் பொருத்தமான எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அனைத்தையும் நிராகரிக்கும் அதிகாரத்தை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் (கீழ்நிலை) தன்னகத்தே கொண்டுள்ளார். திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரின் (கீழ்நிலை) தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் நிலை),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**7ம் மாடி, ‘செத்சிறிபாய - படிநிலை 1’,**
**பத்தரமுல்லை.**


MM
M.M.NOORBHOY & CO
SINCE 1902



மக்களுக்கு விடுக்கப்படுகின்ற
பொது அறிவித்தல்

மொஹமட் சாபி மொஹமட் ஸாபித்
தேசிய அடையாள அட்டை இலக்கம் - 200314800510V
முகவரி - இல,B3/2, திஸாநாயக அடுக்குமாடி
குடியிருப்பு, கொழும்பு 10.

எம் எம் நூர்போய் நிறுவனத்தில் பணிபுரிந்த மேற்கூறிய நபர் 12 செப்டம்பர் 2024 முதல் எமது நிறுவனத்தில் சேவையில் இல்லை என்பதை நாம் தெரிவித்துகொள்கிறோம். அவருடனான எந்த ஒரு ஒப்பந்தத்திற்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்காது என்பதையும் நாம் தெரிவித்துகொள்கிறோம். அவருடன் தொடரபு கொள்ளும் என்த ஒரு நபரும் அவரின் சொந்த ஆபத்தில் தொடர்பு கொள்வதோடு அதற்கு நிறுவனம் எந்த நிறுவனம் எந்த வித பொறுப்பும் கிடையாது.

M.M.Noorbhoy & Co.(Pvt) Ltd.
#351, NAWALA ROAD,NAWALA.



it's what you want
www.adz.lk



Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE


DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

# MINISTRY OF AGRICULTURE, LANDS, LIVESTOCK, IRRIGATION, FISHERIES AND AQUATIC RESOURCES

## REQUEST FOR BIDS (RFB) - GOODS

**Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.No.: 8996-LK)**

## NATIONAL COMPETITIVE BIDDING (NCB)

**Supply, Installation & Commissioning of 02 Nos. of Hydrogen Generators for Department of Meteorology**

**RFB Reference No.: SLMOI/CRES/DOM/G/NCB/83**

**Supply & Delivery of 03 Nos. of Digital Meteorological Theodolites for Department of Meteorology**

**RFB Reference No.: SLMOI/CRES/DOM/G/NCB/84**

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a financing from the International Bank for Reconstruction and Development (IBRD) towards the cost of Climate Resilience Multi-Phase Programmatic Approach of Ministry of Agriculture, Lands, Livestock, Irrigation, Fisheries and Aquatic Resources and intends to apply part of the proceeds toward payments under the contract for supplying & installing of above items for Department of Meteorology, Sri Lanka. For this contract, the Borrower shall process the payments using the Direct Payment Disbursement Method, as defined in the World Bank's Disbursement Guidelines for Investment Project Financing, except for the payments, which the contract provides to be made through letter of credit.

02. The Chairman, **Project Procurement Committee** on behalf of the **Climate Resilience Multi-Phase Programmatic Approach** now invites sealed bids from eligible and qualified bidders to **supply above items.**

03. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.

04. Interested eligible Bidders may obtain further information from **Procurement Division, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No. 11, Jawatta Road, Colombo 05, T.P.: +94 11 250 7855, Fax: +94 11 205 8451, E-mail: pdcresmpa@gmail.com** and inspect the bidding documents free of charge **from 21st October 2024 to 08th November 2024** during normal working days **between 9.00 a.m. and 3.30 p.m.**

05. Bidding documents in English language may be purchased by interested bidders upon submission of a written application to the address below and upon payment of a non-refundable fee as per the **Table 01**, **from 21st October 2024 to 08th November 2024 between 9.00 a.m. and 3.00 p.m.** on any working day.

06. All bids must be accompanied by a **Bid Security**, (as per the format given in the Bidding Document) as per the **Table 01**.Bid Security shall be valid until **15th March 2025.**

**Table 01**

| RFB Reference | Non-Refundable Fee (LKR) | Bid Security Amount (LKR) |
|---|---|---|
| **SLMOI/CRES/DOM/G/NCB/83** | 18,000.00 | 800,000.00 |
| **SLMOI/CRES/DOM/G/NCB/84** | 10,000.00 | 400,000.00 |

07. Bids must be delivered in duplicate to the address below on or before as per the **deadline stated in the Table 02.** Late bids will be rejected.

Electronic Bidding will not be permitted. Bids will be publicly opened soon after closing in the presence of the bidders' designated representatives and anyone who chooses to attend at the address below.

08. Pre-Bid Meeting will be arranged **as per the Table 02** at the Conference Room at the address below.

**Table 02**

| RFB Reference | Pre-Bid Meeting | Deadline for Bid Submission & Opening |
|---|---|---|
| SLMOI/CRES/DOM/G/NCB/83 | 09:00 hrs on 25th November 2024 | 10:00 hrs on 12th November 2024 |
| SLMOI/CRES/DOM/G/NCB/84 | 11:00 hrs on 25th November 2024 | 11:00 hrs on 12th November 2024 |

09. The address referred to above is: Climate Resilience Multi-Phase Programmatic Approach, No.11, Jawatta Road, Colombo 05, Sri Lanka.

10. Purchaser will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation or delivery of bids including costs and expenses related to Site Visits and/or pre-bid meeting.

11. Project Procurement Committee (PPC) reserves the full right to either accept or reject any/all bids received and the decision of the PPC in this regard shall be final.

**Chairman,**
**Project Procurement Committee,**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach,**
**No. 11, Jawatta Road, Colombo 05, Sri Lanka.**

**T.P.: +94 11 250 7855 / +94 11 205 8452**

*18th October 2024*


www.adz.lk
it's what you want



* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377

Repeat Your ad For Better Offers

**பெயர் மாற்றம்**

மட்டக்களப்பு, ஆரப்பற்றை, கிரான்குளம், தர்மபுரத்தைச் சேர்ந்த சுப்ரமணியம் சண்முகம் ராமசாமி மாரி, சண்முகம் தர்மராஜா, சண்முகம் சிவநாதன், சண்முகம் நந்தனி, சண்முகம் பிரசாந்தினி ஆகிய நாம் புனித இஸ்லாம் மதத்தை தழுவிக் கொண்டதுடன் எமது பெயர்களை முறையே சுப்ரமணியம் அப்துல் மஜீது, ராமசாமி மர்ழியா, அப்துல் மஜீது ஜஸீர், அப்துல் மஜீது ஷஜப், அப்துல் மஜீது நழீபா, அப்துல் மஜீது பர்ஹானா என மாற்றம் செய்துள்ளோம் என இலங்கை குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**அப்துல் மஜீது மற்றும் குடும்பத்தினர்.**

# அறிவித்தல்

## கருவலகஸ்வெவ பிரதேச சபை

### 2025ம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை

1987 இல. 15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய வடமேல் மாகாண கௌரவ ஆளுநரால் 2020.10.29 இல. 2199/15 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியின் பிரசுரிப்பதற்கு உள்ள பிரதேச சபை வரவு செலவவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதி இல. 10(2)இன் பிரகாரம் கருவலகஸ்வெவ பிரதேச சபையினால் 2025ம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு வரவு செலவுத்திட்ட அறிக்கை 2024.10.25 முதல் கருவலகஸ்வெவ பிரதேச சபை தலைமையகத்தில், அலுவலக நேரங்களில் பொதுமக்களுக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**கே. ஜீ. எஸ். என். குணரத்ன,**
**கருவலகஸ்வெவ பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை, கருவலகஸ்வெவ.**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்கு Aggregate Materials வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

| இல | ஒப்பந்த இலக்கம் | அஸ்போல்ட் ஆலை | Aggregate அளவு (மி.மீ) | மொத்த எண்ணிக்கை (மெ.தொ) |
|---|---|---|---|---|
| 01 | RDA/DPR/PRO/SE/NCB / ASPL/KEAG/2024/135 | கேரகல அஸ்போல்ட் ஆலைக்கு Aggregate Materials வழங்குதல் | 0 - 5 | 5,500 |
| | | | 5 – 12.5 | 4,500 |
| | | | 12.5 - 19 | 2,000 |
| 02 | RDA/DPR/PRO/SE/NCB/ ASPL/KOAG/2024/136 | கொட்டதெனியாவ அஸ்போல்ட் ஆலைக்கு Aggregate Materials வழங்குதல் | 0 - 5 | 6,500 |
| | | | 5 – 12.5 | 3,500 |
| | | | 12.5 - 19 | 2,000 |
| 03 | RDA/DPR/PRO/SE/NCB/ ASPL/MEAG/2024/137 | மெதவச்சிய அஸ்போல்ட் ஆலைக்கு Aggregate Materials வழங்குதல் | 0 - 5 | 6,000 |
| | | | 5 – 12.5 | 3,500 |
| | | | 12.5 - 19 | 2,500 |
| 04 | RDA/DPR/PRO/SE/NCB / ASPL/AMAG/2024/138 | அம்பன்பொல அஸ்போல்ட் ஆலைக்கு Aggregate Materials வழங்குதல் | 0-5 | 5,000 |
| | | | 5 – 12.5 | 4,000 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்கு Aggregate Materials வழங்குவதற்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.10.18** ஆம் திகதி முதல் **2024.11.08** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீ.அ.அ.ச கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
பத்தரமுல்லை.

SELACINE

## 2025ம் ஆண்டிற்காக இறைச்சி மற்றும் மீன் கடைகளை குத்தகைக்குவிடல்

சீதாவக்கபுர நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் இடங்களில் 2025.01.01 முதல் 2025.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

| தொடர் இலக்கம் | கடை அறை இலக்கம் மற்றும் விற்பனை நிலையம் | கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு (ரூ) | குறைந்தபட்ச மாதாந்த வாடகை (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | M52 - மாட்டிறைச்சி | 1,000.00 | 105,000.00 | 164,000.00 |
| 02 | M46 - ஆட்டிறைச்சி | 750.00 | 25,000.00 | 13,965.00 |
| 03 | M49 - பன்றியிறைச்சி | 1,500.00 | 50,000.00 | 34,860.00 |
| 04 | M45 - கோழியிறைச்சி | 750.00 | 5,000.00 | 16,275.00 |
| 05 | M4 - 8/51 மீன் | 1,500.00 | 50,000.00 | 37,500.00 |
| 06 | M - 54 மீன் | 1,500.00 | 50,000.00 | 37,500.00 |
| 07 | புவக்பிட்டிய ஞாயிறு சந்தை மீன் | 500.00 | 2,500.00 | 29,096.00 |

கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் - 2024.11.07 பி.ப. 3.00 வரை
கேள்விப் படிவங்களை ஏற்றுக் கொள்ளல் - 2024.11.08 பி.ப. 2.00 வரை
கேள்விகள் திறத்தல் - 2024.11.08 பி.ப. 2.15 இற்கு சீதாவக்கபுர நகர சபை அலுவலகத்தில்

**எம்.ஜீ.கே. மிஹிரானி,**
**செயலாளர்,**
**அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**சீதாவக்கபுர நகர சபை,**
**அவிசாவளை,**
**2024.11.18**

**தொ.பே.இலக்கம் : 036 - 2222275**
**பெக்ஸ் இலக்கம் : 036 - 2222275**
**மின்னஞ்சல் முகவரி : seethawakapurauc@gmail.com**

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - களுத்துறை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் வகைப்படுத்தலின் கீழ் வெவ்வேறாக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| விலைமனு குறிப்பிலக்கம் | விலைக்கோரலின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| **Procurement of Supply, Delivery & Installation of Medical Equipment's** | | | | |
| RDHSK/BME/ PRO-3/ HOLTER/ & AUTOCLAVE/2024 | Holter Monitor System | 01 | 2,500.00 | 80,000.00 |
| | Mini Autoclave Machine | 02 | | |
| **Procurement of Supply, Delivery & Installation of Physiotherapy Equipment's** | | | | |
| RDHSK/BME/ PRO-3/ PHYSIO/2024 | Ultrasound Therapy Machine | 01 | 2,000.00 | 50,000.00 |
| | Short Wave Therapy Machine | 01 | | |
| **Procurement of Supply, Delivery of Maternity & Child Healthcare Equipment's** | | | | |
| RDHSK/BME/ PRO-3/MCH/2024 | Aneroid Sphygmomanometer | 39 | 2,000.00 | 70,000.00 |
| | Sphygmomanometer Digital | 33 | | |
| | Stethoscope | 18 | | |
| | Surgical Scissor | 60 | | |
| | Speculum (Large size) | 30 | | |
| | Speculum (Medium size) | 50 | | |
| | Vertical auto clave | 08 | | |
| | Mosquito forceps-curved | 03 | | |
| | Portable Height Measuring (Rod) | 42 | | |
| | Uterine Sound | 25 | | |
| | Sponge Holder | 05 | | |
| | Vulsellum Forceps | 05 | | |
| | Examination Bed | 03 | | |
| | Instrument Electric Sterilizer | 06 | | |
| | Spot Lamp | 08 | | |
| | Injection Trolley | 11 | | |
| | Adult Beam Balance (Mechanical) with Height Rod | 02 | | |
| | Bathroom Scale Mechanical | 50 | | |
| | Hand Held Doppler | 12 | | |
| | Cheatle Forceps | 05 | | |
| RDHSK/ PRO-2/2024/102 | Procurement of Supply, Delivery & Installation of Digital Smart Board | 13 | 2,000.00 | 70,000.00 |
| RDHSK/ PRO-2/2024/103 | Procurement of Supply, Delivery of Laptops | 30 | 2,000.00 | 50,000.00 |

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
2. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   i. மேற்குறிப்பிடப்பட்ட உபகரணங்களை விற்பனை செய்வதற்காக செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
   ii. உற்பத்தியாளர் அல்லாவிடில் விலைமனுதாரருக்கு இந்த உருப்படிகளை விற்பனை செய்வதற்காக உற்பத்தியாளர்களினால் எழுத்து மூல அனுமதி இருத்தல் வேண்டும்.
   iii. குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் இயைபான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனுபவம்
   iv. உபகரணங்களை விற்பனை செய்வதற்காக NMRA சான்றிதழ்
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை த.பெ. 29, கச்சேரி கட்டிடத் தொகுதி, 04வது மாடியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளரிடம் பெற்றுகொள்ளலாம் என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் 2024-10-18ஆம் திகதி முதல் 2024-11-07ஆம் திகதி வரையான பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம்.
4. களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியை பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. இரு பிரதிகளில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் தனியொரு உறையிலிட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரலின் பெயர் மற்றும் குறிப்பீட்டிலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-11-08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம்.
5. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் பொருட்டு மட்டும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
7. மேலதிக விபரங்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 034-2222610, 034-2222367, 038-2294700 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**களுத்துறை.**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

## விலைமனுக்கோரல்

### சீனி தொழிற்சாலைக்காக Maxseal Thompson Valve வழங்குவதற்கான தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் (PR-12922)

வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் **(DPC)** தலைவரினால் **பெலவத்த சீனி தொழிற்சாலைக்காக (Maxseal Thompson Valve)** வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத **ரூ.8,000.00** கட்டணத்தை பணமாக செலுத்தி **2024.11.06** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **09.00 மணி முதல் 15.00** மணிவரை **வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04** என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும். கட்டணம் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை **2024.11.07** ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி **14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெலவத்த சீனி தொழிற்சாலைக்காக Maxseal Thompson Valve வழங்குவதற்கான விலைமனுக்கோரல்"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் திறக்கபடும் நாளிலிருந்து **119 நாட்களுக்கு** செல்லுபடியாகும். **ரூ.450,000.00 (நான்கு இலட்சத்து ஐம்பது ஆயிரம்)** மனுப்பாதுகாப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இடம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : +94 11 2584184, கையடக்கதொலைபேசி +94 770103359, தொலைநகல் : +94 11250 0674, (மின்னஞ்சல் : sapumal@lscl.lk)

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

SELACINE

# கம்புறுப்பிட்டிய பிரதேச சபை

## 2025ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் சேவைகளைப் பதிவு செய்தல்

2025ம் ஆண்டிற்காக கீழ்க்காணும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநராக பதிவு செய்து கொள்ளும் முகமாக உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து அல்லது நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

1. சகல அலுவலக காகிதாதிகள்
2. சாதாரண களஞ்சியப் பொருட்கள் (இரும்பு, ஜிஐ பைப் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் மண்வெட்டி, முள்ளு ரேக்கை, சவல், அலவாங்கு, தீந்தை வகைகள் போன்ற சகல உபகரணங்களும்)
3. சுகாதாரம் சார்ந்த உபகரணங்கள் (பிளாஸ்டிக் கூடை, விளக்குமாறு, தும்புத்தடி, கையுறை, பினோல், விம், ஹார்பிக், அடுக்கு கூடை போன்றன)
4. சீருடைக்குத் தேவையான துணி வகைகள்/ திரைச்சீலை/ மேசைத்துணி
5. விளையாட்டுப் பொருட்கள் (விளையாட்டு உபகரணங்கள்)
6. டயர், டியூப் மற்றும் பற்றரி (திரீவீல், டிரக்டர், டபிள் கெப் மற்றும் ஜே.சீ.பீ)
7. வாகன உதிரிப்பாகங்கள் (டபிள் கெப், முச்சக்கர வண்டி, டிரக்டர், ஜே.சீ.பீ இயந்திரம், மண் அழுத்தும் இயந்திரம், நீர் பவுசர் உட்பட வாகன உதிரிப்பாகங்கள்)
8. ஜெனரேட்டர், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் நீர் மோட்டார் மற்றும் நீர் மீட்டர் போன்றன
9. அலுவலக மின் உபகரணம் (கல்கியூலேட்டர், மின்விசிறி மற்றும் மின் கேத்தல், ஹீட்டர் போன்றன)
10. கணனி, போட்டோப் பிரதி இயந்திரம், பெக்ஸ் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்கள் (டோனர், கார்ட்ரிஜ்)/ கணனி மென்பொருள் வலையமைப்புக்கு உட்படுத்தல் போன்றன
11. அலுவலக உபகரணம், பலகை மற்றும் உருக்கு தளபாடங்கள் (ராக்கை, அலுமாரி, மேசை, பைல் கெபினெட் போன்றன)
12. மின் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான துணைப்பாகங்கள் (வயர், சுவிட்ச், பல்ப், பிளக், வீதி விளக்கு போன்றன)
13. அச்சு விடயங்கள் (அச்சுப் படிவங்கள் மற்றும் ஆவணங்கள் சார்ந்த சகல விடயங்கள்)
14. கட்டிடப் பொருட்கள் (கல், களிமண், செங்கல், மணல், சீமெந்து போன்றன)
15. ஹியூம் பைப் மற்றும் கொங்கிறீட் தூண், எல்லைக்கல், சீமெந்து புளொக்கல், கொங்கிறீட் சார்ந்த பொருட்கள் மற்றும் கொங்கிறீட் கலவை
16. பலகை வழங்குதல் (பலகை, தீராந்து, ரீப்பை போன்றன)
17. சப்பாத்து, கையுறை, கம்பூட்ஸ் போன்றன
18. திகதி முத்திரை மற்றும் இறப்பர் முத்திரை
19. நீரை சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்கள் (ஹைட்ரேட்டட் லைம், அலுமினியம் சல்பேட், குளோரின், டி.சி.எல். பவுடர் மற்றும் கிருமியழிப்பு இரசாயனப் பொருட்கள்)
20. நீர் உபகரணம் வழங்கல் (பீ.வீ.சீ. உபகரணம், ஜீ.ஐ, ஜீ.ஐ. நீர்க்குழாய் துணைப்பாகங்கள் போன்ற பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் நீர்த்தாங்கி, நீர் மோட்டர், நீர் மீட்டர், கொம்போஸ்ட் பெரல்)
21. கண்ணாடி மற்றும் கண்ணாடிப் பொருட்கள்
22. பொலித்தீன், அச்சிடப்பட்ட பொலித்தீன் உறை மற்றும் பசளை உறை வழங்குதல்
23. டோர்ச் பெற்றரி, ரீசார்ஜ்பல் டோர்ச் போன்றன
24. விளக்குமாறு மற்றும் தும்புத்தடி உற்பத்தி
25. சகல வகையான அச்சிடப்பட்ட போட், அச்சிடப்பட்ட போட் வழங்குதல் மற்றும் பொருத்துதல்
26. தீயணைப்பு உபகரணம் வழங்குதல்
27. வளிச்சீராக்கி இயந்திரம்
28. கேஸ் மற்றும் கேஸ் தாங்கி
29. புத்தகம், பத்திரிகை, சஞ்சிகை கொள்வனவு செய்தல்
30. உராய்வுநீக்கி எண்ணெய் வகை
31. நீர் மோட்டருக்கான உதிரிப்பாகங்கள்
32. கிருமிநாசினி திரவம், செனிடைசர், மாஸ்க்
33. உணவு பானங்கள் வழங்குதல்/ சில்லறைப் பொருட்கள்

**சேவைகள்**

1. மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் விடயங்கள் (ஜே.சீ.பீ. டிரக்டர், டபிள் கெப் மற்றும் திரீவீல், மண் அழுத்தும் இயந்திரம் மற்றும் நீர் பவுசர்)
2. தகனசாலை பழுதுபார்த்தல் மற்றும் சேவை விடயங்கள்
| 01 | THR/E19/SW/2024 | சாக்கடை அமைப்பின் பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை 2024/2025 | CIDA C7 | ரூ. 50,000.00 |
| 02 | THR/E19/EM/2024 | மின் பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை 2024/2025 | CIDA EM4 | ரூ. 50,000.00 |
| 03 | THR/E19/CAC/OTR/2024 | பிரதான சத்திர சிகிச்சை கூடத்தின் இதய நோய் பிரிவின் (CCU) மத்திய வளிச்சீராக்கல் மற்றும் பிரேத அறை குளிரூட்டி பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை - 2025 | CIDA EM4 | ரூ. 50,000.00 |

- ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்கும் வேறு வேறாக ரூ. 3500.00 மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர் கேள்வி ஆவணத் தொகுதியை கீழ்க்காணும் முகரியில் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்வி ஆவணங்களை 2024.10.18 முதல் 2024.11.19 வரை அலுவலக நாட்களில் (அரச பகிரங்க விடுமுறை தவிர்த்து) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படும்.
- அரச ஒப்பந்தங்கள் மற்றும் வழங்கல் நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.
- ஒரு கேள்விதாரருக்கு மேற்படி கேள்வி இலக்கத்தின் எந்த அளவுக்குமான கேள்விகளையும் சமர்ப்பிக்க முடியும். அத்துடன் அதற்காக வேறு வேறாக காசு செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். (மாற்றுக் கேள்விகள் ஏற்கப்பட மாட்டாது.)
- பொறியிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
- கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2024.11.20 பி.ப. 10.30 இற்கு முடிவுறுத்தப்படுவதுடன் அதன் பின்னர் கிடைக்கும் கேள்வி ஆவணங்கள் ஏற்கப்பட மாட்டாது.
- 2024.11.20ம் திகதி கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.
- கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம்/ கோவை இலக்கத்தை கீழ்க்காணுமாறு குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

  உ+ம்: THR/E19/EM/2024
- எந்தக் கேள்வியையும் அல்லது அதன் ஒரு பகுதியை எந்தக் காரணமும் கூறாமலேயே ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.
- அநாவசிய தாமதங்களைத் தவிர்ப்பதற்காக கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு வருகை தர முன்பு தயவு செய்து 045-2224490 இலக்கத்தில் கணக்காளரை அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**

# கேள்வி கோரல் அழைப்பு

## விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

## சபரகமுவ மாகாண சபை

01. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| தொ. இல. | இணைப்பு இலக்கம் | நிறுவனம் மற்றும் வேலை விடயம் | நிறை வேற்று பொறியியல் அலுவலகம் | மீளளிக் கப்படாத கேள்வி கட்டணம் ரூ. | கேள்விப் பிணை முறிப் பெறுமதி ரூ. | CIDA தரம் | மதிப்பிடப் பட்ட வேலை பெறுமதி ரூ.மி. |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | APH/SG/ AC10/U/VIP | உதுகொட விலங்கு கட்டுப்பாட்டு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் சுற்றுலா பங்களாவை புதுப்பித்தல் | கேகாலை | 2,500.00 | 44,500.00 | C7/C8 | 4.43 |

02. இக் கேள்வி கோரல் திறந்த தேசிய போட்டி பெறுகைச் செயற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் சகல கைத்தொழிலினதும் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ.மி. 50 இற்கு குறைவான படியால் அரச நிதி சுற்றுநிருப இல. 04/2016(I), 04/2016(II) மற்றும் 04/2016(III) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த (CIDA) தரப்படுத்தல் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணத்திற்காக கேள்விதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படும். அவ்வாறே அச் சுற்றுநிருபத்துடன் சம்பந்தப்பட்ட பின்னர் விநியோகிக்கப்படும் இல. 01/2024 அரச நிதி சுற்றுநிருபத்தின் முகவரியும் பெறுகை விடயத்துடன் சம்பந்தப்பட்டது. நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) அல்லது சபரகமுவ மாகாண சபையின் கீழ் நிர்மாணத்திற்காக மேற்படி கைத்தொழில்களின் துறைகளில் குறித்த பெறுமதிக்கு பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் கேள்விக்களை விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.
03. 2024.10.18 முதல் 2024.11.04 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணுமாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள சபரகமுவ மாகாண சபையின் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. கேள்விப் பிணை முறி பெறுமதி கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலிற்காக கேள்விப் பிணைமுறிப் பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணைமுறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை 2024.11.05 முதல் 2025.03.12 வரை செல்லுபடியாகுமாறு மாகாணப் பணிப்பாளர் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி சலுகை பெறுபவராக குறிப்பிட்டு பெற்றுக் கொண்ட கேள்விகளை 0001170333 கணக்கிற்கு நிதி வைப்பிலிட்டு திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இக் கைத்தொழில் பற்றிய மேலதிக விபரங்களை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு வருகைதந்து அல்லது தொ.பே. இல. 045-2226927 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் தேவையானோருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்ளைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. பொறியிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் 2024.11.05 பி.ப. 1.00 இற்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இரத்தினபுரி நவநகரின் சபரகமுவ மாகாண சபையின் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். சகல கைத்தொழிலிற்கும் அதனோடு சம்பந்தப்பட்ட நகல் பிரதியை வேறு உறையில் இட்டு உறையின் இடது மேல் மூலையில் கைத்தொழிலின் இலக்கம், பெயர் மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
07. 2024.11.05 பி.ப. 1.00 இற்கு இரத்தினபுரி, நவ நகரம், சபரகமுவ மாகாண சபையின் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியது. பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
09. சகல கேள்விகளும் 2025.02.16 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**சபரகமுவ மாகாண சபை,**
**நவ நகரம், இரத்தினபுரி.**
**தொ.பே. 045-2226927**
**பெக்ஸ்: 045-2228084**

2024.10.14ம் திகதி

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சுகாதார அமைச்சு

## களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் 33 ஆம் இலக்க வாட்டை புனரமைத்தல்

01. தோராயமாக 8.6 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட செலவைக் கொண்டது மற்றும் கீழ் விபரிக்கப்பட்டவாறு "களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் 33 ஆம் இலக்க வாட்டை புனரமைத்தலுக்காக" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு 10, சங்கைக்குரிய பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை, "சுவசிறிபாய", சுகாதார அமைச்சின் சார்பில் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின், பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

    இந்தத் தளம் களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ளது. BOQ இல் விபரிக்கப்பட்டவாறு இடித்தல் வேலை, கொங்கிறீற் வேலைகள், சுவர் முடித்தல் வேலைகள், நிறப்பூச்சு வேலைகள், உலோக வேலைகள் மற்றும் மற்ற கட்டிட வேலைகள் ஆகிய பிரதான வேலைகளை இது கொண்டிருக்கும். களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை வளவின் நாளாந்த வேலைக்கு இடையூறு இன்றி இந்த வேலை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். நிர்மாணக் காலம் 91 நாட்காட்டி தினங்களாகும்.
02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
03. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

    **விசேடத்துவம்: கட்டிட நிர்மாணம்**

    **தரம்: C7 மற்றும் C6**
04. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவன:

    தளத்தில் இருக்க வேண்டிய தொழில்நுட்ப பணியாளர்கள்:

    ஒரு தளப் பொறியியலாளர் (சிவில்) - இரண்டு ஆண்டுகள் அனுபவத்துடன் BSc அல்லது அதற்கு இணையானது

    ஒரு தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) - மூன்று ஆண்டு அனுபவத்துடன் NDT/NDES/HNDE
05. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 0112832950 என்ற தொலைபேசி இலக்கத்தில் களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு கீழ் தரப்பட்ட முகவரியில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
06. மீளளிக்கப்படாத கட்டணமாக 3,300.00 ரூபாவைச் செலுத்தி 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.10.18 ஆம் திகதி தொடக்கம் 2024.11.01 ஆம் திகதி வரை களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை உங்களால் கொள்வனவு செய்யலாம்.
07. விலைமனுக்களை 2024.11.04 ஆம் திகதி (11.00) அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனு மூடப்படும் திகதிக்கு பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
08. விலைமனு 91 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
09. அனைத்து விலைமனுக்களும் 130,000.00 ரூபாவின் (ரூபா ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மாத்திரம்) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனு பிணையானது விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 2024.03.04 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

    மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது,
    **கணக்காளர்,**
    **1ஆவது மாடி,**
    **நிர்வாகக் கட்டிடம்,**
    **கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
    **களுபோவில.**

# பெறுகை அறிவித்தல்

## பண்டாரகம பிரதேச சபை

## பண்டாரகம பிரதேச சபைக்குரித்தான மைத்திரி நகர சபை கட்டிடத்திற்கு சூரிய சக்தி முறைமையொன்றை பொருத்துவதற்காக விலைமனு கோரல்

01. மேல் மாகாண சபையினால் செயற்படுத்தப்படும் 2024 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண அபிவிருத்தி பிரதான நிதி மூலாதாரம் மற்றும் பண்டாரகம பிரதேச சபை ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தி செய்யப்படுவதற்குள்ள பண்டாரகம பிரதேச சபைக்குரித்தான மைத்திரி நகர மண்டப கட்டிடத்திற்கு சூரிய சக்தி முறைமையொன்றை பொருத்துவதற்காக நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் (SEA) செயல்நிலை பதிவைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| செயற்றிட்டம் | செயற்றிட்டத் தொகை (வெட் வரியின்றி) (ரூபா) | பெறுகை முறை | பதிவு | மீளளிக்கப் படாத வைப்பு | விலைக் கோரல் பிணை (மீளளிக்கப் படும்) |
|---|---|---|---|---|---|
| பண்டாரகம பிரதேச சபைக்குரித்தான மைத்திரி நகர சபை கட்டிடத்திற்கு சூரிய சக்தி முறைமையொன்றை பொருத்துதல் | 6,800,000.00 | NCB (தேசிய போட்டி ரீதியிலான விலைக் கோரல்) | நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் பதிவு செய்த நிறுவனமாகவிருத்தல் வேண்டும் | ரூபா 3,000.00 | ரொக்கப் பணமாக ரூபா 68,000.00 அல்லது அங்கீகரிக்கப் பட்ட பிணை முறி மூலம் ரூபா 136,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் பிரகாரம் விலைமனு கோரப்படும்.
03. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் மேற்கூறிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் 2024-10-18ஆம் திகதி முதல் 2024-11-07ஆம் திகதி வரையில் அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் பண்டாரகம பிரதேச சபை பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் செயற்றிட்டம் தொடர்பான மேலதிக விபரங்களை 0382290975 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
04. மேற்கூறிய கட்டணத்தைச் செலுத்தி 2024-10-18ஆம் திகதி முதல் 2024-11-07ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களை பண்டாரகம பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
05. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் படிவங்களை இரு பிரதிகளாக வெவ்வேறு இரு உறைகளில் இட்டு ஒவ்வொரு உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனவும், வலதுபக்க மேல் மூலையில் பண்டாரகம பிரதேச சபைக்குரித்தான மைத்திரி மண்டபக் கட்டிடத்தில் சூரியசக்தி முறைமையை பொருத்துதல்'' எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் ஒரே உறையில் இட்டு அந்தக் கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பண்டாரகம பிரதேச சபையில் பண்டாரகம பிரதேச சபைக்குரித்தான மைத்திரி மண்டபக் கட்டிடத்தில் சூரியசக்தி முறைமையை பொருத்துதல் எனக் குறிப்பிட்டு 2024-11-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் ''செயலாளர், பண்டாரகம பிரதேச சபை, புதிய சிறப்புச் சந்தைக் கட்டிடத்தொகுதி, களுத்துறை வீதி, பண்டாரகம'' எனும் முகவரிக்கு கேள்விப் படிவங்களை முத்திரைக் குறி பொறித்து பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.
06. கேள்விப் படிவங்கள் 2024-11-08ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07. கேள்வி நிபந்தனைகள் மற்றும் கேள்விக்கு இயைபான சகல ஆவணங்களும் இந்த விளம்பரத்தின் பகுதியாக கவனத்திற் கொள்ளவும்.
08. முழுமையற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை குறித்த கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**2024-10-18ஆம் திகதி**
**பண்டாரகம பிரதேச சபை,**
**பண்டாரகம.**
**0382290975**

**ஈ.எம்.கே.என். லக்மாலி,**
**செயலாளர்,**
**அதிகாரம் வாய்ந்த கடமைகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**பண்டாரகம பிரதேச சபை.**

# 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகமை

2025ஆம் வருடத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு இவ்வைத்தியசாலையில் பதிவு செய்ய உத்தேசிக்கும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களது ஏக முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் / வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அரச நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்கள்**

1. அலுவலக காகிதாதிகள் (கணனிக் காகிதாதிகள் உட்பட)
2. அலுவலக தளபாடங்கள் (மரம், உருக்கு, நாரிழை)
3. அலுவலக உபகரணங்கள் (புகைப்படப் பிரதி இயந்திரம், டிஜிட்டல் டுப்ளிகேட்டர்கள், தொலைநகல் இயந்திரம், கணித்தல் இயந்திரங்கள் ஏனைய அலுவலக உபகரணங்கள்)
4. கணனி மற்றும் அதனைச் சார்ந்த துணைப்பொருட்கள்
5. மின்னுபகரணங்கள் (வளிச்சீராக்கி இயந்திரம், குளிர்சாதனம், சலவை இயந்திரம், மின்விசிறிகள்)
6. சீருடைத் துணிகள் / அனைத்து வகையான வைத்தியசாலை துணிகள் (படுக்கை விரிப்புகள், கட்டம் போட்ட துணிகள், திரைச்சீலைகள், துவாய்கள், நுளம்பு வலைகள், பஞ்சுத் தலையணைகள் போன்றன)
7. கொதிகலன்கள், கோப்பைகள், பிடிச்சட்டிகள் மற்றும் மின் சுருள்கள் (எலிமன்ட்)
8. கனரகப் பொருட்கள் (இரும்புக் குழாய்கள், ட்ரொலிகளுக்கான சக்கரங்கள், ஆணிகள் மற்றும் சுரைகள், பூட்டுகள், திறப்புகள், சிறிய கருவிகள் போன்றன)
9. வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பெட்டறிகள்
10. பெட்டறிகள் (AA, AAA, C, D Rechargeable)
11. பீ.வீ.சீ. குழாய்கள் மற்றும் நீர்க்குழாய் இணைப்புப் பொருட்கள்
12. குப்பை கூழங்களை அகற்றுவதற்கான பொலித்தீன் உறைகள்
13. மின் இணைப்புகள் மற்றும் மின் வழங்கல்களுக்குத் தேவையான மின் குமிழ்கள் மற்றும் மின் கம்பிகள் மற்றும் பல்வேறு வகையான சுவிட்ச்கள் போன்றன.
14. இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள் மற்றும் இறப்பர் மெத்தைகள்
15. மெகின்டோஸ்கள் மற்றும் ரெக்ஸின்கள்
16. தோற் காலணிகள் மற்றும் தோற் பொருட்கள்
17. சவர அலகுகள் (பிளேட்) (சவரம் செய்வதற்காக)
18. டிஜிட்டல் பிரின்டிங் (பெனர்களுக்காக), திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள், பிளாஸ்டிக் வேலைகள், பெயர்ப் பலகைகள் மற்றும் ஸ்டிக்கர் தயாரித்தல்
19. அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
20. மருத்துவ உபகரணங்கள்
21. ஆய்வுகூட உபகரணங்கள்
22. மருந்துகள்
23. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள்
24. பற் சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
25. இரசாயனப் பொருட்கள் / ஆய்வுகூட பாவனைப் பொருட்கள்
26. மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரண உதிரிப்பாகங்கள் வழங்குதல்
27. வைத்தியசாலைக் கட்டில்கள், நோயாளர் காவிகள், ட்ரொலிகள், உணவு ட்ரொலிகள், சக்கர நாற்காலிகள், சேலைன் ஸ்டான்ட்கள், ஒக்ஸிஜன் ஸ்டான்ட்கள்
28. நறுமண சவர்க்காரங்கள், சலவை சவர்க்காரங்கள், சலவைத் தூள்கள், சுத்திகரிப்புத் தூள்கள்
29. SLSPO பிரிவிற்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
30. CCTV கெமரா முறைமையை பொருத்துதல் மற்றும் திருத்தவேலைகள்
31. உள்ளக தொலைபேசி முறைமையை வழங்கி பொருத்துதல்
32. பொதுமக்கள் தொடர்பு முறைமையை வழங்கி பொருத்துதல்

**02. சேவைகள்**

1. வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் குளிர்சாதனம், மத்தியமயப்படுத்தப்பட்ட வளிச்சீராக்கி முறைமைகள், சடல அறைக்கான குளிர்சாதன முறைமைகளை பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
2. கணனி இயந்திரங்கள், அச்சுப் பொறிகள், தொலைநகல், புகைப்படப் பிரதி, காசோலை அச்சுப் பொறி, டுப்ளோ இயந்திரம், பல்லூடக இயந்திரம், தட்டச்சுப் பொறிகள் உட்பட அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகள்
3. சலவை இயந்திரம், மின்விசிறிகள், நீர்ப் பம்பிகள், மின் கேத்தல்கள், கொதிகலன்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தையல் இயந்திரங்கள், மைக்ரோவேவ் அவன் உட்பட ஏனைய மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள்
4. பொதுமக்கள் தொடர்பு முறைமையின் திருத்தவேலைகள்
5. வேலைத்தளங்களுக்கான (Work shop) மின்சாரக் கருவிகள் (Power Tools) உட்பட ஏனைய உபகரணங்களின் திருத்தவேலைகள்
6. அலுமினிய பிடிச்சட்டிகள் மற்றும் துருப்பிடிக்காத உபகரணங்களின் திருத்தவேலைகள்
7. கதிரை பின்னுதல் மற்றும் மரத் தளபாட திருத்தவேலைகள்
8. வாயு அடுப்பு திருத்தவேலைகள்
9. வாகனங்களின் திருத்தவேலைகள்
10. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
11. வாகன வளிச்சீராக்கி முறைமை திருத்தவேலைகள்
12. வாகன மின்சார முறைமை திருத்தவேலைகள்
13. முச்சக்கரவண்டி திருத்தவேலைகள்
14. வாகன குஷன், கார்பட், ஆசன மேலுறை இடுதல்
15. வாகன தகரவேலை மற்றும் நிறப்பூச்சு வேலை
16. வாகனங்களை காப்புறுதி செய்தல்
17. போக்குவரத்து வசதிகளை வழங்குதல் (பயணிகள் மற்றும் பொருட்கள்)
18. வர்த்தகப் பெறுமதியற்ற மரம் மற்றும் கிளைகளை வெட்டி அகற்றுதல்
19. இணையதள முறைமைகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
20. விசேடத்துவமான சக்கர நாற்காலிகளுக்கு வெள்ளி முலாம் பூசுதல் / கல்வனைஸ் செய்தல் / துகள் முலாம் (Powder Coating) இடுதல்
21. மின்பிறப்பாக்கி இயந்திரங்களின் திருத்தவேலை மற்றும் சேர்விஸ் செய்தல்
22. மின்னுயர்த்திகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
23. மருத்துவ வாயு முறைமையின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல்
24. மருத்துவ உபகரணங்கள் மற்றும் இரசாயன உபகரணங்களின் திருத்தவேலைகள்
25. CCTV கெமரா முறைமை திருத்தவேலைகள்
26. உள்ளக தொலைபேசி முறைமையைப் பொருத்துதல், பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
27. எரியூட்டியை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்

- 2.09 முதல் 2.15ஆம் இலக்கத்தின் கீழான சேவைகளுக்காக ஜாஎல, வத்தளை, மஹர மற்றும் களனி போன்ற பிரதேச சபைகளின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் அமைந்துள்ள சேவை நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**03 நிபந்தனைகள்**

3.1 பதிவுக் கட்டணமாக ஒரு விடயத்திற்காக 1000.00 ரூபாவை (மீளளிக்கப்படாதது) ரொக்கப் பணமாக 2024-10-18ஆம் திகதி முதல் 2024-11-12ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் சிறாப்பருக்கு செலுத்த வேண்டும் என்பதுடன் அதன்பொருட்டு வைத்தியசாலையினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டின் (பொது 172) மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். (காசுக் கட்டளைகள், காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

3.2 ஒரு விண்ணப்பதாரி பல விண்ணப்பங்களை அனுப்புவதாயின் அவை அனைத்தையும் ஒரே உறையிலிட்டு அனுப்பலாம்.

3.3 பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும். எனினும் ஏனைய வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரும் உரிமையை வைத்தியசாலை பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

3.4 வேண்டுகோள் விடுக்கப்படும் வேளையில் விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறுபவர்கள், கட்டளை விடுக்கப்பட்டபின் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் மற்றும் தேவையானபோது மாதிரிகள் மற்றும் விபரமான தகவல்களை வழங்காமல் தவிர்க்கும் வழங்குநர்களின் பெயர்கள் முன்னறிவித்தலின்றி பதிவுவேட்டிலிருந்து அகற்றப்படும்.

3.5 1.20 மற்றும் 1.25ஆம் இலக்க விடயங்களுக்கு வழங்குநர்களால் தமது நிறுவனத்தில் உள்ள உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்களில் பட்டியலொன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

3.6 கட்டளை விடுக்கப்பட்ட பொருட்களின் எதிர்பார்க்கப்பட்ட தரத்துடன் பூரணமாக ஒப்படைத்திருத்தல் அல்லது குறித்த சேவையை திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்பட்டிருந்தால் மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். வழங்குநர்களால் ஆகக்குறைந்தது 02 மாத கால கடன் வசதி வழங்கப்படல் வேண்டும்.

3.7. வழங்கல் செயற்பாடுகளின் போது நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தினால் அவ்வப்போது விடுக்கப்படும் அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

3.8 பதிவு செய்வதற்கான விண்ணப்பம் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் பின்வரும் மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய தங்களால் தயார் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை உபயோகிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

3.9 அனைத்து விண்ணப்பங்களையும் பின்வரும் முகவரிக்கு 2024-11-24ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025'' எனக் குறிப்பிடல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் அன்றைய தினத்திற்குப் பின் இது தொடர்பான எந்தவொரு விண்ணப்பமும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

3.10 இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் இறுதித் தீர்மானத்தை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

***மேலதிக விபரங்களை 0112959261/2 நீடிப்பு 722 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.***

**பணிப்பாளர்,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**ராகமம.**

**வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2025ஆம் வருடம்**

01. வியாபாரத்தின் / வழங்குநரின் :……………………………………………………………………..
02. முகவரி:……………………………………………………………………………………..........
03. வியாபார நடவடிக்கையின்போது தொடர்புகொள்ளக்கூடியவரின் பெயர்:…………………………....
04. தொலைபேசி இல.................................................. தொலைநகல் இல........................................
05. மின்னஞ்சல் முகவரி:..........................................................................................
06. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வழங்கல் / சேவையின் பெயர் மற்றும் இல..............................
07. வியாபாரத்தின் தன்மை (உற்பத்தியாளர் / உள்ளூர் முகவர்):.............................
08. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இல...........................................................................................
(குறித்த சான்றிதழின் புகைப்படப் பிரதியை இணைக்கவும்)
09. கடன் வகதிகள் (i) கால எல்லை: ……………………………………………………
(ii) பெறுமதி: ……………………………………………………
10. பெறுமதிசேர் வரி பதிவிலக்கம் (VAT): ……………………………………………………...
- இயைபுடைய வருடத்திற்கு செயல்நிலை வெட் வரி செலுத்துபவரா என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும்.
11. பதிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இல.: ……………………………………………
திகதி:……………………………………………………………………………….
தொகை:……………………………………………………………………………….
12. போக்குவரத்து வசதிகள் உள்ளனவா என்ற விபரம்:

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன் என்பதுடன் வடகொழும்பு போதனா வைத்தியசாலையின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்/றோம்.

…………………………………… ………………….. …………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி நிறுவனத்தின் முத்திரை

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை - கண்டி

கண்டி தேசிய வைத்தியசாலையின் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA)இல் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. 2024.10.18 மு.ப. 9.00 முதல் 2024.11.08 பி.ப. 2.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத ரூபா 4,000.00 ஐ வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்பு கேள்வி ஆவணங்களை வைத்தியசாலையின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம் இரு பிரதிகளுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.11.08 மு.ப. 10.00 இற்கு முன்பு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறாக உறைகளில் இட்டு அவ் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு தனி உறையில் உட்படுத்தி அவ் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பலாம். அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கேள்வி ஆவணங்களை 2024.11.08 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்ப வேண்டியதுடன் அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் ஒப்பந்தக்காரர் அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

05 மில்லியனுக்கு மேற்படும் கேள்விப் பத்திரத்திற்காக இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்கள பதிவுச் சான்றிதழ் (PCA3) கட்டாயமாகும்.

| | வேலைகள் | அடிப்படை செலவு மதிப்பீடு (மில்லியன்) | ஒப்பந்தக் கால எல்லை | தகைமைகள் | தேவைப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை (ரூ.) | கால எல்லை |
| 01 | Renovation Works Lab | 27.86 | 120 நாட்கள் | C5/C4 | 487,700.00 | 2025.02.28 |
| 02 | Repairing & Colour Washing of OPD Building Front Face | 8.94 | 90 நாட்கள் | C7/C6 | 156,600.00 | 2025.02.20 |
| 03 | Renovation of Circuit Bungalow of Health | 27.40 | | C5/C4 | 479,500.00 | 2025.02.28 |
| 04 | Repairing Work of Building at Galaha Bikku Centre | 3.00 | 45 நாட்கள் | C8/C7 | 52,650.00 | 2025.02.06 |
| 05 | Repairing and Colour Washing Work at Galaha Bikku Centre | 4.30 | 60 நாட்கள் | C8/C7 | 75,400.00 | 2025.02.06 |
| 06 | Construction of Generator Room and Repairing of Water Tank at Galaha Bikku Centre | 0.75 | 60 நாட்கள் | C9/C8 | 13,250.00 | 2025.01.23 |
| 07 | Renovation of Boundary Fence at Galaha Bikku Centre | 7.18 | 150 நாட்கள் | C7/C6 | 125,750.00 | 2025.02.20 |

பெறுகை பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை, கண்டி.**

# கொழும்பு மாநகர சபை

## விலைமனுவுக்கான அழைப்பு

பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பின்வரும் சேவைகள் மற்றும் பணிகளுக்காக கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இல. | கேள்விமனு இல. | விபரம் | கேள்விமனுதாரர்/ விலைமனுதாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு பிணைமுறி/ பிணை பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | CPD21/2530 /2024 | கொழும்பு நகர எல்லையில் சிறுவர் விளையாட்டு உபகரணங்களை வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு | வழங்கல்/ சேவை வழங்குநர்கள் வர்த்தகப் பதிவுடன் இந்த வகை வழங்கல்/ சேவைகளில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். | ரூபா 5,900.00 | 200,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற கோரம்போது பெறத்தக்கது |

**இரு முறைகள்** மூலம் கேள்விமனு ஆவணத்தை (அசல் மற்றும் நகல்) பெற முடியும்.

**முறை 01 - கொ.மா.ச. இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்தல் (www.colombo.mc.gov.lk).**

1. மேல் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத விலைமனு ஆவணத்தை பின்வரும் முறைமூலம் செலுத்த முடியும்.

எந்த ஒரு மக்கள் வங்கி கிளையில் இருந்தும் கொழும்பு மாநகர சபையின் 167-1-001- 6-3169425 என்ற மக்கள் வங்கி நகர சபை கிளைக்கு வரவு வைத்தல்.

a) வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கொழும்பு நகர எல்லையின் பின்வரும் மாநகர வளாகங்களின் கருமபீடங்களுக்கு செலுத்துதல்.

➢ **மாவட்ட அலுவலகம் 04**
**இல.: 147, ஹை லெவல் வீதி,**
**கிருளப்பனை,**
**கொழும்பு 06**

➢ **அனைத்து மாவட்ட அலுவலகங்கள்**

II. விலைமனு ஆவணத்துடன் அசல் பற்றுச்சீட்டு/ ரசீதை இணைப்பது கட்டாயமாகும்.

**முறை 02 - நகர மண்டப வளாகத்தில் இருந்து பெறுதல்**

a. நகர மண்டப வளாகத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு ஒவ்வொரு கேள்விமனு/ விலைமனுவுக்காகவும் மீளளிக்கப்படாத கேள்விமனு ஆவணக் கட்டணத்தை செலுத்தி 2024.11.06 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து கொழும்பு 07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகைக் குழுவின் அலுவலகத்தில் இருந்து கேள்விமனு/ விலைமனு ஆவணத்தை பெறலாம்.

b. கேள்விமனு/ விலைமனு ஆவணங்கள் 2024 நவம்பர் 6 ஆம் திகதி பி.ப. 3.00 இற்கு முன்னர் வழங்கப்படும்/ இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

c. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க விலைமனு பத்திரம்/ பிணை பெறுமதி கேள்விமனு/ விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். கேள்விமனு/ விலைமனு 2025.04.05 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

d. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட நகலுடன் அசல் கேள்விமனு/ விலைமனு ஆவணங்கள் 2024 நவம்பர் 7 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 07, நகர மண்டபம், மாநகர செயலாளர் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

e. கேள்விமனு/ விலைமனு 2024 நவம்பர் 07 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு மூடப்படுவதோடு மூடப்படும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விமனு/ விலைமனு நிராகரிக்கப்படும் மற்றும் அதன் பின்னர் கேள்விமனு/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்விமனு/ விலைமனுக்கள் மூடப்படும். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளரிடம் இருந்து (பெறுகை) தெளிவை பெற முடியும்.

f. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய 5.00 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்விமனு/ விலைமனுவை மேற்கொள்ளும் கேள்விமனுதாரர்கள்/ விலைமனுதாரர்கள் பொது ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்த பின்னர் PCA (3) இனை சர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர நபை.**

### பெயர் மாற்றம்

அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி, பிலால் வீதி, இலக்கம் 206/04 என்ற முகவரியைச் சேர்ந்த முகைதீன் பிச்சை ஹசன் வீவி (867043098V) எனும் பெயருடைய நான் இன்று முதல் (18.10.2024) எனது பெயரை முகைதீன் பிச்சை றிஸ்மியா என மாற்றிக் கொண்டேன் என்பதோடு எதிர்காலத்தில் முகைதீன் பிச்சை றிஸ்மியா என்ற பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

**முகைதீன் பிச்சை றிஸ்மியா.**

## அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் ஒன்றியப் பொதுக்கூட்டமும், செயற்குழு உறுப்பினர்கள் தெரிவும்

| | | |
|---|---|---|
| காலம் | : | 03.11.2024 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | : | காலை 8.30 மணி |
| இடம் | : | அஸ்ஹர் பாடசாலை கேட்போர் கூடம் |

அக்குறணை அஸ்ஹர் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்பாய் வேண்டிக்கொள்கின்றேன்.

**M.F.M. சிராஜ்,**
**அதிபர்,**
**அஸ்ஹர் தேசிய பாடசாலை,**
**அக்குறணை.**

## 2025 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்
## கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா

2025 ஆம் ஆண்டுக்காக இந்த வைத்தியசாலைக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாளர்கள்/ அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள்/ மொத்த விற்பனையாளர்கள்/ பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் உட்பட அரசாங்கம் அங்கீகரித்த நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக கீழுள்ள இலக்கம் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவத்தை உங்களால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்த பின் கீழுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “2025 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்” மற்றும் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பொருளின் பெயர், அ வின் கீழ் இருக்கும் வரிசை இலக்கத்தையும், வழங்குவதற்கு எதிர்பார்க்கும் சேவையாயின் ஆ வின் கீழுள்ள வரிசை இலக்கத்தையும் (உதா.:- அ - 01, ஆ - 32) என்று குறிப்பிடவும். எமது நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு அமைய முறையான வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024 டிசம்பர் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பணிப்பாளர், கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தபாலில் ஏற்படுகின்ற காணாமல்போதல், தாமதத்திற்கு இந்த நிறுவனம் பொறுப்பேற்காது. (அலுவலக நேரத்தில் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கும் முடியும்.)

03. வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விண்ணப்பதாரர்கள் தாம் பதிவு செய்வதற்கு விரும்பும் ஒவ்வொரு பொருள்/ சேவைகளுக்காக மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா பணத்தை செலுத்தி கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பொது 172 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து இருத்தல் வேண்டும். காசோலை Moneyorders ஏற்கப்படமாட்டாது. பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தது ஒரு மாத காலத்திற்கு கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்க வேண்டும் என்பதோடு பொருட்களை கொண்டுவருதலும் குறித்த நிறுவனத்தினால் இலவசமாக மேற்கொள்ளல் வேண்டும்.

**04. (அ) வழங்க வேண்டிய பொருட்கள்**

1. அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் (கணிப்பான் இயந்திரம், நகல் பிரதி, அச்சுப்பொறி, ரோணியோ இயந்திரம், ups மற்றும் கணினி உட்பட)
2. அலுவலக எழுது பொருட்கள்
3. கணினி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்கள் (ரிபன், டோனர் மற்றும் சீடி தகடு உள்ளிட்டவை)
4. அலுவலக தளபாடங்கள் (பலகை, பிளாஸ்டிக், பைபர் கிளாஸ் மற்றும் உருக்கு)
5. தலையணை மற்றும் மெத்தை
6. பாய், விளக்குமாறு, தும்புத்தடி மற்றும் அனைத்து வகையான தும்பு உற்பத்திகள்
7. துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் நுகர்வு பொருட்கள்
8. கட்டில் விரிப்புகள் உட்பட அனைத்து வகையான துணி சார்ந்த உற்பத்திகள்
9. மெகின்டோஷ் மற்றும் ரெக்ஷின்
10. அலுமினியம் பொருட்கள் உட்பட உலோகப் பொருட்கள்
11. பீங்கான் பொருட்கள் (போசிலேன்)
12. ஹாட்வெயார் நிறுவனங்கள் (நிர்மாணப் பொருட்கள், வயர், மின்குமிழ், வண்ணப்பூச்சு. வார்னிஷ் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் உட்பட)
13. வாகன உதிரிப்பாகங்கள்
14. வாகன டயர், டியூப் மற்றும் பெட்டரி
15. மின் உபகரணங்கள் (வளிச்சீராக்கி, குளிர்சாதனப்பெட்டி மற்றும் மின்விசிறி)
16. பெயர் பலகை மற்றும் விளம்பர பலகை
17. காலணி, தரைவிரிப்பு உட்பட இறப்பர் சார்ந்த பொருட்கள்
18. பொலித்தீன் உட்பட அது சார்ந்த உற்பத்திகள்
19. மரப்பலகை வகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்
20. மருந்து உறை
21. மருத்துவ உபகரணங்கள்
22. சத்திரசிகிச்சை உபகரணங்கள்
23. சத்திரசிகிச்சை நுகர்வு பொருட்கள்
24. அனைத்து வகையான மருந்து பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
25. X ray Film/ ECG Paper Roll
26. Ultrasound Scan இற்கு தேவையான நுகர்வு பொருட்கள்
27. ஆய்வுகூட நுகர்வு பொருட்கள்
28. பல் மருத்துவ நுகர்வு பொருட்கள்
29. சத்திரசிகிச்சை ஆடை பொருட்கள்
30. கிருமிநாசினி பொருட்கள்
31. தீ காப்பு உபகரணங்கள்

**(ஆ) வழங்க வேண்டிய சேவைகள்**

32. கணினி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்
33. குளிர்சாதனப்பெட்டி மற்றும் வளிச்சீராக்கி நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
34. மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல் (நிழல் பிரதி இயந்திரம், அச்சுப்பொறி இயந்திரம், ரோணியோ இயந்திரம், UPS, கணனி, மின்விசிறி, தொலைக்காட்சிப் பெட்டி, சலவை இயந்திரம், பெண்டர், ரைஸ் குக்கர் மற்றும் தேங்காய் துருவும் இயந்திரம்)
35. வாகன நன்னிலைப்படுத்தல்
36. உருக்கி ஓட்டல் வேலை மற்றும் இரும்பு சார்ந்த வேலைகள்
37. இறப்பர் முத்திரை தயாரித்தல்
38. திணைக்கள அடையாள அட்டை தயாரித்தல்
39. அச்சு செயற்பாடுகள்
40. எரிவாயு அடுப்பு பழுதுபார்த்தல்
41. கழிவுகளை அகற்றல் (சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ சிகிச்சை)
42. வாகன புகை உமிழ்வு சோதனை
43. தினசரி பத்திரிகை வழங்கல்
44. சடலங்களை வைத்தியசாலையில் இருந்து எடுத்துச் சென்று அடக்கம் செய்தல் வரை
45. நீர் தொட்டி சுத்தம் செய்தல்
46. கறையான்கள் உட்பட பூச்சிகள் ஒழிப்பு
47. ஆய்வுகூட சேவை (ஆய்வுகூட சோதனை உட்பட)
48. உள்ளக மின் கட்டமைப்பின் பராமரிப்பு
49. மின்பிறப்பாக்கி சேவை, பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்
50. கட்டிட நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கல்
51. போக்குவரத்து சேவை வழங்கல் (Excavator மற்றும் JCB உட்பட கனரக வாகனங்கள் வாடகை அடிப்படையில்)
52. அபாயகரமான மற்றும் தேவையற்ற மரங்களை வெட்டுதல், தோட்ட அலங்காரம்
53. மரச்சாமான்கள் பழுதுபார்த்தல்
54. நாற்காலி பின்னல் (பிரம்பு சார்ந்த வேலைகள்) மற்றும் குஷன் வேலை
55. மருத்துவ உபகரணங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
56. சத்திரசிகிச்சை உபகரணங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
57. ஆய்வுகூட உபகரண நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
58. பல் சிகிச்சை உபகரணங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
59. X சயல/ECG/ Scan இயந்திரங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்

(இ) விற்பனை

அகற்றும் பொருட்கள் (அட்டைப்பெட்டி, பத்திரிகை, காகிதம், கண்ணாடி, போத்தல், சிரட்டை, அனைத்து வகையான பொலித்தீன், பிளாஸ்டிக் வகைகள், இலத்திரன் உபகரணங்கள் மற்றும் பாகங்கள், மின்குமிழ்கள்)

(ஈ) சேவை வழங்குநர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் படிவங்கள் நிறுவனத்தால் வழங்கப்படும்.

**பணிப்பாளர்**
**(தொலைபேசி இலக்கம்: 0112 - 578229/ 0112 - 549391) நீடிப்பு - 304/305**

**05. மாதிரி விண்ணப்பப் படிவம்**

**2025 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்**
**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை - முல்லேரியா**

01. வழங்குநரின் பெயர்:- ..........................................................
02. வர்த்தகத்தின் பெயர்:- ..........................................................
03. வர்த்தக முகவரி:- ..........................................................
04. தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி:- ..........................................
    (தொடர்பு கொள்ளக் கூடிய சரியான தொ. பே. இலக்கத்தை குறிப்பிடுங்கள்)
05. வர்த்தகப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:- ..........................................................
06. விண்ணப்பிக்கும் வழங்கல்/ சேவை:- (குறித்த வரிசை இலக்கத்துடன் சரியாக குறிப்பிடவும்.) ..................................
07. கடன் வசதி வழங்க முடியுமான காலம்:- ..........................................................
08. தற்போது தாம் வழங்கல் மேற்கொள்ளும் அரச அல்லது வேறு நிறுவனங்கள்:- ..........................................
09. காசு செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம்:- ..........................................................

மேற்படி இல. 07 இன் கீழ் குறிப்பிடப்படும் கடன் வசதிகளை வழங்குவதற்கும் வைத்தியசாலை களஞ்சியம் வரை பொருட்களைப் போக்குவரத்தை இலவசமாக வழங்குவதற்கும் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதாகவும், அதற்கமைய செயற்படுவதற்கும் நான்/ நாம் இணங்குகிறேன்/ இணங்குகிறோம்.

**கையொப்பம்**

## கேள்வி அறிவித்தல்

### கலேவெல பிரதேச சபை

### 2025ஆம் வருடத்தில் இறைச்சிக் கடைகளின் வியாபார உரிமை, வாரச் சந்தைகளில் வரிகளைச் சேகரிக்கும் வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் கோரல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இறைச்சியை விற்பனை செய்யும் வியாபார உரிமை, வாரச் சந்தைகளில் வரிகளைச் சேகரிக்கும் வியாபார உரிமை, பொது மலசலகூடங்களில் சேவைக் கட்டணங்களை அறவிடும் உரிமையை 2025-01-01ஆம் திகதி முதல் 2025-12-31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்காக என்னால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் : 2024-10-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
02. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் : 2024-11-04ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை
03. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 2024-11-04ஆம் திகதி பி.ப. 03.00 மணியாகும்.

கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் முன்னைய குத்தகைதாரர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய வரிகளை நிலுவையின்றி செலுத்தியிலிருந்தால் மாத்திரமே கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்கப்படும். வரி நிலுவையுள்ள குத்தகைதாரர்களுக்கு கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

**கேள்விதாரர்களுக்கான அறிவுரைகள்:**

01. 2024-10-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் குறித்த கட்டணத்தை இந்த அலுவலகத்திற்குச் செலுத்தி கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இயைபுடைய கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒவ்வொரு ஆதனத்திற்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. சகல கேள்வி மாதிரிப் படிவங்களும் இரு நகல்களில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்விரு பிரதிகளையும் வெவ்வேறாக 2 உறைகளில் இட்டு ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கலேவெல பிரதேச சபை 2025ஆம் வருடத்தில் விற்பனை குத்தகை உரிமையை பெற்றுக்கொள்ளல்:...........................’’ (குறித்த இடத்தின் பெயர்) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

03. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையை 12ஆல் வகுத்து 12 சமமான தவணைகளில் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒரே தடவையில் 03 மாதங்களுக்கான குத்தகை தொகைக்குச் சமமான தொகையை சபையில் வைப்புச் செய்து உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும். மேலும் மாதாந்த குத்தகைத் தொகையை மாதத்தின் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.

04. குத்தகைதாரரினால் கோரப்படும் கேள்வித் தொகைக்கு 10% முத்திரைக் கட்டணம் அறவிடப்படும்.

05. இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அல்லது பிரதேச சபையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அவ்வப்போது விதிக்கப்படும் வரிகளைச் செலுத்துவதற்கும், வரித் தொகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் குத்தகைதாரர் இணங்குதல் வேண்டும்.

06. கேள்விப் படிவங்களை தபாலில் அனுப்புவதானால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘செயலாளர், பிரதேச சபை, கலேவெல’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் 2024-11-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.

07. இந்த அறிவித்தலுக்கு இயைபான கேள்வி ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்து கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் அதிகாரத்தை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன், இது தொடர்பில் கலேவெல பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

08. கேள்விகள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

09. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காதிருத்தல் அல்லது கேள்வியை ஏற்றுக்கொண்டு குறித்த தொகையைச் செலுத்தி உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தவறுபவர்கள் அல்லது ஆகக் குறைந்த கேள்வித் தொகைக்குக் குறைவாக கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்கள் அல்லது குறித்த நேரத்திற்குப் பின்னர் கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்களின் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.

10. கேள்வி மாதிரிப் படிவங்களில் மாற்றங்களைச் செய்வதானால் கேள்விதாரர் அதற்கு தமது சிற்றொப்பத்தை இட்டு உறுதி செய்தல் வேண்டும். இலக்கத்தில் மற்றும் எழுத்தில் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைகளுக்கிடையில் வித்தியாசம் இருந்தால் எழுத்தில் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகை சரியானதெனக் கவனத்திற் கொள்ளப்படும்.

11. கேள்விதாரரின் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை கேள்வி மாதிரிப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வி மாதிரிப் படிவத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாக கையொப்பமிட்டு கேள்விப் படிவத்தின் மூலப் பிரதியுடன் இணைத்தல் வேண்டும்.

12. குறித்த இடங்களுக்கான மின் கட்டணங்கள் / நீர் கட்டணங்கள் குத்தகைதாரரால் செலுத்தப்படல் வேண்டும்.

13. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் வருகை தந்து அல்லது கலேவெல பிரதேச சபைச் செயலாளரின் 066 2289275 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை 1**

**இறைச்சிக் கடைகள்**

| தொ. இல. | இறைச்சிக் கடைகளின் பெயர் | 2025ஆம் வருடத்திற்கான உத்தேச ஆகக் குறைந்த கேள்வி ரூபா 2024ஆம் வருடத்தின் கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | புலனவெவ மாட்டிறைச்சிக் கடை | 944,750.00 | 10,000.00 | 1,500.00 |
| 02 | நபடகஹவத்த மாட்டிறைச்சிக் கடை | 225,400.00 | 10,000.00 | 1,500.00 |
| 03 | கனாதன மாட்டிறைச்சிக் கடை | 171,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 04 | வஹகோட்டே மாட்டிறைச்சிக் கடை | 110,500.00 | 10,000.00 | 1,500.00 |
| 05 | வேரகலவத்த மாட்டிறைச்சிக் கடை | 136,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 06 | மாதிபொல மாட்டிறைச்சிக் கடை | 47,200.00 | 5,000.00 | 1,500.00 |
| 07 | கனாதன பன்றியிறைச்சிக் கடை | 46,700.00 | 5,000.00 | 1,500.00 |
| 08 | ரங்வெடியாவ மாட்டிறைச்சிக் கடை | 106,000.00 | 10,000.00 | 1,500.00 |

**வாரச் சந்தைகள்**

| தொ. இல. | வாரச் சந்தையின் பெயர் | 2025ஆம் வருடத்திற்கான உத்தேச ஆகக் குறைந்த கேள்வி ரூபா | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கலேவல சனிக்கிழமை வாரச்சந்தை | 1150,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 02 | மக்குளுகஸ்வெவ வெள்ளிக்கிழமை வாரச்சந்தை | 120,500.00 | 10,000.00 | 1,500.00 |
| 03 | மாதிபொல வியாழக்கிழமை வாரச்சந்தை | 5,000.00 | 1,000.00 | 1,500.00 |

**பொது மலசலகூடங்கள்**

| தொ. இல. | பொது மலசலகூடங்களின் பெயர் | 2025ஆம் வருடத்திற்கான ஆகக் குறைந்த உத்தேச கேள்வி ரூபா | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கலேவெல பொது மலசலகூடம் | 255,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 02 | கலேவெல புதிய பஸ் நிலைய பொது மலசலகூடம் | | | |
| 03 | கலேவெல பட்டின சபை சந்தைக் கட்டிடத் தொகுதி பொது மலசலகூடம் | | | |

**கவனிக்க வேண்டியது:**

1. இறைச்சிக் கடைகளின் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரரினால் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடத்திற்கிணங்க கட்டிடமொன்றை தமது சொந்த செலவில் நிர்மாணித்துக் கொள்ளல் வேண்டும்.
2. வைப்புச் செய்யப்படும் மூன்று மாத வைப்புத் தொகையை 2026 ஜனவரி மாதத்தில் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**கே. அபேரத்ன,**
**செயலாளர்,**
**கலேவெல பிரதேச சபை.**

**2024-10-02ஆம் திகதி கலேவல பிரதேச சபை அலுவலகத்தில்.**




# வளர்ந்துவரும் ஆசிய கிண்ணம்: இலங்கை 'ஏ' இன்று களத்தில்

ஓமானில் இன்று ஆரம்பமாகும் வளர்ந்து வரும் அணிகளின் ஆசிய கிண்ணப் போட்டிகளில் பங்கேற்பதற்காக இலங்கை ஏ அணி நேற்று முன்தினம் (16) இரவு இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

ஓமானின் மஸ்கட் நகரில் நடைபெறும் இந்தத் தொடரில் இலங்கை ஏ அணி ஏ குழுவில் ஆடவுள்ளது. மொத்தம் எட்டு அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் ஏ குழுவில் இலங்கையுடன் ஆப்கானிஸ்தான், ஹொங்கொங் மற்றும் பங்களாதேஷ் ஏ அணிகள் இடம்பெற்றுள்ளன. பி குழுவில் இந்தியாவுடன் பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஏ அணிகள் உள்ளன.



சரிசமமான அணியை கொண்டிருப்பதாக எதிரணிகளுக்கு கடும் போட்டி கொடுக்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கை ஏ அணியின் தலைவர் நுவனிந்து பெர்னாண்டோ ஓமான் செல்வதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

'எமக்கு சிறந்த அணி ஒன்று கிடைத்துள்ளது. கடைசியாக நாம் ஆடிய தென்னாபிக்காவுக்கு எதிரான தொடரில் வெற்றியீட்டினோம். அதில் சோபித்த வீரர்களும் அணியில் இடம்பெற்றுள்ளார்கள். எனவே, தற்போதிருக்கும் அணியைப் பார்க்கும் போது சிறந்த முறையில் ஆட முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ந்து வரும் அணிகளின் ஆசிய கிண்ணப் போட்டியில் இலங்கை அணி இன்று (18) தனது முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது. தொடர்ந்து முதல் சுற்றில் ஒக்டோபர் 22 ஆம் திகதி ஹொங்கொங் அணியையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (20) பங்களாதேஷ் அணியை செவ்வாய்க்கிழமையும் (22) எதிர்கொள்ளவுள்ளது.

இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும் நிலையில் முதல் சுற்றில் குறைந்தது இரு போட்டியிலேனும் வெற்றியீட்டுவது அவசியமாகும்.

# இங்கிலாந்து அணிக்கு 297 ஓட்டங்கள் இலக்கு



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 297 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடி வரும் இங்கிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின்போது 2 விக்கெட் இழப்புக்கு 36 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முல்தானில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று (17) தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து அணி 291 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதன்போது சுழற்பந்து வீச்சாளர் சாஜித் கான் 7 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

முன்னதாக பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 366 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 75 ஓட்டங்களால் முன்னிலை பெற்றே இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. எனினும் அந்த அணி முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் 59.2 ஓவர்களில் 221 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

மத்திய பின் வரிசையில் சல்மான் அகா அதிகபட்சமாக 131 பந்துகளில் 63 ஓட்டங்களைப் பெற்றார். இங்கிலாந்து சார்பில் சுழற்பந்து வீச்சாளர் சுவைப் பஷீர் 19 ஓவர்களில் 66 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதேபோன்று ஜக் லீச் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பிரிடன் கார்ஸ் 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி இந்த டெஸ்டில் வெற்றி பெற 8 விக்கெட்டுகள் கைவசம் இருக்க இன்னும் 261 ஓட்டங்களைப் பெற வேண்டி உள்ளது. ஒலி பொப் 21 ஓட்டங்களுடனும் ஜோ ரூட் 12 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று போட்டியில் நான்காவது நாளாகும்.

# இந்தியாவின் மோசமான சாதனை



**நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 46 ஓட்டங்களுக்கு சுருண்டு படைத்த மோசமான சாதனை விபரம் வருமாறு,**

- பெங்களூரில் நியூசிலாந்துக்கு எதிராக இந்திய அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற 46 ஓட்டங்களும் அந்த அணி சொந்த மண்ணில் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்களாகும். முன்னர் அந்த அணி 1987 ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராகப் பெற்ற 75 ஓட்டங்களுமே குறைவாக இருந்தது. அதேபோன்று டெஸ்ட் போட்டியில் இந்திய அணி பெற்ற மூன்றாவது மிகக் குறைந்த ஓட்டங்களாகவும் இது உள்ளது. இதில் 2020 இல் அடிலெயிட் ஓவலில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 36 ஓட்டங்களுக்கு சுண்டது முதலிடத்திலும் 1974 இல் லோட்ஸில் இங்கிலாந்துக்கு எதிராக 42 ஓட்டங்களுக்கு சுருண்டது இரண்டாம் இடத்திலும் உள்ளது.

- இந்திய அணி 46 ஓட்டங்களுக்கு சுருண்டது ஆசியாவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் எந்த ஒரு அணியும் பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்களாகவும் அமைந்தது. முன்னர் 1986 இல் பைசலாபாத்தில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியும் 2002 இல் ஷார்ஜாவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணியும் 53 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்ததே முதல் இடத்தில் இருந்தன. அதேபோன்று நியூசிலாந்துக்கு எதிராக எந்த ஒரு அணியும் பெற்ற மிகக் குறைந்த ஓட்டமாகவும் இது இருந்தது. முன்னர் 2012 இல் நெப்பியரில் நடந்த போட்டியில் சிம்பாப்வே அணி 51 ஓட்டங்களுக்கு சுருண்டதே மோசமாக இருந்தது.

- ஆடவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த பின்னர் இந்தியா பெற்ற 46 ஓட்டங்கள் என்பது நான்காவது மிகக் குறைந்த ஓட்டங்களாகும். இந்த வரிசையில் 1932 ஆம் ஆண்டு மெல்பேர்னில்; நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து 36 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது உள்ளது.

- பெங்களூர் டெஸ்ட் போட்டியில் இந்திய துடுப்பாட்ட வரிசையில் முதல் எட்டு வீரர்களில் ஐவர் டக் அவுட் ஆகினர். டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் முதல் எட்டு துடுப்பாட்ட வீரர்களில் ஐவர் டக் அவுட் ஆனது இது இரண்டாவது முறையாகும். முன்னர் இவ்வாறு நிகழ்ந்தது நூற்றாண்டுக்கு முன் 1888 ஆம் ஆண்டிலாகும். அப்போது மான்செஸ்டரில் நடந்த போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக அஸி. வீரர்கள் இவ்வாறு டக் அவுட் ஆகினர்.

- இந்திய அணி கடைசி ஏழு விக்கெட்டுகளையும் 15 ஓட்டங்களுக்கு பறிகொடுத்தது. அதாவது 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்த இந்தியா 46 ஓட்டங்களுக்கு சகல விக்கொட்டுகளையும் பறிகொடுத்தது. எனினும் 2017இல் பூனேவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 11 ஓட்டங்களுக்கு கடைசி ஏழு விக்கெட்டுகளையும் பறிகொடுத்ததே குறைவாக உள்ளது.

- இதன்போது நியூசிலாந்தின் மட் ஹென்ரி 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 100 விக்கெட்டுகளை பூர்த்தி செய்தார். 25 போட்டிகளில் இந்த மைல்கல்லை எட்டியதன் மூலம் அவர் நியூசிலாந்துக்காக வேகமாக 100 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் ரிச்சட் ஹெட்லியுடன் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துகொண்டார்.

- நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர்களே இந்தியாவின் அனைத்து விக்கெட்டுகளையும் சாய்த்தனர். இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் வேகப்பந்து வீச்சாளர்கள் பத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தியது 2012 இற்குப் பின்னர் இது முதல் முறையாகும். குறிப்பாக 1988 தொடக்கம் இந்தியாவுக்கு எதிராக இன்னிங்ஸ் ஒன்றில் வருகை தந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் பத்து விக்கெட்டுகளையும் வீழ்த்திய ஏழு சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. இதில் ஐந்து முறை நியூசிலாந்து அணியே இந்த சாதனையைப் படைத்துள்ளது.

# 46 ஓட்டங்களுக்கு சுருண்டது இந்தியா



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 46 ஓட்டங்களுக்கே சுருண்டு தடுமாற்றம் கண்டுள்ளது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிவரும் நியூசிலாந்து அணி 134 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

பெங்களூரில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்ட நிலையில் நேற்று (17) இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் முடுப்பெடுத்தாடிய இந்திய அணி பந்தை எதிர்கொள்வதில் தடுமாற்றம் கண்டது.

முதல் விக்கெட்டை 9 ஓட்டங்களுக்கு இழந்த இந்திய அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. குறிப்பாக விராட் கொஹ்லி, சப்ராஸ் கான், கே.எல். ராகுல், ரவிந்திரா ஜடேஜா, ரவிச்சந்தர் அஷ்வின் ஆகியோர் டக் அவுட் ஆகினர்.

இதனால் அந்த அணி 31.2 ஓவர்களில் 46 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. ரிசப் பன்ட் பெற்ற 20 ஓட்டங்களும் அதிகம் என்பதோடு இருவர் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டத்தைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மெட் ஹென்ரி 13.2 ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு வில்லியம் ஒரூக் 12 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் நேற்று முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 50 ஓவர்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆரம்ப வீரர் டெவோன் கொன்வோய் 105 பந்துகளில் 11 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 91 ஓட்டங்களைப் பெற்றார்.

அட்டநேர முடிவின் போது ரச்சின்ரவிந்திரா22ஓட்டங்களுடனும் டரில் மிட்சல் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

நியூசிலாந்து அணி இன்னும் 7 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 134 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.

# ஷகீப் தனது கடைசி டெஸ்டில் ஆடுவதற்கு பெரும் முட்டுக்கட்டை

## அவர் பங்களாதேஷ் வருவதற்கு எதிர்ப்பு



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அந்நாட்டு வீரர் ஷகீப் அல் ஹசனுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் அவரால் தென்னாபிரிக்காவுக்கு எதிராக எதிர்வரும் ஒக்டோபர் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் முதல் டெஸ்ட் போட்டியில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஷகீப் இணைக்கப்பட்டுள்ளார். இதன் முதல் டெஸ்ட் போட்டி மிர்பூர் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இது அவரது கடைசி டெஸ்டாகவும் அமையவுள்ளது.

'நான் எங்கே போவது என்று எனக்கு உறுதி இல்லாமல் உள்ளது. என்றாலும் சொந்த நாட்டுக்குச் செல்வது இல்லை என்பது கிட்டத்தட்ட உறுதியாக உள்ளது' என்று டுபாய் விமானநிலையத்தில் நிர்க்கதியாகியுள்ள ஷகீப் கிரிக்கின்போ இணையதளத்திற்கு தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்து ஷகீபின் அவாமி லீக் கட்சியின் பல தலைவர்களும் கைது செய்யப்பட்ட நிலையில் நாடு திரும்புது பாதுகாப்பு இல்லை என்று அவர் கருதுகிறார். பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவர் மீது கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டியில் ஆடுவதற்காக அவர் கடந்த புதன்கிழமை நாடு திரும்பவிருந்த நிலையில் அவரது வருகைக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். ஷகீப் மைதானத்திற்கு வந்தால் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையை எச்சரித்துள்ளது.

கடந்த புதனன்று நியுயோர்க்கில் இருந்து டுபாய் சென்ற அவர் அங்கு காத்திருக்க கோரப்பட்டுள்ளார். இந்நிலையில் அவர் பங்களாதேஷ் திரும்புவதில் தொடர்ந்து சந்தேகம் நிலவி வருகிறது.

# இலங்கை நடுவர்களுக்கு சைமன் டபில் பயிற்சி

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் எலிட் குழு நடுவரான சைமன் டபில் இலங்கையின் உள்ளூர் நடுவர்கள், போட்டி மத்தியஸ்தர்கள் மற்றும் நடுவர் பயிற்சியாளர்களுக்கு அண்மையில் பயிற்சி அளித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 6 தொடக்கம் 14 ஆம் திகதி வரை ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் உயர் செயல்திறன் மையத்தில் இந்த பயிற்சி நிகழ்ச்சி இடம்பெற்றதோடு இதன்போது இலங்கை போட்டி அதிகாரிகளின் தரத்தை உயர்த்துவதில் அவதானம் செலுத்தப்பட்டது.

ஐ.சி.சியின் ஆண்டின் சிறந்த வீரர் விருதை ஐந்து முறை வென்றிருக்கும் டபில், பல்வேறு போட்டி அதிகாரிகள் குழுக்களுடன் மேலும் பல பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி இருந்தார்.

இதில் முப்பத்து எட்டு முதலாம் தரம் மற்றும் இரு நடுவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். குழுப் பணி, மன உறுதி, அழுத்தத்தை கையாள்வது மற்றும் பிரச்சினைகளை நிர்வகித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

நடுவர்களை மதிப்பீடு செய்வது, அறிக்கைகள் எழுதுதல், ஆட்களை நிர்வகித்தல் மற்றும் தீர்க்கமான சம்பவங்களை கையாள்வது தொடர்பில் முப்பது போட்டி மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நடுவர்கள் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அமர்வுகளை திட்டமிடுவது, சிறந்த பயிற்சி சூழலை அமைத்தல் மற்றும் மாறுபட்ட பயிற்சி முறைகளுக்கு மாறுவது தொடர்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கிரிக்கெட் தரத்தை மேம்படுத்தும் இலங்கை கிரிக்கெட் சபையின் முயற்சிகளில் ஒன்றாகவே இந்த பயிற்சி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## கெபித்திகொல்லாவ பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

**கெபித்திகொல்லாவ பொது பஸ் நிலைய இடப்பரப்பில் அமைந்துள்ள கெபித்திகொல்லாவ பிரதேச சபைக்குச் சொந்தமான சந்தைக் கட்டிடத்தொகுதியில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கடை அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 03 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல்**

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கெபித்திகொல்லாவ சந்தைக் கட்டிடத்தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் படிவங்கள் வழங்குதல் | - | 2024-10-18ஆம் திகதி முதல் 2024-11-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை |
| கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் | - | 2024-11-08ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை |
| கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல் | - | 2024-11-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கெபித்திகொல்லாவ பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெறும். |

**அட்டவணை**

| தொ. இல. | கேள்வியிடப்படும் விற்பனை உரிமையின் தன்மை | ஆகக் குறைந்த கேள்வி (03 வருடங்களுக்கு) | கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சந்தைக் கட்டிடத் தொகுதியின் தரை மாடியில் கடை அறை இலக்கம் 01 முதல் 14 வரை (03 வருடங்களுக்கு) | மாதாந்த வாடகை ரூபா 15,000.00 | ரூபா 3,600.00 | ரூபா 2,000.00 |
| 02 | சந்தைக் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் கடை அறை இலக்கம் 15 முதல் 28 வரை (03 வருடங்களுக்கு) | மாதாந்த வாடகை ரூபா 5,800.00 | ரூபா 1,392.00 | ரூபா 2,000.00 |
| 03 | சந்தைக் கட்டிடத் தொகுதியின் பஸ் நிலையக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் கடை அறை இலக்கம் 29 முதல் 40 வரை (03 வருடங்களுக்கு) | மாதாந்த வாடகை ரூபா 5,800.00 | ரூபா 1,392.00 | ரூபா 2,000.00 |
| 04 | சந்தைக் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் கடை அறை இலக்கம் 47, 48, 51, 52, 53, 54 (03 வருடங்களுக்கு) | மாதாந்த வாடகை ரூபா 8,400.00 | ரூபா 2,016.00 | ரூபா 2,000.00 |
| 05 | கெப்பித்திகொல்லாவ வாரச் சந்தை இடப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடை அறைகள் (03 வருடங்களுக்கு) | மாதாந்த வாடகை ரூபா 30,000.00 | ரூபா 7,200.00 | ரூபா 2,000.00 |

**தொ.பே. 025-2245675**

**திரு. டி.ஐ. சுபசிங்க,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த கடமைகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை,**
**கெபித்திகொல்லாவ.**

## ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறைஅமைச்சு

# பெறுகைக்கான அறிவித்தல்

**தேசிய போட்டி முறையிலான விலைமனு (NCB)**
**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கான சீருடைப் பொருட்களை வழங்குதல்**
**IFB NO. : *ETF/PROC/A/2024/120***

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை சார்பாக, கொள்முதல் குழுவின் தலைவரினால், 2025 ஆம் ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு சீருடைகளை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| | விபரம் | அளவு | மனு பாதுகாப்பு தொகை (ரூ.) | மனு செல்லுபடியாகும் காலம் | மனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | Trouser Material (Colour 1) | 2495 Meters | LKR 30,000 | 24.01.2025 | 07.02.2025 |
| 2 | Trouser Material (Colour 2) | 411 Meters | LKR 5,000 | 24.01.2025 | 07.02.2025 |
| 3 | Readymade Shirts (Colour 1)<br>Fabric of same material | 1600 Nos.<br>456 meters | LKR 90,000 | 24.01.2025 | 07.02.2025 |
| 4 | Readymade Shirts (Colour 2)<br>Fabric of same material | 220 Nos.<br>120 meters | LKR 15,000 | 24.01.2025 | 07.02.2025 |
| 5 | Saree with Blouse Material (Colour 1) | 1808 Nos. | LKR110,000 | 24.01.2025 | 07.02.2025 |
| 6 | Saree with Blouse Material (Colour 2) | 240 Nos. | LKR 15,000 | 24.01.2025 | 07.02.2025 |
| 7 | T-Shirts | 1048 Nos. | LKR 30,000 | 24.01.2025 | 07.02.2025 |
| 8 | Shoes (For Gents) | 138 pairs | LKR 15,000 | 24.01.2025 | 07.02.2025 |

மேலதிக தகவல்களை **www.etfb.lk** எனும் இணையத்தளதிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
மனுக்கள் **2024.11.08** ஆம் திகதி **மு.ப.10.30** மணிவரை **23ம் மாடி, மெஹெவர பியெச, நாராஹேன்பிட்டயில் அமைந்துள்ள ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையில் ஏற்றுக்கொள்ளப்படும்.**

அனைத்து மனுக்களும் மனுப் பாதுகாப்புடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் மனுப் பாதுகாப்பு பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் திகதி மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களை பெற தயவுசெய்து **முகாமையாளரைத் (கொள்முதல்)** தொடர்பு கொள்ளவும். **011-7747236/011-2806198;** மின்னஞ்சல் mgrproc@etfb.lk.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை,**
23ம் மாடி, "மெஹெவர பியெச", நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

SELACINE

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் உருப்படிகளை கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக கொழும்பு மாநகர சபையில் பதிவு செய்துகொண்டுள்ள விளம்பர நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (வெட் உட்பட) ரூபா | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|
| 01 | ME/PB/ADV/TEND/01/2024 | கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான / கொழும்பு மாநகர சபையினால் வாடகை செலுத்தி பராமரிக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட 52 அமைவிடங்களில் ஒளியேற்றப் படாத விளம்பர பெனல்களை அமைத்தல் மற்றும் பராமரித்தல் | 2,950.00 | பணிப்பாளர் (நகர திட்டமிடல்) தொலைபேசி: 0112-692738 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.

➢ சகல வட்டார அலுவலகங்கள்

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் 2024-10-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2024 ஒக்டோபர் 29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.05.28ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2025.05.28ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-10-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-10-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# கொழும்பு மாநகர சபை

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

விகார மகா தேவி பூங்காவில் மிதி வண்டிகளை வாடகைக்கமர்த்தும் நிலையமொன்றை நிறுவுவதற்காக ஆர்வ வெளிப்பாட்டை (EOI) சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து கொழும்பு மாநகர சபை அழைக்கின்றது.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ME/ME/ML/74/2024 | விகார மகா தேவி பூங்காவில் மிதி வண்டிகளை வாடகைக்கமர்த்தும் நிலையமொன்றை நிறுவுவதற்கான ஆர்வ வெளிப்பாடு | 2360.00 | வரிகள் இன்றி 2 வருடங்களுக்கான விலைகோரிய மாதாந்த வாடகையின் 2% பெறுமதிக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை | செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழுடன் இந்த வகையான வேலைகளில் அனுபவம் வாய்ந்த தனிநபர்கள், நிறுவனங்கள் | பொறியியல் பணிப்பாளர் (காணி) தொலைபேசி: 011-2695475 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ)எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ)கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.

➢ வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் 2024-11-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2024-11-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.06.05ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2025.05.06ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-11-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-11-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

பின்வரும் உபகரணங்களுக்காக தகுதிபெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு 08, காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | விலைமனு இல. | வழங்கல் | அளவு | கேள்வி இல. |
|---|---|---|---|---|
| 01 | FM09/Blood Warmer/2024 | Blood Warmers | 03 Nos | 2500.00 |
| 02 | FM09/DVD Pumps/2024 | DVD Pumps | 02 Nos | 1000.00 |
| 03 | FM09/OAE/2024 | Oto Acostic Emission Screening Machine | 06 Nos | 1000.00 |
| 04 | FM09/Neopuffs/2024 | Neopuffs | 10 Nos | 1000.00 |
| 05 | FM09/Infant Incubator/2024 | Infant Incubator | 05 Nos | 2500.00 |
| 06 | FM09/Multipara Monitor/NICU/2024 | Multipara Monitor - NICU | 05 Nos | 2500.00 |
| 07 | FM09/Multipara Monitor/OT/Basic/2024 | Multipara Monitor – OT/Basic | 02 Nos | 2500.00 |
| 08 | FM09/Multipara Monitor/OT/Advance/2024 | Multipara Monitor – OT/Advance | 03 Nos | 2500.00 |
| 09 | FM09/Photo Theraphy Machine/Single/2024 | Photo Theraphy Machine - Single | 05 Nos | 2500.00 |
| 10 | FM09/PCA/2024 | PCA Pumps | 02 Nos | 1000.00 |
| 11 | FM09/Infant Warmer with Resuscitator/2024 | Infant Warmer with Resuscitator | 05 Nos | 2500.00 |
| 12 | FM09/Suction Appratus Neonatal/2024 | Suction Appratus Neonatal | 05 Nos | 1000.00 |
| 13 | FM09/Olympus Laparascope/2024 | Accessories for Olympus Laparascope | 01 Nos | 1000.00 |

பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து ஒவ்வொன்றுக்காகவும் மேல் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கேள்விமனுக் கட்டணத்தைச் செலுத்தி வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 இற்கு இடையே 2024.10.18 ஆம் திகதியில் இருந்து கொழும்பு 08, காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை பெறுதல் வேண்டும்.

- கொழும்பு 08, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்று
- வர்த்தகப் பதிவுச் சான்றிதழ் (உறுதி செய்யப்பட்ட நிழற்பிரதி)
- தமது உற்பத்திக்காக உள்ளூர் முகவராக உங்களது நிறுவனத்தை நியமித்ததன் முதன்மையாளர் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்/ கடிதம் ஒன்று.
- இந்தப் பெறுகையின் தகுதிக்கு ஒவ்வொரு கூறுவிலைக்காகவும் கட்டணத்தை செலுத்தும்போது பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆவது பந்தியின் கீழ், நிறுவனப் பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் (உறுதி செய்யப்பட்ட நிழற்பிரதி)

இலங்கையில் உள்ள உபகரணங்களது உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அல்லது பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரமே இந்தக் கேள்விமனுவில் பங்கேற்க தகுதி பெறுவர்.

விலைமனுக்கள் 2024.11.08 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும் என்பதோடு விலைமனுக்கள் திறக்கப்படும்போது விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற முகவர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 011-2679731 இல் கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**காசல் வீதி மகளிர் வைத்தியசாலை,**
**கொழும்பு 08**

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14

## வலிமையிழப்பொன்றிற்கு இலக்காகிய வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட விதிகளை ஏற்பாடு செய்தல்

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 40(2) ஆம் உப பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ கட்புல பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லத்தக்கவாறான சட்ட விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும்,அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவராக அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதே போன்று வேட்பாளரொருவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது பிரதேச முகவரொருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவரொருவராகவோ செயற்படுகின்றவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும், பிரதேச செயலகங்களிலும், கிராம அலுவலர் அலுவலகங்களிலும் அல்லது www.elections.gov.lk எனும் இணையதளத்திலும் பெற்றுக் கொள்ள முடியும். பார்வைக் குறைபாடுள்ள அல்லது வேறேதேனும் உடல்ரீதியான வலிமையிழப்பிற்குள்ளாகிய ஆள், மேற்குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று அதனை நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதோடு அதன் பின்னர் அச் சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப் படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

05. வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனுமோர் அடையாள அட்டை மற்றும் இத் தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக்கொண்டு உதவியாளரையும் உடனழைத்துக் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லுதல் வேண்டும். வாக்களிப்பு நிலைய பணியாட் குழுவினால் வாக்காளரின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு, அவ் வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளரின் தகுதிச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படும் என்பதோடு அழைத்து வருகின்ற ஆளிடமிருந்து தகுதிச் சான்றிதழின் III ஆம் பகுதியில் காட்டப்பட்ட உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு பணியாட் குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட் குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச்சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப்பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வாக்கு அடையாளமிட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஏற்றுக் கொண்டு தம்வசம் வைத்துக் கொள்வார்.

08. எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருவதற்கு இயலாத வாக்காளரொருவருக்குத் தேவைப்படின், அதற்கு முந்திய வாக்கெடுப்புக்களில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தனது வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்ள அவகாசமுள்ளதென்பதும் அறிவிக்கப்படுகின்றது.

**ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க**
**தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு,**
**தேர்தல்கள் ஆணைக்குழு சார்பாக..**

**தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**
2024.10.18

# பிழை திருத்தம்

**அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு**
**மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (JEDB)**

**2024 நவம்பர் 1ஆம் திகதி - 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையில் தேயிலைக் கொழுந்து விற்பனைக்கான கேள்வி**

2024 ஒக்டோபர் 07ம் திகதி தினகரன் பத்திரிகையின் 15ம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி தலைப்பிலான விளம்பரத்துடன் சம்பந்தப்பட்டது.

மேற்படி விளம்பரத்தின் பந்தி 1, 2, 4 இல் குறிப்பிடப்படும் திகதிகள் **2024 ஒக்டோபர் 25** என திருத்தப்படுகின்றது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**தலைவர்,**
**மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை.**

# அறிவித்தல்

கல்பிட்டி பிரதேச சபை எல்லைக்குள் உலாவும் கட்டாக்காலி மிருகங்களினால் ஏராளமான பாதிப்புக்கள் ஏற்படும் நிலையில் அவ்வாறான மிருகங்களை பிடித்து கட்டுவதற்கான நபர்களை நியமிப்பதற்கு கல்பிட்டி பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு விருப்பமானவர்கள் கிராம சேவையாளர் வதிவிடச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் கடமை நேரத்திற்குள் கல்பிட்டி பிரதேச சபை பிரதான காரியாலயத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்படுகின்றது.

**மேலதிக விபரம் : 0322260274 / 076-7657991**
**2024.10.15**
**கல்பிட்டி பிரதேச சபை**

**மங்கள ராமநாயக்க,**
**செயலாளர்,**
**கல்பிட்டி பிரதேச சபை**

# மாஹோ பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2025

01. மாஹோ பிரதேச சபைக்கு 2025ஆம் வருடத்தில் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பப் படிவங்களை 2024.11.30ஆம் திகதிக்கு முன்பு செயலாளர், மாஹோ பிரதேச சபை, மஹோ" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

விண்ணப்பங்கள் உள்ளிடும் கடித உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் "2025ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

| | வழங்கல்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | மின்சார உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குகள் வழங்குதல் | 2000.00 |
| 2. | அலுவலக காகிதாதிகள் வழங்குதல் | 1000.00 |
| 3. | வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல் | 1500.00 |
| 4. | டயர் / டியூப் / பெட்டறிகள் வழங்குதல் | 1000.00 |
| 5. | கணனி மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்களுக்கான டோனர்/ கார்ட்ரிச்/ ரிபன் வழங்குதல் | 1000.00 |
| 6. | கட்டிடப் பொருட்கள் / நிர்மாண மூலப் பொருட்கள் / கனரகப் பொருட்கள் / தரைக்குப் பதிக்கும் கற்கள் வழங்குதல் | 1000.00 |
| 7. | சீருடைகள் / திரைச்சீலைகள் / டென்ட் / கம்பூட்ஸ் / கையுறைகள் / கைத்தொழில் பாதுகாப்பு துணைப்பாகங்கள் வழங்குதல் | 1000.00 |
| 8. | டிஜிட்டல் அச்சு வேலைகள் / ஸ்டிக்கர் / பெயர்ப் பலகைகள் மற்றும் அச்சு வேலைகளை மேற்கொள்ளல் | 1000.00 |
| 9. | கொங்கிறீட் உற்பத்திகளை வழங்குதல் | 1000.00 |
| 10. | அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்குதல் | 1000.00 |
| 11. | தார் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகளை வழங்குதல் | 1000.00 |
| 12. | அலுமினியம் / கண்ணாடி வேலைகளை மேற்கொள்ளல் | 1500.00 |
| 13. | சிறுவர் பூங்கா / விளையாட்டு பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் | 1000.00 |
| 14. | உணவு, பானம், உற்சவ மண்டப வசதிகள் மற்றும் அறை வசதிகள் | 1000.00 |
| 15. | தகனச்சாலைக்கு எரிவாயு வழங்குதல் | 1500.00 |
| 16. | நீர் வடிகட்டிக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள் | 1000.00 |
| 17. | அலுவலக சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்களை வழங்குதல் | 1000.00 |
| 18 | தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விதை / கன்று / உரம் / எண்ணெய் வழங்குதல் | 1000.00 |
| 19 | உற்சவப் பொருட்களுக்கான உணவு பானங்கள் வழங்குதல் | 1000.00 |
| 20 | கருங்கல் / மெட்டல் / செங்கல் / மணல் / சரளை கற்கள் வழங்குதல் | 2000.00 |
| 22 | உபசரணைக்குத் தேவையான பீங்கான் / கண்ணாடி / ஜக் / மக் / பீரிஸ் / கோப்பை மற்றும் அது சார்ந்த உபகரணங்களை வழங்குதல் | 1000.00 |
| 23 | போட்டோ பிரதி இயந்திரம் கைவிரல் அடையாள இயந்திரம் / பெக்ஸ் இயந்திரம் / டுப்ளோ இயந்திரம் வழங்குதல் | 1000.00 |
| 24 | விளையாட்டு பொருட்கள் / விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் | 1000.00 |
| 25 | விளக்குமாறு / தும்புத்தடி / பிரஷ் / பிரம்புக் கூடை / கால் துடைப்பான் / கிருமிநாசினி கழுவும் திரவம் வழங்குதல் | 1000.00 |
| 26 | சீமெந்து கொங்கீறிட், Ready Mix கொங்கிறீட், முன்வார்ப்பு (பீரி மிக்ஸ்) போன்றன வழங்குதல் | 1000.00 |
| 26 | பாடசாலை பேக் / உணவு பெட்டி / நீர் போத்தல் வழங்குதல் | 1000.00 |
| 27 | மரங்கள் வழங்குதல் (பலகை / பராலை / ரீப்பை) | 1000.00 |
| 28 | தீந்தை வகை மற்றும் அது சார்ந்த பொருட்கள் | 1000.00 |
| 29 | கடதாசி / பத்திரிகை / பொலித்தீன் / காட்போட் உற்பத்திகள் வழங்குதல் | 1000.00 |
| | **ஒப்பந்தக்காரர்கள்** | |
| 1 | சகல நிர்மாணங்களுக்கான ஒப்பந்தக்காரர்கள் | 2000.00 |
| | **சேவைகள்** | |
| 1. | கணனி/ தொலைநகல்/ அச்சுப்பொறி வழங்குதல், உதிரிப்பாகங்கள் வழங்குதல், திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்களை மேற்கொள்ளல் | 1000.00 |
| 2. | வாகன தவணை சேர்விஸ்களை மேற்கொள்ளல் | 1000.00 |
| 3. | வாகன / இயந்திராதிகளின் திருத்தவேலைகள் | 1500.00 |
| 4. | CCTV கெமரா முறைமை, உள்ளக தொலைபேசி முறைமைகள் மற்றும் கணனி வலையமைப்பு முறைமை திருத்தவேலைகள் | 1000.00 |
| 5 | RO பில்டர் (நீர் சுத்திகரிப்பு இயந்திரம்) சுத்திகரித்தல் (CIP) | 1000.00 |
| 6 | தகனசாலை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் விடயங்கள் | 1000.00 |
| 7 | அச்சு சேவை | 1000.00 |
| 8 | மொழிபெயர்பு சேவைகள் வழங்குதல் | 1000.00 |
| 9 | டயர் நிரப்புதல் | 1000.00 |
| 10 | நில அளவை விடயங்களுக்கான சில அளவையாளர் சேவையை வழங்குதல் | 1000.00 |
| 11 | வளிச்சீராக்கி இயந்திரம் / தீயணைப்பு உபகரண சேவையை வழங்குதல் | 1000.00 |
| 12 | கட்டிட பழுதுபார்த்தல் | 1000.00 |
| 13 | மோட்டர் கிரேடர் / பெக்கோ இயந்திரம் / வீதி அமுக்கும் இயந்திரம் பழுதுபார்த்தல் | 1000.00 |
| 14 | போக்குவரத்து சேவை வழங்குதல் / பிரயாணிகள் போக்குவரத்து சேவைகள் வழங்குதல் | 1000.00 |
| 15 | ஒலிபெருக்கி இயந்திரம் / மின் ஒளியூட்டல் சேவை வழங்குதல் | 1000.00 |

**நிபந்தனைகள் :**

01. வழங்குநராக பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை தாமாகவே தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

02. மேற்படி ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் வேறுவேறாக அவ் உருப்படிகளின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். இத்தொகையை காசோலை அல்லது காசுக் கட்டளை மூலம் அல்லது காசாக செலுத்துதல் வேண்டும். காசோலைகள் அல்லது காசுக்கட்டளைகள் **"செயலாளர், பிரதேச சபை, மாஹோ"** என்ற பெயரில் பதிவு செய்தல் வேண்டும்.

03. சகல சந்தர்ப்பங்களிலும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோருவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதுடன், சந்தர்பத்திற்கேற்ப பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அப்பாலும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை கொண்டிருக்கும்.

04. கோரும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்காத, ஓடர் செய்யும் போது பொருட்களை வழங்குவதற்கு தவறும் வழங்குநர்கள், குறித்த தரத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களினதும் பதிவு இரத்துச் செய்யப்பட்டு அபகீர்த்தியாளர் பட்டியல் படுத்தப்படும்.

05. விண்ணப்பத்துடன் உங்களால் பதிவுத்சான்றிதழின் பிரதி, கம்பனிகள் பதிவுச்சான்றிதழின் பிரதி, ஒப்பந்தக்காரராயின் CIDA நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

06. மேலதிக விபரங்களை 037-2275275 தொ.பே. இலக்கத்திற்கு வார நாட்களில் அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு**
**கட்டடங்கள் திணைக்களம்**

**கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டின் எஞ்சிய வேலையின் நிர்மாணம் மற்றும் பூர்த்தி செய்தல் (ஒப்பந்தம் இல.: BD-0111-ZWN/23/CT 065/24)**

1. மதிப்பிடப்பட்ட 99.4 மில்லியன் ரூபா செலவைக் கொண்ட, கீழ் விபரிக்கப்பட்டவாறு "கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டின் எஞ்சிய வேலையின் நிர்மாணம் மற்றும் பூர்த்தி செய்தலுக்காக" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. நிர்மாணக் காலம் 364 நாட்கள்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனுக்கள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியான, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்துக்காக கட்டட நிர்மாணத் துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

   "விலைமனுதாரர்கள் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளில் உள்ள, இலங்கை பொது ஒப்பந்ததாரர்களின் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவின் அசல் சான்றிதழை (*PCA 03*) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் *PCA 03* சான்றிதழை சமர்ப்பிக்கப்படாத வரை எந்த ஒரு விலைமனுதாருக்கும் பெறுகை வழங்கப்படமாட்டாது".
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 07, டொரிங்டன் ஒழுங்கை, இல. 213, கட்டடங்கள் திணைக்களம், தலைமைப் பொறியியலாளர் (மேற்கு வடக்கு) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9:00 மணி தொடக்கம் 16:00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். தொடர்பு இலக்கங்களானது: தொலைபேசி: 011-2582579, தொலைநகல்: 011-2588686
5. மீளளிக்கப்படாத கட்டணமாக பத்தொன்பது ஆயிரம் ரூபாவை (ரூபா 19,000/-) செலுத்தி 2024.10.18ஆம் திகதி தொடக்கம் 2024.11.06ஆம் திகதி வரை 9:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை கொழும்பு 07, டொரிங்டன் ஒழுங்கை, இல. 213, கட்டடங்கள் திணைக்களம், தலைமைப் பொறியியலாளருக்கு (மேற்கு வடக்கு) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.
6. விலைமனுக்களை 2024.11.07 ஆம் திகதி 10:00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், 2ஆவது மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பத்தரமுல்லை, "செத்சிறிபாய", 2ஆவது மாடி, கட்டடங்கள் திணைக்கள, ஒப்பந்தப் பிரிவில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்களை ஏற்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடைசித் திகதி அல்லது எந்த ஒரு நீடிக்கும் காலத்தில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அவை;
   - விலைமனு ஆவணத்தின் 09 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்ட வடிவத்தில்
   - கட்டடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்
   - 1,400,000.00 ரூபா தொகை ஒன்றுக்காக
   - 2025 மார்ச் 5 ஆம் திகதி வரை செல்லுபடியான
   - விலைமனு தரவின் 16.2 ITB உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**பொறி. (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி**
**கட்டடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**2ஆவது மாடி, "செத்சிறிபாய",**
**பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - நுவரெலியா

## 2024ஆம் ஆண்டு

2024 ஆம் ஆண்டின் மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி நிதி ஏற்பாட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குத் தேவையான கீழுள்ள சாதனங்கள் மற்றும் டயர் கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பெறுகைக் குழுதீ தலைவரினால் தகுதிபெற்ற வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | வகை | அளவு | மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) விலைமனு பெறுமதியின் வீதமாக | | விலைமனு பிணை செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | பணம் | பணமாக இருந்தால் | |
| 1 | Modified dry Container | 4 | 3,000.00 | 1% | 2% | 91 நாட்கள் |
| 2 | Prefabricated office | 1 | 3,000.00 | 1% | 2% | 91 நாட்கள் |
| 3 | 265x60x18 Tyre | 32 | 3,000.00 | 1% | 2% | 91 நாட்கள் |
| 4 | 265x60x17 Tyre | 8 | | | | |
| 5 | 700x15 Tyre | 8 | | | | |
| 6 | 700x16 Tyre | 32 | | | | |

2024.10.18 ஆம் திகதி தொடக்கம் 2024.11.06 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் ஹாவாஎலிய நுவரெலியா என்ற முகவரியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத மேல் குறிப்பிடப்பட்ட குறித்த வைப்புக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை கணக்குப் பிரிவுக்கு சமர்ப்பித்து விலைமனு விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். 2024.10.18 ஆம் திகதி தொடக்கம் 2024.11.06 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை விலைமனுக்களை நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்திற்கு வருகை தந்து இலவசமாக பரீட்சிக்க முடியும்.

விலைமனுக்களை ஏற்பது 2024.11.07 ஆம் திகதி முற்பகல் 11.00க்கு முடிவுறுவதோடு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவதன் மூலம் விலைமனுக்களை ஒப்படைக்க முடியும். அன்றைய தினம் முற்பகல் 11.30க்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

- விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரை இட்டு ஒற்றை உறையில் இட்டு அனுப்ப வேண்டும். அந்த உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குறித்த விலைமனுவை சமர்ப்பிக்கும் காரணத்தை'' மிகத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- விலைமனுவுடன் குறித்த விலைமனு பிணையை நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
- அனைத்து விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு அனுப்பப்படும். இது தொடர்பில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.
- விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர்தம் எழுத்துமூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.
- மேலுள்ள அட்டவணையின் 01 மற்றும் 02 ஆம் இலக்கங்களுக்காக (Modified dry Container & Prefabricated office) விலைமனுக்களை சமர்ப்பிப்பவர்கள் தொடர்பில் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.10.25ஆம் திகதி மு.ப. 11.00க்கு ஒன்லைன் முறையின் ஊடாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக https://meet.google.com/pxu-ffsc-zgq என்ற ஒன்லைன் ஊடாக இணைய முடியும்.

மேலதிக விபரங்களை நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 052-2234482 என்ற இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**
**நுவரெலியா**
**2024.10.18**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (இபோச)

## அதிவேக நெடுஞ்சாலை பஸ்களுக்கான புதிய ரேடியல் டியூப் டைப் மற்றும் ரேடியல் டியூப்லொஸ் டயர்களை வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனு

**பெறுகை இல: SLTB/TS/GEN/09/2024**

1. ஒரு வருட காலத்திற்கு கீழே விபரிக்கப்படுமாறு அதிவேக நெடுஞ்சாலைகள் பஸ்களுக்கான புதிய ரேடியல் டியூப்டைப் மற்றும் ரேடியல் டியூப்லெஸ் டயர்களை வழங்கலுக்காக 2024.11.08ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிவரையும் இபோச பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.10.18ஆம் திகதியிலிருந்து 2024.11.07 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு - 05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விபரம் | விலைமனுப் பிணை (ரூ.) |
|---|---|
| Supply & Delivery of<br>(i) 386 Nos. 10.00 R 20 New Radial Tube Type tyres<br>(ii) 594 Nos. 10.00 R 22.5 New Radial Tubeless Type tyres<br>(iii) 3196 Nos. 12.00 R 22.5 New Radial Tubeless Type tyres on 30 Days credit within a period of one year | For Bids offering<br>Tyre Type (i) only - 600,000/-<br>Tyre Type (ii) only - 800,000/-<br>Tyre Type (iii) only - 250,000/- |

2. இலங்கை சந்தைக்கு டயர்களை வழங்கத் தேவப்படும் குழுநாமத்தின் உற்பத்தியாளர்களின் அங்கீகாரம் பெற்ற வழங்குநர்கள் மாத்திரம் விலைமனுக் கோருவதற்கு தகைமை பெறுவர்.
3. விலைமனு மதிப்பீட்டுக் காணிக்கான உள்ளூர் முன்னுரிமை வழங்கப்படும்.
4. விலைமனுக்கள் 2025.02.06ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். எனினும் ஒப்பந்தம் ஏற்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வருட காலத்திற்கு விலைமனுக்கள் நிலையானதாக இருத்தல் வேண்டும்.
5. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2025.03.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுக்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற காப்புறுதி முகவரான்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப் பிணையும் நிராகரிக்கப்படும்.
6. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2024.10.28 மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு - 05, கிருள வீதி, 200, இ.போ.சபை, இ.போ.ச பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
7. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
8. எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவுபெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு -05 கிருள வீதி, 200ஆம் இலக்கத்திலுள்ள இ.போ.ச. பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவத் தபாலில் 2024.11.08ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply & Delivery of New Radial Tube Type and Radial Tubeless Type Tyres" என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மேலே குறிப்பிடப்படும் திகதி மற்றும் நேரத்தில் மூடப்படும். கொழும்பு 05, கிருள வீதி, 200ஆம் இலக்கத்தின் இபோச, பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இல. 200, கிருள வீதி, கொழும்பு -05.**

**விசாரணைகள்:** **செயலாளர், இபோச பெறுகைக் குழு.**
**தொலைபேசி: 011 7706110, 077 1056204. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457**

## காணி சீர்திருத்த ஆணைக்குழு

## வழங்குநர்களை பதிவு செய்தல் 2025

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் 2025 வருடத்திற்காக கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவையை வழங்குவதற்கு பதிவு செய்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொருட்கள்**

I. எழுது பொருட்கள் மற்றும் அது சார்ந்த அலுவலக உபகரணங்கள்
II. கணினி துணைப்பொருட்கள் மற்றும் டோனர்
III. அலுவலக தளபாடங்கள்
IV. அலுவலகப் பயணப் பொதி
V. மின் உபகரணங்கள் மற்றும் கருவிகள்
VI. கண்ணாடி மற்றும் இரும்புப் பொருட்கள்
VII. கணினி, கணினி அச்சு இயந்திரங்கள், நிழற்பிரதி இயந்திரங்கள் மற்றும் தொலைநகல் இயந்திரங்கள்
VIII. டயர் மற்றும் டியூப்
IX. வாகன பெட்டரி
X. வளிச்சீராக்கி இயந்திரம்
XI. சி.சி.டி.வி. கெமரா
XII. நிறப்பூச்சு மற்றும் கட்டிட நிர்மாண மூலப்பொருட்கள்

**02. சேவைகள்**

I. வாகன திருத்தவேலை
II. வாகன நன்னிலைப்படுத்தல்
III. வாகன குஷன் செய்தல்
IV. உருக்கு சிற்றலுமாரி, உருக்கு அலுமாரி, மேசை சீரமைத்தல்
V. நிறப்பூச்சு மற்றும் கட்டிட சீரமைப்பு
VI. நீர்க்குழாய் அமைப்பை சீரமைத்தல்
VII. மின் கட்டமைப்பை சீரமைத்தல்
VIII. கணினி, கணினி அச்சு இயந்திரம் மற்றும் துணைப்பொருட்களின் திருத்தவேலை
IX. கணினி வலைப்பின்னல்
X. துப்புரவேற்பாட்டு சேவை வழங்கல்
XI. பாதுகாப்புச் சேவையை வழங்கல்
XII. வளிச்சீராக்கி இயந்திர நன்னிலைப்படுத்தல் மற்றும் திருத்தவேலை
XIII. மென்பொருள் மேம்பாட்டுச் செயற்பாடு
XIV. பூச்சிக் கட்டுப்பாடு
XV. அலுவலக பிரித்தல் வேலை
XVI. மொழிபெயர்ப்பு (தமிழ்/ ஆங்கிலம்)
XVII. போக்குவரத்துச் செயற்பாடு மற்றும் ஆவணப்படம் தயாரித்தல்
XVIII. அச்சு செயற்பாடுகள்
XIX. புத்தகம் கட்டல்

**பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களின் பதிவுக்குத் தேவையான நிபந்தனைகள்**

- ஒவ்வொரு பொருட்கள் அல்லது சேவைகளுக்காக வெவ்வேறாக பதிவு செய்தல் வேண்டும் என்பதோடு, ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்காகவும் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 + VAT + SSCL தொகை ஒன்றை 2024.10.18 ஆம் திகதி தொடக்கம் 2024.11.04 ஆம் திகதி வரை மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 3.00இற்கு இடையே காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு (நிதி) பணம் செலுத்துதல் வேண்டும். (காசோலை, காசுக் கட்டளை, தபால் கட்டளை ஏற்கப்படமாட்டாது)
- பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்த பின் 2024.10.18 ஆம் திகதி தொடக்கம் 2024.11.04 ஆம் திகதி வரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பணிப்பாளரிடம் (நிர்வாகம்) இருந்து பதிவு செய்தல் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024.11.07 ஆம் திகதி பி.ப. 4.00 வரை இலக்கம் 475, கடுவளை வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழு தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்க முடியும் என்பதோடு, விண்ணப்பங்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் ''2025 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
- முழுமை பெறாத மற்றும் தாமதித்துக் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**காணி சீர்திருத்த ஆணைக்குழு,**
**இலக்கம் 475,**
**கடுவளை வீதி,**
**பத்தரமுல்லை.**
**2024.10.16**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

# பெறுகை அறிவித்தல்

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு மேல் மாகாணம்)

## நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் டிப்பர்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் பன்னல, வகவத்த அஸ்போல்ட் உற்பத்தியகத்தில் கார்பட் போக்குவரத்திற்காக 03 மற்றும் 05 கியூப் கொள்ளளவிலான டிப்பர்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - 2024/2025

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களுக்காக வாடகை அடிப்படையில் 01, 1 1/2, 02 கியூப் கொள்ளளவான டிப்பர்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் மற்றும் பன்னல, வகவத்த அஸ்போல்ட் உற்பத்தியகத்தில் கார்பட் போக்குவரத்திற்காக 03 மற்றும் 05 கியூப் கொள்ளளவிலான டிப்பர்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | கொள்ளளவு | தேவையான டிப்பர்களின் எண்ணிக்கை | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி ரொக்கப் பணமாக | கேள்வி திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| PRDA/ WP/PRO/ 2024/65 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் டிப்பர்களை பெற்றுக்கொள்ளல் | கியூப் 01 | 7 | ரூபா 1000.00 + Vat 18% + SSCL 2.5% | ரூபா 10,000.00 | 2024-11-04 பி.ப. 2.30 மணிக்கு |
| | | கியூப் 1 ½ | 7 | | | |
| | | கியூப் 02 | 5 | | | |
| **கேள்வி இலக்கம்** | **விபரங்கள்** | | **வழங்குநரிடம் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த வாகனங்கள்** | **மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர)** | **கேள்விப் பிணையின் பெறுமதி ரொக்கப் பணமாக அல்லது வங்கிப் பிணை முறியாக** | |
| PRDA/ WP/PRO/ 2024/71 | பன்னல உற்பத்தியகத்தில் கார்பட் போக்குவரத்திற்காக 03 மற்றும் 05 கியூப் கொள்ளளவிலான டிப்பர்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | | 10 | ரூபா 2000.00 + Vat 18% + SSCL 2.5% | ரூபா 50,000.00 | |
| PRDA/ WP/PRO/ 2024/70 | வகவத்த அஉற்பத்தியகத்தில் கார்பட் போக்குவரத்திற்காக 03 மற்றும் 05 கியூப் கொள்ளளவிலான டிப்பர்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | | | ரூபா 2000.00 + Vat 18% + SSCL 2.5% | ரூபா 50,000.00 | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024-10-18ஆம் திகதியிலிருந்து 2024-11-01ஆம் திகதி மு.ப. 8.30 முதல் பி.ப. 2.45 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2024-11-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறும் என்பதுடன் அன்றைய தினமே அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

# பெறுகை அறிவித்தல்

## அகலவத்தை பிரதேச சபை

## 2025ஆம் வருடத்தில் ஆதனத்தை குத்தகைக்கு வழங்குதல்

அகலவத்தை பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதன உரிமைகளை 2025-01-01ஆம் திகதி முதல் 2025-12-31ஆம் திகதி வரையில் குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன. இதற்கான கேள்விப் படிவங்களை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டவர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது)

| | | |
|---|---|---|
| **கேள்விப் படிவங்கள் வழங்குதல்** | : | 2024.10.21 ஆம் திகதி முதல்<br>2024.11.04 ஆம் திகதி வரை |
| **கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம்** | : | 2024.11.05 ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை |
| **கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்** | : | 2024.11.05 ஆம் திகதி பி.ப. 1.35 மணிக்கு |

கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரர் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை**

| தொ. இல. | விபரங்கள் | ஆகக் குறைந்த விலை ரூபா சதம் | கேள்விப் பிணைத் தொகை ரூபா சதம் | படிவக் கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01 | அகலவத்தை மாட்டிறைச்சிக் கடையில் நாளாந்தம் மாட்டிறைச்சியை விற்கும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 4378000.00 | 43000.00 | 4000.00 |
| 02 | அகலவத்தை மீன் கடையில் நாளாந்தம் மீன் விற்கும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 61600.00 | 600.00 | 2000.00 |
| 03 | அகலவத்தை கோழியிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடையில் நாளாந்தம் இந்த இறைச்சி வகைகளை விற்கும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 93500.00 | 900.00 | 1500.00 |
| 04 | பிம்புர மயானக் காணியின் தேயிலை மற்றும் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 21450.00 | 2100.00 | 750.00 |
| 05 | மாகஸ்வத்த விளையாட்டு மைதானத்திற்குரித்தான காணியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 3630.00 | 30.00 | 750.00 |
| 06 | அகலவத்தை திரவப் பால் விற்பனை நிலையத்தை குத்தகைக்கு வழங்குதல் | 145200.00 | 1400.00 | 750.00 |
| 07 | அகலவத்தை பொது மலசலகூடம் | 7260.00 | 70.00 | 750.00 |

கேள்வி நிபந்தனைகள் தொடர்பான மேலதிக விபரங்களை கேள்விப் படிவங்களை வழங்கும்போது மற்றும் 034-2243236 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

இக்கேள்வி ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் இறுதித்தீர்மானம் அகலவத்த பிரதேச சபையின் செயலாளருக்குரியது.

**ஜீ.என். பட்டுவிட்ட,**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அகலவத்தை பிரதேச சபையின் அதிகாரம்,**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி.**
**அகலவத்தை பிரதேச சபை.**

**2024.10.18 ஆம் திகதி**
**அகலவத்தை பிரதேச சபையில்.**

# ஊவா மாகாண சபை

## ஊவா மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி விவகாரங்கள் தொடர்பான அமைச்சு

## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

ஊவா மாகாண விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்படும் ஊவா மாகாண விவசாயத் திணைக்களம், ஊவா மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், ஊவா மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் உட்பட 09 பிரதேச நிறுவனங்களுக்காக 2025ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான தகவல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை 2024-11-25ஆம் திகதி வரை agrimin.up.gov.lk மற்றும் www.up.gov.lk எனும் இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அலுவலக நேரத்தினுள் இந்த அமைச்சிற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் தேவையாயின், 055-2232018 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அமைச்சின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**(ஜே.எம்.யு.கே. ஜயசேகர)**
**செயலாளர்.**

**ஊவா மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி விவகாரங்கள் தொடர்பான அமைச்சு,**
**ரத்வத்த மாவத்தை,**
**பதுளை.**
**2024.10.18ஆம் திகதி.**




# காலி மாநகர சபை – 2025 கேள்வி அறிவித்தல்

01. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இடங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

02. 2024-10-18ஆம் திகதி முதல் 2024-11-04ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை கேள்வி நிபந்தனைகளுடன் கூடிய கேள்வி மாதிரிப் படிவங்களை காலி மாநகர சபையின் மாநகர கணக்காளரிடமிருந்து (வரவு) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் கேள்வி வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

03. 2024-11-05ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

04. அனைத்துக் கேள்விகளும் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதியை ஒரு உறையிலும் நகல் பிரதியை இன்னொரு உறையிலும் இட்டு அரக்கு முத்திரை பொறித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என உறையில் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையிலிட்டு அரக்கு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் உங்களால் விண்ணப்பிக்கப்படும் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு (உதா: ‘‘காலி மத்திய பஸ் நிலையத்தின் மலசலகூட முறைமையை குத்தகைக்கு விடுதல் 2025”) கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமான 2024-11-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் காலி மாநகர ஆணையாளருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அனைத்துக் கேள்விகளுக்காகவும் கேள்வி நிபந்தனையில் கையொப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. வெற்றிகரமான கேள்விதாரருக்கு அவரின் விலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்டு 7 நாட்களுக்குள் ஒரு மாதக் குத்தகை வாடகைக்குச் சமமான 03 மாதத்திற்கான குத்தகைத் தொகையை பிணையாக வைப்புச் செய்து முறையாக உடன்படிக்கையொன்றுக்கு வருதல் வேண்டும். 02ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களுக்கு விண்ணப்பிக்கும்போது ஒருமுறை செலுத்தும் தொகையை செலுத்துதல் வேண்டும். (அரசாங்கத்தினால் விதிக்கப்படும் சகல வரித் தொகைகள் மற்றும் கட்டணங்கள் ஏற்புடையதாகும்).

06. சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி தொடர்பில் அபிப்பிராயப் பேதம் ஏற்படும் பட்சத்தில் அல்லது இந்த நிபந்தனைகளுக்கு புறம்பாக கேள்விக்கு தாக்கம் செலுத்தும் விடயம் தொடர்பில் கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை 01 - (ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படும்)**

| தொ. இல. | விபரங்கள் | கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் (ரூபா சதம்) | கேள்வி வைப்புத் தொகை (ரூபா சதம்) | ஆகக் குறைந்த மாதாந்த வாடகை (ரூபா சதம்) | நீர் மற்றும் மின்சார பிணை வைப்புத் தொகை (ரூபா சதம்) |
|---|---|---|---|---|---|
| 01 | காலி மத்திய பஸ் நிலையத்தின் தரை மாடி, மேல் மாடியிலுள்ள மலசலகூடங்கள் (மேல் மாடியலுள்ள ஆண்களுக்கான மலசலகூட தொகுதியின் 1,500mx0.900m அளவான மலசலகூடம் ஒன்றும் மற்றும் பெண்களுக்கான மலசலகூட தொகுதியின் 1,500mx0.900m அளவான மலசலகூடம் ஒன்றையும் தவிர) குத்தகைக்கு விடுதல் | 1,000.00 | 100,000.00 | 322,102.00 | 90,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு வழங்குதல் (தெவட்ட சந்தி) | 1,500.00 | 100,000.00 | 96,496.29 | 50,000.00 |
| 03 | ஒரொப்புவத்த மத்திய சந்தையில் 46ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு வழங்குதல் | 1,500.00 | 100,000.00 | 75,818.60 | 50,000.00 |
| 04 | ஒரொப்புவத்த மத்திய சந்தையில் 37ஆம் இலக்க ஆட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு வழங்குதல் | 1,500.00 | 60,000.00 | 86,308.09 | 50,000.00 |
| 05 | கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பொது வாகனத் தரிப்பிடம் | 2,000.00 | 25,000.00 | 38,720.00 | |
| 06 | ஒரொப்புவத்த வெல்சன் சதுக்க வாகனத் தரிப்பிடம் | 2,000.00 | 25,000.00 | 66,550.00 | |
| 07 | ஆசிரி வைத்தியசாலை அருகிலுள்ள வாகனத் தரிப்பிடம் | 2,000.00 | 25,000.00 | 88,578.05 | |
| 08 | கோட்டை வாகனத் தரிப்பிடம் | 5,000.00 | 200,000.00 | 266,200.00 | |
| 09 | காலி மகமோதர வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள பஸ் நிலையத்திற்கு இடையிலுள்ள வாகனத் தரிப்பிடம் | 2,000.00 | 25,000.00 | 44,000.00 | |
| 10 | பியதிகம வாரச்சந்தை | 1,000.00 | 10,000.00 | 25,000.00 | 25,000.00 |

**அட்டவணை 02 - (03 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படும்)**

| தொ. இல. | விபரங்கள் | கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் (ரூபா சதம்) | கேள்வி வைப்புத் தொகை (ரூபா சதம்) | ஆகக் குறைந்த ஒரு முறை செலுத்தும் தொகை (ரூபா சதம்) | மாதாந்த கடை குத்தகை தொகை (ரூபா சதம்) |
|---|---|---|---|---|---|
| 01 | மரக்கறிச் சந்தைக்கு முன்னாலுள்ள 12 கடைகளில் 06ஆம் இலக்க கடையை குத்தகைக்கு வழங்குதல் | 1,000.00 | 11,250.00 | 37,500.00 | 8,084.76 |
| 02 | மரக்கறிச் சந்தைக்கு முன்னாலுள்ள 12 கடைகளில் 07ஆம் இலக்க கடையை குத்தகைக்கு வழங்குதல் | 1,000.00 | 12,000.00 | 40,000.00 | 8,181.39 |

06. காரணம் காட்டாமல் எந்தவொரு கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமை மாநகர சபையைச் சார்ந்தது.

**ஆர்.எம்.டி.எஸ். ரத்நாயக்க,**
**மாநகர ஆணையாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**காலி மாநகர சபை.**

**2024-10-14ஆம் திகதி**
**காலி மாநகர சபை அலுவலகத்தில்.**

# கம்பளை நகர சபை

## வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2025ம் ஆண்டு

கம்பளை நகர சபைக்கு வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை 2025ம் ஆண்டிற்கு பதிவு செய்தல் ஒப்பந்தங்கள் வழங்குதலுக்காக சங்கங்கள், கம்பனிகள் மற்றும் தனிநபர்களை பதிவு செய்வதற்காக என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சகல விடயத்திற்கும் மீளளிக்கப்படாத பெறுகை ஆவணத் தொகைக் கட்டணமாக அதற்கு முன்னால் காட்டப்பட்டுள்ளவாறு செலுத்தல் வேண்டும். ‘செயலாளர், கம்பளை நகர சபை’ பெயரில் வழங்கப்பட்ட காசோலை, வங்கிப் பிணை, வங்கிக் கட்டளை மூலம் செலுத்தப்படும் அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து காசாகச் செலுத்தலாம். காசோலைகள் மூலம் செலுத்தும் போது காசோலையை நகர சபை கணக்கிற்கு வரவு வைத்து காசாகிய பின்னர் பதிவு வழங்கப்படும்.

03. இச் சபைக்குத் தேவையான சகல வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது வேலைப் பதிவு வழங்குநர்களிடமிருந்து கேள்வி கோரலின் பின்னர் நிறைவேற்றப்படும் பதிவு செய்த வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள் வழங்கல் அல்லது சேவையை நிறைவேற்றுவதற்கு தவறின் வேறு வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வழங்கல் அல்லது சேவையை பெற்றுக் கொள்ளும் முழுமையான உரிமை நகர சபைக்கு உரியது. கோரும் போது வழங்கல் அல்லது சேவையை பெற்றுக் கொள்ளும் முழுமையான உரிமை நகர சபைக்கு உரியது. கோரும்போது வழங்கல் அல்லது சேவை குறித்த தினத்திற்கு வழங்குவதற்கு தவறும் அல்லது வழங்குவதற்கு தாமதிக்கும் அல்லது தரப்பட்டுள்ள விதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட விதிகளுக்கு பொருந்தாதவாறு வழங்கல்/ சேவைகளை மேற்கொள்வதாயின் முன் அறிவித்தல் இன்றி பதிவு இரத்துச் செய்யப்படும்.

உங்களால் தயாரித்துக் கொள்ளப்படும் விண்ணப்பங்களுடன் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் பிரதியுடன் 2024.12.31ம் திகதிக்கு முன்பு ‘செயலாளர், நகர சபை கம்பளை’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது நகர சபைக்கு வருகை தந்து கையோடு ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சபைக்குரியது. உங்களது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்பது பற்றி எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும்.

**அட்டவணை**

| தெடர் இல. | வழங்கல்கள்/சேவைகள் விபரம் | பதிவு செய்தல் கட்டணம் (வரி உட்பட) |
|---|---|---|
| | **வழங்கல்கள்** | |
| 01 | சகல காகிதாதிகள் | ரூ. 1750.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் மற்றும் மரம்/உருக்கு | ரூ. 1750.00 |
| 03 | வீதி ஒளியூட்டல் மற்றும் கட்டிட ஒளியூட்டலுக்கு தேவையான மின் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் | ரூ. 2250.00 |
| 04 | சீருடைக்கு தேவையான துணி, சப்பாத்து, கம்பூட்ஸ், மழை அங்கி, குடை, தொப்பி | ரூ. 1750.00 |
| 05 | சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைக்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | ரூ. 1750.00 |
| 06 | ஆயுர்வேத மருந்துகள் மற்றும் உபகரணங்கள் | ரூ. 1750.00 |
| 07 | சகல வாகனங்களுக்கும் தேவையான டயர், டியூப் மற்றும் பற்றரி | ரூ. 2250.00 |
| 08 | வாகன உதிரிப்பாகங்கள் -<br>இசுசூ, டொயோட்டா, ஹைஏஸ் வகை லொறி மற்றும் மெஷிபெர்குசன், குபோட்டா. டெபேவகை வாகனம் மற்றும் பஜாஜ், முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் | ரூ. 2250.00 |
| 09 | வரிப்பண தகடு/பைசிக்கள் தகடு/வண்டித் தகடு | ரூ. 1750.00 |
| 10 | கட்டிடம் மற்றும் வீதி நிர்மாணத்திற்கு தேவையான செங்கல், ஆற்று மணல், கருங்கல், துணிகல், மண், சரளை வழங்குதல் | ரூ. 1750.00 |
| 11 | திண்மத் தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் | ரூ. 2250.00 |
| 12 | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல் | ரூ. 2250.00 |
| 13 | உணவு வழங்குதல் | ரூ. 1750.00 |
| 14 | கல்ரோல், கலிவண்டி, ஸ்காவேட்டர், ஜெனரேட்டர் | ரூ. 2250.00 |
| | **சேவைகள்** | |
| 01 | மரப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், உருக்கு அலுமாரி, தட்டச்சு, கூட்டல் இயந்திரம், ரோணியோ இயந்திரம், டுப்ளிகேன் அச்சு இயந்திரம், கணனி, கணனி அச்சு இயந்திரம் பழுது பார்த்தல் | ரூ. 1750.00 |
| 02 | சகல வகையான அச்சு விடயங்கள் மற்றும் கணனிப் படிவங்கள் அச்சு விடயங்கள் | ரூ. 1750.00 |
| 03 | வாகன பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்/ லொறி, வேன், காணி வாகனம், முச்சக்கர வண்டி போன்றன | ரூ.1750.00 |
| 04 | ஆபத்தான மரம் வெட்டுதல் மற்றும் ஆபத்தான மரங்களின் கொப்புகளை வெட்டுதல் | ரூ. 1750.00 |
| 05 | கலி சேவை வழங்கல்கள் | ரூ. 1750.00 |
| | **ஒப்பந்தக்காரர்கள் (சங்க கம்பனிக்ள/தனிநபர்கள்)** | |
| | **சங்க கம்பனி மற்றும் தனிநபர்கள் (இக்டாட் பதிவு எம் 6 தரம் வரை)** | |
| | **வீதி அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்திற்காக** | |
| 01 | ரூ. 100000.00 வரை | ரூ. 1750.00 |
| 02 | ரூ. 100000.00 முதல் ரூ. 250000.00 | ரூ. 2250.00 |
| 03 | ரூ. 250000.00 முதல் ரூ. 500000.00 | ரூ. 2800.00 |
| 04 | ரூ. 500000.00 முதல் ரூ. 1000000.00 | ரூ. 3500.00 |
| 05 | ரூ. 1000000.00 முதல் அதற்கு மேல் | ரூ. 3800.00 |
| 06 | தகனசாலையின் பழுதுபார்த்தல்கள் (நர்ட் நிறுவனத்தின் பதிவு பெற்ற வழங்குநர்கள்) | ரூ. 2250.00 |

**விலைமனுக்களை வழங்கும் போது தாக்கம் செலுத்தும் பொது நிபந்தனைகள்**

01. பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலைமனுக்கள் சமர்ப்பிக்கும்போது தாக்கல் செலுத்தும் கால எல்லையை தெளிவாக குறிப்பதற்கு இணங்குதல் வேண்டும்.
02. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் விலைமனுக்களுக்கு குறைவான விலைமனுக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வேறு வழங்குநர்களை சமர்ப்பிக்கும் வேளையில் அந்த வழங்குநரின் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளும் உரிமை நகர சபைக்கு உரியது.
03. உத்தேச தரத்திலான பொருட்களை வழங்குவதற்கு இணங்காத வழங்குநர்களின் பதிவை இரத்துச் செய்யும் அதிகாரம் சபைக்கு உரியது.
04. பதிவின் பின்னர் வழங்கல் பற்றிய மேலதிக நிபந்தனைகளை விதித்தல் தேவைப்படுமென கருதப்படின் அந்த நிபந்தனைகளை விதிக்கும் உரிமை சபைக்குரியது.
05. இது பற்றிய மேலதிக விபரங்களை தொ. பே. இல. 081-2352275ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**கம்பளை நகர சபை.**
**பெக்ஸ் இல. 081-2352203.**

### போரில் பாதிப்புற்ற பெண்களை ஆற்றல்மிக்கவர்களாக உருவாக்க அமைக்கப்பட்ட

# முல்லை கைத்தறி மையத்திற்கு இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ் விஜயம்




















இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ் அண்மையில் முல்லை கைத்தறி மையத்துக்கு வருகை தந்திருந்தார். இந்த மையம் கனேடிய தமிழர் பேரவையின் (CTC) ஆதரவில் செயற்பட்டு வருகின்றது.

இந்த மையம் இலங்கையின் உள்நாட்டுப் போரில் மிக அதிகமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ளது. தற்போது இங்கு 20 பெண்கள் கைத்தறி துறையில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இலங்கைக்கான CTCயின் மனிதாபிமானத் திட்ட ஒருங்கிணைப்பாளர் துஷ்யந்தன், ஆர். துரைரத்னம் மற்றும் NEED மையத்தின் இயக்குனர் குழு உறுப்பினர் பிறதீபன் சோதிலிங்கம் ஆகியோர் கனேடிய தூதுவரை வரவேற்று இந்த கைத்தறி மையத்தின் செயல்பாடுகள் குறித்தும் இது மக்களுக்குக் கொண்டு வந்துள்ள நன்மைகள் குறித்தும் விளக்கமளித்தனர். முல்லை கைத்தறி மையத்தில் உருவாக்கப்பட்ட கைத்தறி புடவைகள் கனடாவில் நடைபெறும் தமிழ் விழாக்களில், குறிப்பாக 2024ஆம் ஆண்டு தமிழர் தெருவிழாவில் பெரும் ஆதரவை பெற்றிருந்ததோடு அதிக அளவில் விற்பனையாகியும் இருந்தது. இத்திட்டம் போரினால் கணவனை இழந்த பெண்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட பெண்களை ஆற்றல்மிக்கவர்களாக உருவாக்கி, அவர்களுக்குப் பொருளாதார சுதந்திரத்தையும் நிலையான தொழில் வாய்ப்புகளையும் உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

கைத்தறி நெசவுத் துறையில் திறனை மேம்படுத்துவதன் மூலம், இந்தப் பெண்கள் மற்றும் அவர்களுடைய சமூகங்களில் நீண்டகாலத்துக்கு தொடர்ச்சியான மாற்றத்தை ஏற்படுத்துவதை இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

எதிர்காலத்தில், இவர்களின் தயாரிப்புகளை உலகளாவிய சந்தைக்கு விரிவுபடுத்துவதன் மூலம், அவர்களுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கவும், அதிக பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கவும் கனடிய தமிழர் பேரவை திட்டமிட்டுள்ளது.

எரிக் வால்ஷின் இந்த வருகைக்கு சான்றாக கைத்தறி மையத்தில் தென்னை மரம் ஒன்றும் அவரால் நட்டுவைக்கப்பட்டது.

# இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா நாளை

பல்வேறு துறைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா, ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே. எம். பாஸித் தலைமையில் நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறை மாவட்டம் ஒலுவிலில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்ப பீட கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. பிரபல ஊடக ஆளுமைகள் மற்றும் பல பிரபலங்கள் கலந்து கொள்ளும் இவ்விருது விழாவுக்கு பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம். எம். பாஸில், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய ஆய்வுகள் மற்றும் அரபு பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம். எஸ். எம். ஜலால்தீன் மற்றும் தினகரன், வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# திருச்செந்தூரில் கந்த சஷ்டி திருவிழா நவம்பர் 02 இல் ஆரம்பம்

### ஆறுதிருமுருகன் உரை நிகழ்த்துகிறார்



தமிழ்நாடு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கந்த சஷ்டி திருவிழா எதிர்வரும் நவம்பர் மாதம் 02ம் திகதி ஆரம்பமாகும் என்று திருக்கோயில் இணை ஆணையர், செயல் அலுவலர் சு. ஞானசேகரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

02ம் திகதி முதல் 7 திகதி வரை அதிகாலை 1.00 மணிக்கு நடை திறக்கப்பட்டு 1.30 மணியளவில் விஸ்வரூப தரிசனமும் தொடர்ந்து உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடைபெற்று காலை 5.30 மணிக்கு அருள்மிகு ஜெயந்தி நாதர் யாக சாலைக்கு புறப்படுதல் காலை 9





மணிக்கு உச்சி கால அபிஷேகமும் பிற்பகல் 3.30 மணிக்கு சாயரட்சை தீப ஆராதனை என்பனவற்றுடன் வழமையாக ஆன்மீக அருளுரைகளும் தங்கரத பவனி சண்முக அர்ச்சனை என்பன இடம் பெறும்.

சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகரும் ஆன்மீக அருளுரையாளருமான ஆறுதிருமுருகனின் ஆன்மீக சொற்பொழிவு நவம்பர் 02ம் திகதி முதல் 07 திகதி வரை தேவஸ்தான சண்முகவிலாஸ் கலையரங்கில் நடைபெறும். லண்டன் V. யோகநாதன் தனது தந்தையார் நினைவாக இந்த ஆன்மீக அருளுரையை ஏற்பாடு செய்து பல வருடங்களாக அனுசரணை வழங்கி வருகிறார்.

நவம்பர் 7 திகதி மாலை 4.30 மணிக்கு சுவாமி சூரசம்ஹாரத்திற்கு எழுந்தருளி சூரசம்ஹாரம் கடற்கரையில் நடைபெறும். 8ம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு அம்பாள் தபசு காட்சிக்கு புறப்படுவார். மாலை 6 மணிக்கு சுவாமிக்கும் அம்பாளுக்கும் மாலை மாற்று விழா நடைபெற்று அன்று இரவு திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.

**பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு**

பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில்,

வெளிநாட்டில் வாழும் முருக பக்தர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் போது அவர்களுக்கு ஆறுபடை வீடு திருக்கோயிலுக்கு



செல்ல சிறப்பு ஏற்பாடுகள் செய்து தருவது என்றும் திருவிழா மற்றும் சிறப்பு காலங்களில் வழிபாட்டிற்கு உதவுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இத்தீர்மானங்களுக்கு இணங்க வசதிகள் செய்ய வேண்டும் என்றும் இலங்கை வாழ் முருகப் பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை மிக திறம்பட நடாத்தியமைக்காக இலங்கை இந்து சமய கலாசார பணிப்பாளர் அனிருத்தன் மற்றும் இலங்கை வாழ் முருகப் பக்தர்கள் சார்பாக அமைச்சர் பி.கே. சேகர்பாபுக்கும் அறநிலையத்துறை ஆணையாளர் பி.என். ஸ்ரீதருக்கும் அறநிலையத் துறை உயர் அதிகாரிகளுக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

– எச். எச். விக்கிரமசிங்க

# ஆதரவற்று இருக்கும் மக்களின் வாழ்வில் ஒளிச்சுடராக டக்ளஸ் தேவானந்தாவுக்கு வாழ்த்து

அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றிய தலைவர் அதிவண. பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ கடந்த 30 ஆண்டுகளாக இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கிய முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, வீணை சின்னத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களில் தனது ஆளுமையை செலுத்தியுள்ளார்.

நான் ஒரு கிறிஸ்தவ மதகுரு என்ற அடிப்படையில் குறிப்பாக எமது கிறிஸ்தவ சமூகத்தினருக்கு அவர் ஆற்றிய சேவைகளை நன்கு அறிவேன்.

அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் அதிவணக்கத்திற்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த அரசியல் பேராளுமை இந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகின்றது. இதனை நாம் வரவேற்கின்றோம். பல்வேறு தோட்டங்களில் வாழும் எமது சமூகத்தினர் கொழும்பு மாவட்டத்தில் வறுமை கோட்டிலும் பின்தங்கிய நிலையிலும் வாழ்ந்து வருகிறார்கள்.



ஆதரவு அற்று இருக்கும் அவர்களுடைய வாழ்வில் ஒளிச்சுடராக விளங்கும் நோக்குடன் டக்ளஸ் தேவானந்தா வீணைச் சின்னத்தில் தனது அணியினரை களம் இறக்கியுள்ளார். கொழும்பில் வீணைச் சின்னத்தின் வெற்றி, கொழும்பு வாழ் மக்களுக்கு மிக பாரியளவு மாற்றத்தை ஏற்படுத்தி தரும் என்பதில் ஐயம் இல்லை.

வெறும் கதை அளக்கும் அரசியல்வாதிகள் வாழும் இந்த காலப் பகுதியில் டக்ளஸ் தேவானந்தா அனைத்து மத்திய அரசாங்கங்களிலும் அமைச்சராக பொறுப்பேற்று தன்னை நம்பிவந்த மக்களுக்குத் தொடர்ந்து தொண்டாற்றி வந்துள்ளார்.

இதனை நான் நேரடியாக அவதானித்துள்ளேன். கடந்த 10 ஆண்டுகளாக இலங்கை அரசியலில் பல அரசியல் தலைவர்களுடன் கைகோர்த்து நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்சி, இன, மத, மொழி பேதமின்றி அனைத்து மக்களுக்காகவும் பல அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார்.

வடமாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரேயின் இணைப்புச் செயலாளராக நான் இருந்த போது வடமாகாணத்திலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கும் குறிப்பாக கிறிஸ்தவ சமூகத்தினருக்கும் பல சேவைகளை ஆற்றியுள்ளேன்.

நான் அங்கு இருந்தபோது முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மக்களுக்கு கொடுத்த வாக்குகளை நிறைவேற்றி வந்ததையும் நேரடியாக அவதானித்துள்ளேன்.

அந்த அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்காக குறிப்பாக கிறிஸ்தவ சமூகத்தினருக்காக மற்றும் சகல இனத்தவருக்காக அரசியல் பணி செய்வதற்காக டக்ளஸ் தேவானந்தாவின் அணி போட்டியிடுகின்றது.

ஆகவே இந்த முறை வீணைச் சின்னத்தை நாம் அனைவரும் ஒருமித்து ஆதரிப்போம். டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் மற்றும் சமூகப் பணிகள் கொழும்பிலும் தொடர அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் சார்பில் அவரை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

# 15 வருட காலம் வைத்தியராக கடமையாற்றி வரும் ஆறுமுகன் ஜெயராஜன் தேர்தலில்



15 வருட காலம் வைத்தியராக கடமையாற்றி வரும் ஆறுமுகன் ஜெயராஜன் தேர்தலில் அழகான நீர்வீழ்ச்சிகளையும் கண்களைக் கவரும் மலைகளையும் பாம்பு போல் வளைந்து நெளிந்து செல்லும் வீதிகளையும் குளிரையும் மிதமான வெயிலையும் கொண்ட இயற்கை அழகுகள் செறிந்த ரம்மியமான இடம் மலையகம். இந்த மலையகத்தில் 200 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட ஒரு சமூகம் வாழ்ந்து வந்துள்ளது. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்ற இந்த சமுதாயத்தில் இருந்து இன்று பட்டதாரிகளும் டொக்டர்களும் பொறியியலாளர்களும் சட்டத்தரணிகளும் ஆசிரியர்களும் தொழில் அதிபர்களும் தோன்றி வருகின்றார்கள். இதே போல் இந்த சமூகத்தில் இருந்து அரசியல் தலைவர்கள் தோன்றி இருக்கிறார்களா? அதுவும் படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகள், டொக்டர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் அரசியல்வாதிகளாக தோன்றி இருக்கிறார்களா? இந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து அவர்களின் குறைகளை களைந்து அவர்களுக்கு விமோசனம் அளிக்கக்கூடிய அரசியல் தலைமைகள் இன்னும் தோன்றவில்லையா? இதெல்லாம் எப்படியோ தெரியவில்லை. ஆனால் இன்று முதல் முறையாக பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட ஒரு வைத்திய அதிகாரி முன்வந்துள்ளார். அவர் தான் ஆறுமுகன் ஜெயராஜன். இந்த ஆறுமுகன் ஜெயராஜன் யார்? இவர் என்ன செய்கிறார்? இவர் ஒரு வைத்தியராக கடமையாற்றுகிறார். மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இருப்பதால் இவருக்கு வைத்தியராக கடமையாறக் கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த வைத்தியத்துறையில் மக்களுக்கு தன்னால் இயன்ற வகையில் சிறப்பாக சேவையாற்றி வருகிறார்.

இவரது அப்பா, அம்மா வெலிஓயா தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். இவர்கள் ஹட்டன் பிரதேசத்தில் வசித்து வருகிறார்கள்.

15 வருட காலமாக வைத்திய சேவையில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகிறார்.

இவர், 1986ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வியை கற்க ஹட்டன் ஐலன்ஸ் கல்லூரியில் சேர்ந்துள்ளார். 1986 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை அதாவது உயர் கல்வி வரை ஹட்டன் ஐலன்ஸ் கல்லூரியிலேயே கற்றுள்ளார். அத்தோடு அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலை, லிந்துலை பிரதேச வைத்தியசாலை, லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அம்பகமுக பிரதேசம் ஆகியவற்றில் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.



இவர் வைத்தியத் துறைக்கான பட்டத்தினை பேராதனை பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். அப்போது பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற போது மலையக மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இவரிடம் புரையோடி இருந்தது. இதற்கான சந்தர்ப்பம், வாய்ப்பு கிடைக்காதா என்று காத்திருந்தார். அந்த வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே ஐக்கிய மக்கள் சக்தியின் மூலம் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இவர் பெற்றுள்ளார். இவர் ஒரு வைத்தியர் என்ற படியால் இவர், மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்துள்ளதோடு எதிர்காலத்தில் இம் மக்களுக்கு வைத்திய துறை சார்ந்த ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக இருக்கிறார். இதுவே இவரது கடந்த கால கனவாகவும் இலக்காவும் இருக்கிறது. அதற்கு இப்போது வாய்ப்பு கிடைத்துள்ளது. மக்கள் இவருக்கு இத்தேர்தலில் வாக்குகளை வழங்கி வெற்றி பெறச் செய்தால் நிச்சயமாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளையும் சமுக அந்தஸ்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் மும்முரமாக இருக்கிறார். பொருளாதார அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு தனது அரசியல் பயணம் உறுதுணையாக அமையும் என்று இவர் தீவிரமாக நம்புகிறார். இவரது இரத்தத்தில் இந்த எண்ணங்கள் ஊறிப்போக காரணமாக இருந்ததற்கு காரணம் இவரது தந்தையே. ஏனெனில் இவரது தந்தையும் ஒரு தொழிற்சங்கவாதிதான்.



200 வருடங்களாக வாழ்ந்த இம் மக்களுக்கு, இந்த நாட்டின் அபிவிருத்திக்காக உழைத்த இம்மக்களுக்கு, இன்னும் அடிப்படை வசதிகளைக் கூட எவரும் பெற்றுக் கொடுக்கவில்லை என்ற ஆதங்கம் இவரிடம் வேரூன்றி இருக்கிறது. இந்த கசப்பான உண்மைகள், இவரது மனதை உருத்திக்கொண்டே இருந்தன. தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை நினைவுபடுத்தி அவர்களின் வாக்குகளை பெற்று அரசியல் காய் நகர்த்தும் அரசியல்வாதிகள் இவர்களின் பிரச்சினைகளை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லவில்லை என்பது இவரது மனதில் உதித்த உண்மைகள். இவர்களை வெறுமனே தங்களுடைய சுயலாபத்திற்காக மட்டும் பயன்படுத்தி விட்டு இன்னும் கொத்தடிமைகளாகவே வைத்துக்கொள்ள நினைக்கின்றார்கள். எப்போது இம் மக்கள் உரிமை ரீதியாக சிந்திக்க போகின்றார்கள்? எவ்வாறு உரிமைகளை பெற்றுக் கொள்ளப் போகின்றார்கள்? இவற்றையெல்லாம் நன்கு அவதானித்த பின்னரே இதற்கு ஒரு விடிவை ஏற்படுத்தவேண்டும். இதற்காகவே தேர்தலில் போட்டியிட்டு இம்மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் சேவைகளை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு அரசியல் களத்தில் இறங்கி உள்ளார்.

பழைய அரசியல்வாதிகளை குறை கூறுவதில் எந்தவித புண்ணியமும் இல்லை. அவர்கள் சரியாக சேவை செய்திருந்தால் ஏன் மக்கள் எங்களைப் போன்ற புது முகங்களை தேடுகின்றாகள்? அது எங்களுக்கு பெரிய சவாலாக அமையாது. கடந்த காலங்களை எடுத்துக்கொண்டால் புதிய சிந்தனைகளுடன் மலையக மக்களுக்கு சேவை செய்யவில்லை. சம்பளம், வீட்டுரிமை, காணி உரிமை இதனை சொல்லி சொல்லியே காலம் கடத்தினார்கள். எதுவும் நடந்த பாடில்லை. எனவே தான் நாங்கள் இந்த மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவிகளை செய்ய வேண்டும் என்ற உணர்வோடு இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்துள்ளோம் என்று இவர் கூறுகிறார்.

அவர்களின் அனுபவம் எனக்கு ஒருபோதும் சவாலாக அமையாது. அதைப்பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றும் கூறுகிறார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது,

ஐக்கிய மக்கள் சக்தியை விரும்பியதற்கு காரணம் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்ற அநுரகுமார திசாநாயக்கவின் கொள்கைகள் கட்சியின் கொள்கைகள் மிகவும் வித்தியாசமானவை. அவருடைய செயல்பாட்டை விரும்பாத எவரும் இருக்க முடியாது. இவர்,அனைத்து மக்களுக்கும் சமமான அந்தஸ்தையும் மதிப்பையும் வழங்கக்கூடிய ஒருவர். அவரிடம் ஊழல், இலஞ்சம் துரோக மனப்பான்மை இல்லை. இவர், சிறந்த ஒரு மனிதன் என்று கூற வேண்டும். அத்தோடு அவரின் எளிமையான வாழ்க்கை வரலாறு, குடும்ப வரலாறு அனைத்தும் என்னை மிகவும் இருக்கின்றது. இதன் காரணமாகத்தான் இவர்களோடு சேர்ந்து எனது அரசியல் பயணத்தைத் தொடர நினைத்தேன். இதன் மூலம் தான் மக்களுக்கு நல்ல சேவையை வழங்க முடியும் என்ற நம்பிக்கையோடு தான் இந்த கட்சியின் ஊடாக எனது அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளேன். ஜனாதிபதியின் கரங்களை வலுப்படுத்தி மலையக மக்களுடைய பிரச்சினைகளை அவரிடம் சரியாக எடுத்துரைத்து இம்மக்களுக்கு நல்ல தீர்வினை பெற்றுக் கொடுப்பதே எனது நோக்கம் ஆகும். எனது நோக்கத்தை நிச்சயமாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு தான் இம்முறைத் தேர்தலில் இக்கட்சியில் போட்டியிடுகின்றேன். எமது நாட்டில் கடந்த 76 வருட காலமாக இலஞ்சம், ஊழல், சுரண்டல், வீண்விரயம் பாரியளவில் இடம்பெற்றுள்ளன. வரிப்பணம் சூறையாடப்பட்டுள்ளன. அதனை தடுத்து எமது மக்களுக்கு சுபிட்சமான வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எனது அவாவாகும்.

அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்க முடியாது. இன்று நாட்டில் உள்ள மக்கள் தெளிவாக உள்ளனர். அதேபோலதான் மலையக மக்களும். இன்று விழிப்புணர்வு கொண்டவர்களாக மாறி உள்ளனர். எமது நாடு முன்னேற வேண்டுமானால் கல்விமான்கள், புத்திஜீவிகள் அரசியல் தலைவராக வர வேண்டும் என்பதை தற்போது உள்ள இளைஞர், யுவதிகள் உணர்ந்துள்ளனர். அவர்களது எதிர்பார்ப்பு அதுவாக இருக்கின்றது. பழைய அனுபவம் கொண்ட அரசியல்வாதிகள் பழைய பல்லவியையே கூறிக் கொண்டிருக்கிறார்கள். இது மக்கள் மத்தியில் எடுபடாத ஒரு விடயமாக மாறிவிட்டது. இதன் காரணமாகவே புது முகங்களை தெரிவு செய்தால் நாட்டின் அபிவிருத்திக்கும் தனிநபர் அபிவிருத்திக்கும் பல்வேறு புது திட்டங்களை கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையில் தான் புது முகங்களை இவர்கள் எதிர்பார்க்கின்றனர். இன்னும் கூறுவதாக இருந்தால் பாதை பிரச்சினை, குடிநீர் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை கல்வி பிரச்சினை என எத்தனையோ பிரச்சினைகளை பட்டியல் இட்டுக் காட்ட முடியும். எமது மக்களும் நல்ல அனுபவ சாலிகள் என நினைத்து தான் வாக்களித்து அவர்களை மீண்டும் மீண்டும் அரசியல் தலைவர்களாக தெரிவு செய்கின்றார்கள். ஆனால் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைகள் இம்மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் சேவைகளை முன்னெடுத்து இருக்கிறார்களாக என்பதும் கேள்விக் குறியாகத்தான் இருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி பீடம் ஏறிய பின்பு கூறிய விடயங்களை உடனுக்குடன் செய்து வருகின்றது. குறிப்பாக ஊழலற்ற அரசை உருவாக்குதல், அரசியல் தலைவர்கள் செய்த ஊழலை கண்டு பிடித்தல், அரச சொத்துக்களை பாதுகாத்தல் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி வருவதோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்த மோசடிகள் பதுக்கி வைத்த அரச வாகனங்கள் அனைத்தையும் அரச உடமையாக்கியதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். இன்று எத்தனையோ பழைய அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடாமல் விலகி இருப்பதையும் உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும் என்றார்.



**மலையக மக்களுக்கு எவ்வாறான மாற்றத்தினை ஏற்படுத்த போகின்றீர்கள்?**

இம்முறை நடைபெற உள்ள தேர்தலில் நிச்சயமாக இன்னும் மாவட்டத்தில் அதிகமான வாக்குகளால் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும். இதில் மாற்றமில்லை. ஜனாதிபதி தோழர் அநுரகுமார திசாநாயக்கவோடு இணைந்து இம்மக்களுக்கு உரிமை ரீதியான விடயங்களை முன்னெடுப்பது தான் எங்களுடைய திட்டமாக இருக்கும். எமது மக்களும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்.

இவர்களின் பிரச்சினையும் சர்வதேச மட்டம் வரை பேசப்படும் வேண்டும். இவ்விடயங்களில் ஜனாதிபதி தலையிட்டு உடனடியாக தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பார். இதுவரை அபிவிருத்தி என்ற போர்வையில் ஏமாற்றமே இடம்பெற்றுள்ளது. வீடமைப்பாக இருக்கலாம், பாதையா இருக்கலாம், ஏனைய அபிவிருத்தித் திட்டங்களாக இருக்கலாம். இதில் அனைத்தும் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப நடைபெறவில்லை.

ஏதோ ஒரு காரணத்துக்காக தங்களின் இலாபத்தை கடந்து திட்டங்கள் முடிவெடுக்கப்பட்டு இருக்கின்றன. எதிர்வரும் காலங்களில் மக்களுடைய ஆலோசனைக்கு அமைவாகவும் அவர்களின் ஆசியை நிறைவேற்றக்கூடிய வேலைத்திட்டங்களை எங்களுடைய ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் என்பதனை உறுதியாக நான் கூறுகிறேன்.

எங்களுடைய கட்சியில் வேறுபாடு ஒன்றுமில்லை. எல்லோரும் ஒற்றுமையாகவும் பலத்துடன் செயல்பட்டு வருகின்றோம். எனது வெற்றிக்கு அனைவரும் உறுதுணையாக இருக்கின்றார்கள்.

நிச்சயமாக ஊழல் செய்தவர்களை சட்டத்திற்கு முன் கட்டாயமாக கொண்டு வருவேன். அத்தோடு மக்கள் அனைவரும் ஊழல் செய்தவர்களை அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

நாம் அவர்களை தண்டிப்பதை விட மக்களே இம்முறைத் தேர்தலில் தோல்வியடைய செய்வார்கள். அதனூடாக அவர்கள் செய்த ஊழல்களுக்கு கிடைத்த பரிசாக அது அமையும். எதிர்வரும் காலங்களில் மலையகத்தில் ஊழலற்ற இலஞ்சமற்ற நீதியான தூய்மையான அரசியல் இடம் பெறும் என்பதனை நான் கூறுகிறேன். இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களை ஐக்கிய மக்கள் சக்தி பெறும். பாராளுமன்றத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அமைக்கும். கடந்த காலங்களில் இடம்பெறாதவாறு அமைச்சு பதவிகள் அனைத்தும் பகிர்ந்து அளிக்கப்பட்டு திறமையானவர்களைக் கொண்டு மக்களுடைய சேவைகள் முன்னெடுக்கப்படும்.

**தற்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவை பற்றி கூறுங்களேன்.**

அவரைப் பற்றி கூறுவதாக இருந்தால், சிறந்த தலைவர். இன்று அவர் இரவு பகலாக எமது மக்களுக்காக சேவை செய்து கொண்டிருக்கிறார். இவருடைய திறமையை அவதானித்த வெளிநாடுகளில் உள்ள முக்கியஸ்தர்கள் தொடர்ச்சியாக இவரோடு கைகோர்த்து இலங்கைக்கு உதவி செய்வதற்கு முன்வந்துள்ளனர். இவருடம் ஆடம்பரமற்ற செயல்பாடுகள் உள்ளன. நாட்டை கட்டி எழுப்ப கூடிய ஆற்றல் மிக்க ஒரு தலைவர் தான் இவர்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு நேரடியாக தன்னுடைய ஆலோசனைகளை வழங்கி அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கின்றார். சாதாரண மனிதராக இருந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணக்கரு அவரிடம் எப்போதும் இருக்கின்றது. தேர்தல் பிரசாரத்தின் போது அவர் கூறிய ஒவ்வொரு விடயங்களையும் இன்று நிறைவேற்றி வருகின்றார். முதலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீண் செலவுகளை குறைப்பதாக கூறினார். அவர்கள் பாவிக்கும் வாகனங்களையும் செலவையும் குறைப்பதாக மேடைகளில் கூறினார். அதே போன்று தான் இன்று அரசியல்வாதிகள் அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்தியவற்றையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு அனைத்து ஊழல்களையும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றார். இவ்வாறான தலைவர்கள் தான் எமது நாட்டுக்குத் தேவை இன்று நாடு செழிப்படைய வேண்டுமானால் ஒரு தலைவனின் கையிலேயே தங்கி உள்ளது.

அதனை சிறப்பாக எமது தோழர் அநுரகுமார திசாநாயக்க செய்து வருகின்றார். அத்தோடு மலையக மக்கள் மீது அவர் அதிக கரிசனை கொண்டு உள்ளார். மக்களையும் தேசிய நீரோட்டத்தில் கலக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு உழைத்தவர்கள் மலையக மக்கள் அவர்களை கௌரவத்தோடு வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் இவரிடம் இருக்கின்றது.

எனவேதான் மக்கள் அதிக வாக்குகளை வழங்கி வெற்றி பெற செய்தார்கள். இவ்வாறான தலைவர்கள் எமது நாட்டுக்கு கிடைத்த பாரிய சொத்தாகும்.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

